Vol.3, Issue 5 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

அக்டோபர் 2020

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

# PRID யஷ் பால் தாஸ் — சில நினைவுகள்



*(இடதிலிருந்து)* PRID Y P *தாஸ், மஞ்சு,* PRIP K R *ரவீந்திரன்,* RIPE *சேகர் மேத்தா மற்றும் ராஷி* RI *தலைமையகத்தில்.*



2012 *பேங்க்காக் கன்வென்ஷனில் -* RI *தலைவராக பானர்ஜீ,* RI *இயக்குனர்களாக தாஸ் மற்றும் மேத்தா. பினோதா பானர்ஜீ மற்றும் மஞ்சு தாஸ் அவர்களும் உடன் உள்ளனர்.*



10



16



21



24



32



54

# உள்ளே


**10** **கொரோனாவுக்கு முந்தைய உலகத்திற்கு திரும்புவது தற்கொலைக்குச் சமம்: முகமது யூனூஸ்**
RC மெட்ராஸ் ஏற்பாடு செய்த ஓர் இணையக் கருத்தரங்கத்தில், இன்னும் மேம்பட்ட ஓர் உலகத்தை உருவாக்குவதற்கான புதிய வாய்ப்புகளை இந்த நோய்ப் பரவல் திறந்துள்ளது என்கிறார் நோபல் பரிசு வென்ற முகமது யூனூஸ்.

**16** **லூயியின் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்**
PRIP லூயி கியெவுடனான தங்கள் அன்பான நினைவுகளை PRIPகள் ராஜேந்திர சாபூ மற்றும் K R ரவீந்திரன் பகிர்ந்துகொள்கிறார்கள்.

**21** **யஷ்: ஒரு முழுமையான மனிதர்**
மிகப் பெரிய திட்டங்களை நிறைவேற்றிய நளினமான ரோட்டரியனான PRID யஷ் பால் தாஸ் அவர்களை PRIP ராஜேந்திர சாபூ, RIPE சேகர் மேத்தா, PRID அசோக் மகாஜன் ஆகியோர் வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.

**24** **பள்ளி மாணவர்கள் கல்வியிற்கு உதவ ஸ்மார்ட் ஃபோன்**
கொலாபா நகராட்சிப் பள்ளியைச் சேர்ந்த 51 மாணவர்களுக்கு இணைய வகுப்புகளில் கலந்துகொள்வதற்கான புத்தம்புதிய ஸ்மார்ட்ஃபோன்கள்

**28** **ஏழைகளுக்கு உணவு அளிக்கும் "ஆஹார் கிச்சன்"**
2018ல் அர்தேன்டு தொண்டு அறக்கட்டளை அறிமுகப்படுத்திய "ஆகார் சமையலறை"த் திட்டம் நாள்தோறும் 300 மக்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்குகிறது.

**32** **அகதியாக வந்த பெங்களூர் ரோட்டேரியனின் சாதனை**
இலவச அறுவைச்சிகிச்சைகளை நடத்தும் NHF மருத்துவமனையை இயக்கும் RC பெங்களூர் இந்திராநகர் உறுப்பினரான O P கன்னா.

**44** **திருநங்கைகளுக்கு நம்பிக்கை ஒளியேற்றும் ரோட்டரி**
பாலின அடிப்படையில் இணங்காத குழந்தைகளுக்கு நல்ல கல்வியை வழங்கும் நோக்கத்துடன் விடுதியை நடத்தும் RC திருச்சிராப்பள்ளி சக்தி.

**54** **காலத்தை வென்ற இசைமேதை கிஷோர் குமார்**
பின்னணிப் பாடகர் கிஷோர் குமாருடைய வாழ்க்கை, பணிகள், அவரை மிகச் சிறந்த பாடகராக ஆக்கியது என்ன?


**அட்டைப்படத்தில் :** நோபல் பரிசு வென்ற முகமது யூனூஸ்

## *லதா மங்கேஷ்கருக்கு மிகச் சிறந்த பாராட்டு*



*லதா மங்கேஷ்கரைப் பாராட்டி S R மது எழுதிய கட்டுரையைக் கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன். இந்தித் திரைப்பட இசையைப்பற்றி ஒரு கலைக் களஞ்சியத்துக்கு இணையான அறிவைக் கொண்டவர் அவர் என்பதை நான் அறிவேன். அவருடைய சமீபத்திய கட்டுரையில் இது பிரதிபலிக்கப் பட்டுள்ளது எனக்கு வியப்பளிக்கவில்லை. இந்தக் கட்டுரையில் ஒருபக்கம் லதா மங்கேஷ்கருடைய பாடும் பாணியைப் பற்றிய சிக்கலான அம்சங்கள் நிறைந்திருக்க, இன்னொருபக்கம், அதற்குப் பொருத்தமான ஓர் எழுத்துப் பாணியை அவர் பயன்படுத்தியுள்ளார். அவர் தொடர்ந்து இன்னும் பல கட்டுரைகளை எழுதவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.*

*D சம்பத்குமார், முன்னாள் ஆசிரியர்*
*தி இந்து பிஸினஸ் லைன்*

*லதா மங்கேஷ்கரைப்பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. லதாவைப் பற்றியும், அவர் தன்னுடைய குடும்பத்துக்காகச் செய்த தியாகத்தைப் பற்றியும் தெரியாத பல தகவல்கள் அழகாக விவரிக்கப்பட்டிருந்தன.*

*K N அல்வா, RC மங்களூர் நார்த் — D 3181*

### சுவை மிகுந்த ரோட்டரி செய்திகள்

RI தலைவர் மற்றும் RI இயக்குநர்களுடைய செய்திகள் உண்மையிலேயே ஊக்கம் தருகின்றன. இறால் தொழிலில் உள்ளவர்களுடைய சுமையைக் குறைப்பதற்காக DRDO ஜித்திகா-வைக் கண்டறிந்தது என்பதை அறிந்து மகிழ்ந்தோம். உண்மையாகவே ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கிறது.

A K சுகுணன், ரோட்டரி
பெங்களூர் இந்திராநகர் — D 3190

நான் 2003லிருந்து ரோட்டரி செய்திகளைத் தொடர்ந்து படிக்கிறேன். இதிலுள்ள பகுதிகள் மேலும் ஈர்ப்பவையாக, கூடுதல் ஆர்வம் அளிப்பவையாக ஆகியுள்ளன. இதில் வெளியாகும் கட்டுரைகள் ஊக்கம் அளிக்கின்றன.

ஜனார்தன நாயக்
RC காசர்கோட் — D 3202

RI தலைவர் ஹோல்கர் நாக் தன்னுடைய வருங்காலத் திட்டங்களைப் பற்றி மிக நன்றாகப் பேசுகிறார்; இனவாதம், நிறவாதம் பற்றிய ஆசிரியருடைய குறிப்பு என்னை மிகவும் ஈர்த்தது. ஒரு ரோட்டரி சங்கம் என்னவாக இருக்கவேண்டும் என்பதுபற்றிய RID பரத் பாண்ட்யாவின் பார்வைகள் பொருளுள்ளவை. இறால் தொழில் செய்யும் பெண்களுடைய துன்பங்களைக் குறைக்கும் ஜித்திகா என்கிற ஒரு புதிய கருவியை வழங்கிய RC காக்கிநாடாவின் உதவியைப்பற்றி அறிந்து மகிழ்ந்தோம்.

TCA ஸ்ரீனிவாச ராகவன் எழுதிய முடக்கத்தினாலும் நன்மைகள் உண்டு... என்ற கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். இப்போது உலகின் இரண்டாவது மிகப் பெரிய கட்டடமான தாய்பெய் 101 கோபுரத்தைப் பற்றியும் படித்து மகிழ்ந்தேன். நோய்ப்பரவலிலிருந்து தப்புவது மற்றும் உலகம் மீண்டும் நலம் பெறுமா? என்கிற கட்டுரைகள் வாசிப்பவர்களுக்குப் பயனுள்ளவை. சுவிட்சர்லாந்தில் பசுக்களுடன் நெடுந்தொலைவு நடத்தல் மற்றும் பாலாடைக்கட்டி செய்தல் என்ற கட்டுரை மிகவும் ஈர்த்தது. புகைப் படங்கள் மிகச் சிறப்பானவை.

ஃபிலிப் முலப்பொன் M T
RC திருவனந்தபுரம் சப்பர்ப் — D 3211

தமிழ்ப் பதிப்பில், சங்கத்தைக் குறிப்பிடுவதற்குச் சில இடங்களில் சங்கம் என்ற சொல்லும், மற்ற இடங்களில் “கிளப்” என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தயவு செய்து, எப்போதும் “சங்கம்’ என்ற சொல்லையே பயன்படுத்துங்கள்.

இப்போது வழக்கத்திலிருக்கும் இன வேறுபாடுகளைப் பற்றிய மிகச் சிறந்த ஆசிரியர் கட்டுரை மற்றும் உங்கள் கருத்துகளுக்கு நன்றி.

ஜம்புநாதன், RC அவினாசி — D 3202

RID 3210ஐச் சேர்ந்த DG M ஜோஸ் சக்கோ. அவருடைய மாவட்டத்திலிருக்கும் சங்கங்கள் இந்த ரோட்டரி ஆண்டின் முதல் நாளில் 1,500 மாணவர்களுக்கு மிதிவண்டிகளை நன்கொடையாக அளிக்கின்ற ஒரு திட்டத்தை அவர் தொடங்கிவைத்தார், ஏழை மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு இது ஒரு பெரிய ஊக்கமாக இருக்கும்.

N ஜகதீசன், RC எலுரு — D 3020

### MAT காபராஸ் பற்றிய நெகிழவைக்கும் அஞ்சலிக் கட்டுரைகள்

PRIP மேட் காபராஸ் பற்றி PRIP ராஜேந்திர சாபூ அவர்களுடைய அஞ்சலிக் கட்டுரை நன்கு அமைந்திருந்தது. ரோட்டரி உலகில் மேட் ஒரு புகழ் பெற்ற ஆளுமை. மிகவும் ஈர்ப்பை உண்டாக்கிய தன்னுடைய இந்தக் கட்டுரையில், மேட்டின் பல அம்சங்களையும் PRIP கல்யாண் பேனர்ஜி கையாண்டுள்ளார்.

நாராயண ஷக்ரிதயா
RC மும்பை பன்டப் — D 3141

மேட் காபராஸுக்கு PRIP பானர்ஜி எழுதிய அஞ்சலிக் கட்டுரை உண்மையில் நெகிழவைத்தது. ஓர் உண்மையான ரோட்டரியனும் நல்ல மனிதருமான அவருடைய

சேவைகளும் வாழ்க்கையும் மிக நன்றாக விவரிக்கப்பட்டிருந்தன.

Dr ஜெயசேகரன் V P
RC பய்யனூர் — D 3202

PRIP ஃப்ராங்க் டெவ்லினுடைய மரணம், உலகெங்குமுள்ள ரோட்டரியன்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தன்னுடைய சிறந்த சிரிப்பால் சொர்க்கத்தை ஃப்ராங்க் ஒளிரச் செய்வார் என்ற அஞ்சலிக் கட்டுரையில் PRIP கல்யாண் பானர்ஜி அவரைத் தொலைநோக்குள்ள, மிகச் சிறந்த ஆளுமையாக விவரித்துள்ளார். PRIPகள் ரே க்ளிங்கின்ஸ்மித், K R ரவீந்திரன் மற்றும் மார்க் மெலோனி ஆகியோர் எழுதியுள்ள அஞ்சலிக் கட்டுரைகள் உணர்வுமயமானவை.

அருண் குமார் டாஷ்
RC பரிபடா — D 3262

இனவாதம், சிவப்புத் தோலின் மீது நமக்கு இருக்கின்ற பெரிய ஆர்வத்தைப்பற்றி ஆசிரியர் ஒரு நல்ல ஆராய்ச்சி கட்டுரையை எழுதியுள்ளார்.

PRIP மேட் காபராஸ் PRIP ராஜேந்திர சாபூவுக்கு எழுதியுள்ள கடிதம் நெஞ்சைத் தொட்டது. பஞ்ச்குலாவிலிருந்து ஒரு கோவிட் போராளி என்ற கட்டுரை, கோவிட் நேரத்தில் மருத்துவமனையைக் கையாள்கிற டாக்டர் ரீதா கல்ராவின் “களைக்கூத்து நடை”யை விவரித்துள்ளது.

S முனியாண்டி, RC திண்டுக்கல்
கோட்டை — RID 3000

கடினமாக உழைக்கும் மீனவப் பெண்கள் ரோட்டரியின் வழியாக எப்படி உதவி பெறலாம் என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டு, RC காக்கிநாடாவின் ஜித்திகா திட்டம்.

அத்துடன், பள்ளிகளுக்கு 10,000 மேசை-பெஞ்ச்களை வழங்குதல், PHCக்கு லாபராஸ்கோபிக் இயந்திரத்தை நன்கொடையாக அளித்தல் மற்றும் 2013ன்போது சுவிட்சர்லாந்து சென்ற ஆசிரியருடைய பயணம் மற்றும் அவருடைய மிகச்சிறந்த துணிகரச்செயல் ஆகியவற்றை யும் இந்த இதழ் வெளிச்சம் போட்டுக் காட்டியது.

PDG Dr வரஹலு பசவா — D 3020

### ரோட்டரி ப்ளஸ் – வரவேற்கவேண்டிய ஒரு முயற்சி

ரோட்டரி பிளஸ் இணைய இதழுக்கான இணைப்பை எங்களுக்கு அனுப்பியதற்கு நன்றி. ரோட்டரி செய்திகள் என்பது, இந்திய ரோட்டரியின் நல்ல அடையாளமாகும்; தங்களுடைய திட்டங்கள் இந்த இதழில் இடம்பெறுவதை ரோட்டரி சங்கங்கள் ஒரு பெருமையாக உணர்கின்றன. அதே நேரம், எல்லாத் திட்டங்களையும் இதில் இடம் பெறச் செய்ய இயலாத படி ஆசிரியருக்கு இடப் பிரச்னை இருந்தது. ஆகவே, சங்கச் செயல்பாடுகளை இன்னும் விரிவாகப் பேசுகிற இணையப் பதிப்பு, வரவேற்கவேண்டிய ஒரு முயற்சியாகும்.

R ஸ்ரீனிவாசன், RC மதுரை
மிட்-டவுன் - D 3000

RID 3211, ஒரே நாளில் ஜூம் கூட்டத்தின் வழியாக 361 புதிய உறுப்பினர்களைச் சேர்த்தது உண்மையில் வியப்பளிக்கிறது.

கோவிடால் பாதிக்கப்பட்டவர் களைப் பாதுகாப்பதற்கு PDG Dr சந்திரசேகர் கோல்வேகர் ஆற்றியுள்ள பணி குறிப்பிடவேண்டியது.

S மோகன், RC மதுரை
வெஸ்ட் — D 3000

We welcome your feedback.
Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos, to
**rotarynewsmagazine@gmail.com**

Click on **Rotary News Plus**
in our website
**www.rotarynewsonline.org**
to read about more Rotary projects.

TCA ஸ்ரீனிவாச ராகவனுடைய LBW பத்தி ஆர்வமூட்டுவது, நகைச் சுவையானது மற்றும் கண்டிப்பாக மீண்டும் படிக்கவேண்டியது. இதை நான் என்னுடைய நண்பர்கள், உறவினர்களிடையே பகிர்ந்து கொள்கிறேன், பல விஷயங்களை நேரடியாகவும் நகைச்சுவையாகவும் சொல்கிற அவருடைய எழுத்துப் பாணியை அவர்கள் மிகவும் ரசிக்கிறார்கள். அவருடைய கட்டுரைகளின் ஒரு தொகுப்பை நூல் வடிவில் கொண்டுவரலாம்.

வசந்த் தூப்கர்,
RC புணே சஹவாஸ் — D 3131

### ரோட்டரிக்கு நிதியளிக்கப் பணத்தைச் சேமிப்போம்

மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் இணையக் கருத்தரங்குகளின் வழியாகச் சேமித்த பணத்தை ரோட்டரிக்கு நிதியளிக்கப் பயன்படுத்தவேண்டும் என்று நான் ஆலோசனை கூறுவேன்.

கோவிந்த் தாஸ் அக்ரவால்
RC பேலூர் — D 3291

ஆஸ்திரேலியக் கழிப்பறைப் போராளி மார்க் பல்லா, நாசிக்கில் 15 கழிப்பறைகளைக் கட்டுவதற்காக எடுத்துள்ள முயற்சி கள் பாராட்டப்படவேண்டியவை. ஏனெனில், பெண் குழந்தைகளுடைய கல்வியை இது மேம்படுத்தும்.

மே இதழில், “100 பாராட்ட வேண்டிய ஆண்டுகள்: RC கல்கத்தா” என்ற தலைப்பில் நினைவுகூரப் பட்டுள்ள RC கல்கத்தாவின் வரலாறு ஆர்வமூட்டுகிறது.

பொன் முத்தையன்
RC ஆடுதுறை — D 3000

உலக அளவிலான TRF வழங்கலில் இந்தியா தன்னுடைய 2வது இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது, US மட்டுமே இதில் இந்தியாவுக்கு முன்னால் உள்ளது என்பதை அறிந்து மிகவும் மகிழ்ந்தோம். வருங்காலத்தில் நாம் முதல் இடத்தைப் பிடிப்போம் என்று நம்புகிறேன்.

கேப்டன் V G தியோதர்
RC நாசிக் — D 3030



# புதிய சங்க அமைப்புகளை வரவேற்போம்

நாம் ரோட்டரிபற்றி மீண்டும் சிந்திக்கிறோம், அதை மறு உருவாக்கம் செய்கிறோம். இதனால், பல நிலைகளில் புதுமைச்சிந்தனையும் மாற்றமும் நிகழ்ந்துவருகின்றன. ரெபெக்கா ஃப்ரை-க்கு வயது 31, இதற்குள் அவர் 15 ஆண்டு ரோட்டரி அனுபவத்தைப் பெற்றுவிட்டார்; அவரிடமிருந்து நாம் நிறையக் கற்றுக்கொள்ளலாம். அவரின் அனுபவங்கள் இதோ :

உலகை மாற்றுவதற்கான ஒரு மிகச் சிறந்த தளமாக நான் ரோட்டரியைக் காண்கிறேன். RYLA மற்றும் ரோடராக்டில் எனக்குக் கிடைத்த அனுபவங்களின் வழியாகவும். இப்போது, ரோட்டரி சமூகத் தாக்க வலைப்பின்னல் என்கிற ஒரு புதிய மின் சங்கத்தின் பட்டயத் தலைவராகவும் நான் தலைமைப்பண்பு நுண்ணறிவுகளைப் பெற்றுள்ளேன்.

எங்கள் சங்கத்தில் 31 உறுப்பினர்கள், அனைவருடைய வயதும் 23லிருந்து 41க்குள், இந்தச் சங்கத்தைப் பதிவு செய்ததன்மூலம், எங்கள் உறுப்பினர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட ஒரு ரோட்டரி மாதிரியை வடிவமைக்க நாங்கள் முயல்கிறோம். ரோட்டரி தோழமைகள், செயல் குழுக்கள், பிற பன்னாட்டுக் கூட்டணிகள் ஆகியவற்றின் வழியாக நாங்கள் இணைப்புகளையும் பயன்படுத்திக்கொள்ள முயல்கிறோம்.

எங்கள் சங்கத்தைச் சேர்ந்த அனைவரும் மைக்ரோசாஃப்ட் டீம்ஸ் வழியாக இணையத்தில் சந்திக்கிறோம், எங்களுடைய திட்டங்களை இணையத்தில் நிர்வகிக்கிறோம், எங்களுக்கு ஆர்வமூட்டும் தலைப்புகளில் 24/7 உரையாடுகிறோம். இதனால் எங்கள் சங்கம் புவியியல் ரீதியில் ஒரே ஓர் இடத்துடன் கட்டுப்படவில்லை: எங்களில் பெரும்பாலானோர் ஆஸ்திரேலியாவில் இருப்பினும், ஜெர்மனி, இத்தாலி, மெக்சிகோ, தான்சானியா, அமெரிக்காவிலிருந்தும் உறுப்பினர்கள் எங்களிடையே உள்ளார்கள்.

எங்கள் சங்கத்தின் முக்கியமான ஓர் அம்சம், எங்கள் திட்டங்களின் தாக்கத்தை அளவிடுதல். இந்த ஆண்டு, “பிளாஸ்டிக் இல்லாத ஜூலை” திட்டத்தின்கீழ், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பதற்கான வழிகளை முன்னிறுத்தும் விழிப்புணர்வுப் பரப்புரை ஒன்றை நாங்கள் உருவாக்கினோம், 6,000க்கும் மேற்பட்டோருடன் இதுபற்றிப் பேசினோம். இது, தெளிவான தாக்கத்தைக் கொண்ட ஒரு திட்டம், யாரும் எங்கிருந்தும் இந்தத் திட்டத்தில் பங்கேற்கலாம்.

எங்கள் சங்கத்தின் வழியாக, ஒரு புதிய வகை ரோட்டரி அனுபவத்துக்காக மக்களை நாங்கள் ஒருங்கிணைக்கிறோம் என்பது எனக்குப் பெருமை அளிக்கிறது.

பெக்-கின் இந்தச் சங்கத்தைப் போலவே, ஒவ்வொரு சங்கமும் புதுமைச் சிந்தனையுடன் செயல்படலாம், அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது. ரோட்டரியில் மாற்றமானது அடிமட்ட நிலையில் நிகழ்கிறது, சங்கங்கள் மாற்றத்தை வழிநடத்துகின்றன, புதிய ரோட்டரி எப்படி இருக்கவேண்டும் என்று வரையறுக்கின்றன.

ரோட்டரியில் அனைத்து வகை மக்களையும் சேர்ப்பது, எல்லாருக்கும் கூடுதலாகப் பொருந்துகிற, கூடுதல் மகிழ்ச்சி தருகிற ஒன்றாக அதை ஆக்குவது ஆகியவற்றுக்கான கருவிகள் நம் விரல் நுனியில் உள்ளன. அந்தக் கருவிகளை நாம் இப்போதே பயன்படுத்துவோம், நமக்கும், நம்மை இன்னும் கண்டறியாத மக்களுக்கும் ரோட்டரி வாய்ப்புகளைத் திறப்பது எப்படி என்பதைக் காண்போம்.



ரெபெக்கா ஃப்ரை, RC சோஷியல் இம்பெக்ட் நெட்வர்க்.

Holger Knaack

**ஹோல்கர் நாக்**
RI தலைவர்



# நேர்மையான மனிதரை இழந்துவிட்டோம்

ரோட்டரியின் முன்னாள் இயக்குநர் யஷ்பால் தாஸின் அகால மரணச் செய்தி ரோட்டரி செய்தி அறக்கட்டளைக்கு (RNT) மிகப்பெரிய அதிரிச்சியையும், ஆழ்ந்த வேதனையையும் அளித்தது. RNT சார்பிலான கூட்டத்துக்கு யஷ்பால் வரும்போது ஒவ்வொரு முறையும் கூட்ட அரங்கிற்குள் நுழைவதற்கு முன்னதாக எங்கள் ஊழியர்களை சந்தித்து நலம் விசாரிக்க அவர் தவறியதே இல்லை. அவருடைய கனிவான பேச்சும், அமைதியான தோற்றமும் பலரது நட்பை அவருக்கு பெற்றுத்தந்தது. ரோட்டரிக்காக அயராது பாடுபட்டவர். அம்பாலா மருத்துவமனைக்கு அவரது பங்களிப்பை யாரால் மறக்க முடியும்? கார்வால் பிராந்தியத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளிகளை சீரமைத்து செம்மைபடுத்தியதில் அவரது சேவை மகத்தானது. காசநோய் ஒழிப்பிலும் அவரது பணி மறக்க முடியாதது. இப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதரை நாம் இழந்துவிட்டோம். அவரது மறைவு ஈடுசெய்ய முடியாதது. மறைந்த அந்த மாமனிதருக்கு அவருடைய குடும்பத்தார், நண்பர்கள், இந்தியா மற்றும் வெளிநாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான ரோட்டேரியன்களுடன் சேர்ந்து நாங்களும் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்.

பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒரு கருத்துக்கு யாராவது ஒருவர் முரண்பட்ட கருத்துக்களை கூறுவது மனித இயல்பு. அது அந்த நபரை தனித்து நிற்கச் செய்கிறது. அதன் மூலம் அவர் உச்சத்தை எட்டக்கூடும். அப்படிப்பட்ட ஒருவரை பற்றிய கதை அட்டைப்படத்துடன் முகப்புக் கட்டுரையாக வெளிவந்துள்ளது. எப்போதும் வித்தியாசமாக சிந்திக்கக்கூடியவர். உலகில் ஏழைகளாக இருப்பவர்கள் அடிப்படையில் நேர்மையானவர்கள் என்று சொன்ன துடன் ஏழைகளுக்கான சிறுதொழில் கடனுதவி திட்டத்தை முன்னெடுத்து வெற்றிகரமாக செயல்படுத்தியவர். அவர் வேறு யாரும் அல்ல. 2006ம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வென்ற வங்கதேசத்தைச் சேர்ந்த முகமது யூனூஸ். உலகில் சச்சரவுகள், மோதல்கள் உருவாகக் காரணம் வறுமைதான். அந்த வறுமை ஒழிந்துவிட்டால் மக்கள் அமைதியாக வாழமுடியும் என்பது அவரது கருத்து.

அதே முகமது யூனூஸ் அண்மையில் கொரோனா நோய் தொற்று தொடர்பாக சில முரண்பட்ட கருத்துக்களைக் கூறி அதை கவனத்தில் கொள்ளுமாறு எங்களிடம் கூறினார். மெட்ராஸ் ரோட்டரி சங்கம் சார்பில் நடைபெற்ற ஒரு மெய்நிகர் சந்திப்பில் பங்கேற்ற முகமது யூனூஸ், கொரோனா தொற்றுக்கு முந்தைய உலகத்திற்கு விரைவாக திரும்புவதுதான் உலகில் அனைவரின் பேச்சாக இருப்பது குறித்து அவர் ஆச்சரியம் தெரிவித்தார். கொரோனாவுக்கு முந்தைய உலகம் மிகவும் மோசமாக இருந்தது. சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக புவி வெப்பமடைதல், உலகில் உள்ள மொத்த செல்வத்தில் பெரும்பகுதி ஒரு சிலரின் கையில் குவிந்திருப்பது வறுமையும் பசிப்பிணியும் அதிகரித்திருப்பது மற்றும் வேலையின்மை நாளுக்குநாள் அதிகரித்து வருவதை அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று நாம் சரிவிலிருந்து மீள ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக அவர் நம்புகிறார். அவர் சொன்னதில் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் இந்தியாவில் பொது முடக்கம் திடீரென அறிவிக்கப்பட்ட போது லட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் எந்த விதமான உதவியும் கிடைக்காமல் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றார்கள். அவர்களுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. அவர்கள் முறைசாரா பிரிவைச் சேர்ந்தவர்கள் போல் தனித்துவிடப்பட்டனர். இவர்களை நாம் முறைப்படுத்த வேண்டும். இவர்களை சிறுதொழில் முனைவோர் என்று கூடச் சொல்லலாம். ஏனெனில் இவர்கள் ஒருவகையில் தங்களது திறமையை விற்றுப் பிழைக்க வீட்டை விட்டு வெளியேறி நகரங்களுக்கு வருகிறார்கள். பல்வேறு துறைகளில் தங்களின் சிறப்புத் தன்மையை வெளிப்படுத்து கிறார்கள். முறையாகப் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு என தொழிலாளர் நலத்துறை இருப்பதுபோல இவர்களுக்கு சிறுதொழில் முனைவோர் என்னும் புதிய துறையை உருவாக்குவது அவசியம் என்கிறார் யூனூஸ். இவர்களுக்கு என புதிய திட்டங்களையும் கொள்கைளையும் அரசு வகுத்து செயல்பட வேண்டும் என்கிறார் யூனூஸ்.

ஒவ்வொரு நாளும் கொரோனா நோய்த் தொற்றின் தாக்கத்தால் பாதிக்கப்படுவது ஏழைகளும் ஒடுக்கப்பட்ட மக்களும்தான். வேலையையும் வாழ்வாதாரத்தையும் இழந்து அவர்கள் தவிக்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு உலகம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான ரோட்டேரியன்கள், தங்கள் உயிரை துச்சமாக மதித்து நிவாரண உதவிகளைச் செய்து வருவது மனதுக்கு ஆறுதல் அளிக்கிறது.



ரஷீதா பகத்

## Governors Council


| | |
|---|---|
| RI Dist 2981 | DG R Balaji Babu |
| RI Dist 2982 | DG K S Venkatesan |
| RI Dist 3000 | DG A L Chokkalingam |
| RI Dist 3011 | DG Sanjiv Rai Mehra |
| RI Dist 3012 | DG Alok Gupta |
| RI Dist 3020 | DG Muttavarapu Satish Babu |
| RI Dist 3030 | DG Shabbir Shakir |
| RI Dist 3040 | DG Gajendra Singh Narang |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Rajesh Agarwal |
| RI Dist 3060 | DG Prashant Harivallabh Jani |
| RI Dist 3070 | DG CA Davinder Singh |
| RI Dist 3080 | DG Ramesh Bajaj |
| RI Dist 3090 | DG Vijay Arora |
| RI Dist 3100 | DG Manish Sharda |
| RI Dist 3110 | DG Dinesh Chandra Shukla |
| RI Dist 3120 | DG Karunesh Kumar Srivastava |
| RI Dist 3131 | DG Rashmi Vinay Kulkarni |
| RI Dist 3132 | DG Harish Motwani |
| RI Dist 3141 | DG Sunnil Mehra |
| RI Dist 3142 | DG Dr Sandeep Kadam |
| RI Dist 3150 | DG Nalla Venkata Hanmanth Reddy |
| RI Dist 3160 | DG B Chinnapa Reddy |
| RI Dist 3170 | DG Sangram Vishnu Patil |
| RI Dist 3181 | DG M Ranganath Bhat |
| RI Dist 3182 | DG B Rajarama Bhat |
| RI Dist 3190 | DG B L Nagendra Prasad |
| RI Dist 3201 | DG Jose Chacko Madhavassery |
| RI Dist 3202 | DG Dr Hari Krishnan Nambiar |
| RI Dist 3211 | DG Dr Thomas Vavanikunnel |
| RI Dist 3212 | DG P N B Murugadoss |
| RI Dist 3231 | DG K Pandian |
| RI Dist 3232 | DG S Muthupalaniappan |
| RI Dist 3240 | DG Subhasish Chatterjee |
| RI Dist 3250 | DG Rajan Gandotra |
| RI Dist 3261 | DG Fakir Charan Mohanty |
| RI Dist 3262 | DG Saumya Rajan Mishra |
| RI Dist 3291 | DG Sudip Mukherjee |


Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

# RI இயக்குனர்



## ஒருவருக்கொருவர்

2015ல், 193 உலகத் தலைவர்கள் ஐநாவின் ‘நீடித்திருக்கும் வளர்ச்சி இலக்குகள்’ என்ற 17 உயர்ந்த இலக்குகளை ஏற்றுக் கொண்டார்கள், 2030க்குள் வறுமையை நீக்க வேண்டும், சமநிலையின்மையை எதிர்த்துப் போராடவேண்டும், காலநிலை மாற்றத்தை நிறுத்தவேண்டும் எனத் தெரிவித்தார்கள். இப்போது, இந்த நோய்ப்பரவலால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் சமூகப் பொருளாதார முன்னேற்றம் சில ஆண்டுகள் பின்னுக்குச் சென்றுவிட்டது. Covid-19 சவால் ஓர் உண்மையை வலியுறுத்தியுள்ளது: இந்த இலக்குகளை எட்டவேண்டுமென்றால், அரசுகள், தனியார் துறை, குடிமைச் சமூகம், பொதுமக்கள் என எல்லாரும் தங்களுடைய பங்களிப்பைச் செய்யவேண்டும்: இந்த நெருக்கடியால், லட்சக் கணக்கானோர் வறுமையில் தள்ளப்பட்டுள்ளார்கள். உணவுப் பாதுகாப்பின்மை கூடுதலாகியுள்ளது. குழந்தைகள் மிகுந்த ஆபத்துக்கு ஆளாகிறார்கள். ஏனெனில், பல இடங்களில் வழக்கமான தடுப்பு மருந்து போடுதல் குறைந்து விட்டது அல்லது நின்றுவிட்டது. அவர்கள் வயிற்றுப்போக்கு, நிமோனியா போன்ற நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கான நலப் பராமரிப்பு உதவிகள் குறைந்துவிட்டன/இல்லவே இல்லை. இந்தப் பகுதிகள் பலவற்றில் ரோட்டரி ஆற்றவேண்டிய ஒரு பொறுப்பு உள்ளது.

நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்தும்வரை விஷயங்கள் மேம்படப் போவதில்லை. இதைச் செய்வதற்கான வழிகளில் ஒன்று, தடுப்பு மருந்து. ஆனால், பணக்காரர்/ஏழை, வளர்ந்த/வளர்கின்ற நாடு என்பதுபோன்ற பாகுபாடு இல்லாமல் தடுப்பு மருந்தை எல்லாருக்கும் சமமாக வழங்குவது ஒரு சவால்தான். அரசாங்கங்கள், கேட்ஸ் அறக்கட்டளை, மருந்து நிறுவனங்களுடன் ரோட்டரி நிகழ்த்திவரும் ஆதரவு உரையாடல் முயற்சிகளின்மூலம், தடுப்பு மருந்துகள் எல்லாருக்கும் சமமாக வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு ரோட்டரி பங்களிக்கலாம். வரும் மாதங்களில் சமூகப் பொருளாதார மேம்பாட்டில் கவனம் செலுத்துவதற்கு இது ஒரு மிக நல்ல வழியாக இருக்கும்.

அக்டோபர் 24, உலக இளம்பிள்ளைவாத நாள் ஆகும்.

ஆப்பிரிக்காவில் இளம்பிள்ளைவாதம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில், நாம் இன்னும் முனைப்போடு செயல்பட்டு முன்னேறவேண்டும், இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைக்கவேண்டும். நம்முடைய வருங்காலத் தலைமுறையினருக்கு நாம் விட்டுச்செல்லக்கூடிய மிகச் சிறந்த சொத்து, இளம்பிள்ளைவாதம் இல்லாத ஓர் உலகம்தான்.

எமர்சன் ஒருமுறை அழகாகச் சொன்னார், வளமான இதயம் இல்லாவிட்டால், செல்வம் என்பது அசிங்கமாகிவிடும். வளம் என்பது பணத்தையோ பொருட்களையோ குறிக்கவில்லை; அது ஒரு மனநிலை. நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என்பது முக்கியமில்லை, நம்மிடம் உள்ளதைக் கொண்டு நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம். ரோட்டரி, சேவைக்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கிற இந்த நேரத்தில், நம் இதயங்களின் வளத்தைப் பயன்படுத்தி, இளம்பிள்ளைவாத நிதியை ஆதரிப்போம்.

**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்

## வறுமையை அகற்ற நீடித்திருக்கும் தீர்வுகள்



கிட்டத்தட்ட 800 மில்லியன் மக்கள் ஒரு நாளைக்கு $1.90ஐவிடக் குறைவான தொகையில் வாழ்கிறார்கள். வறுமையை அகற்ற நீடித்திருக்கும் தீர்வுகளை வழங்குவதற்காக ரோட்டரியன்கள் பணியாற்றவேண்டும்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை, சமூக முன்னேற்றத்தைத் தூண்டும் விசைகள், திறன்கள் மற்றும் அறிவு. கோவிட்-19 நேரத்தில் பல தொழில்துறைகள் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் போராடிக்கொண்டிருக்கின்றன. பல நிறுவனங்கள், தங்களுடைய தொழில் துறையில் தொடர்ந்து இயங்கவேண்டும் என்பதற்காகப் புதிய ஆட்களைச் சேர்க்காமல் இருக்கிறார்கள்.

பன்னாட்டளவில், கிட்டத்தட்ட 74 மில்லியன் இளம் வயதுவந்தோர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். நாம் அவர்களுக்குத் திறன்களை, தலைமைப்பண்புகளை, பணி வாய்ப்புகளை உருவாக்கவேண்டும். அப்போலோ மெட் ஸ்கில்ஸுடன் இணைந்து “சக்ஷம் பாரத்” என்ற திறன் வழங்கும் திட்டத்தை வெள்ளோட்ட அடிப்படையில் அறிமுகப்படுத்தியுள்ளது, இதில் மக்களுக்குத் துணை மருத்துவப் பணியாளர்களாகத் திறன் அளிக்கப்படும், உறுதியான வேலை வாய்ப்புகள் வழங்கப்படும்.

**ஒரு கிராமத்தைத் தத்தெடுங்கள்:** ஒவ்வொரு சங்கமும் ஒரு கிராமத்தைத் தத்தெடுக்கவேண்டும், அங்கு அடிப்படைக் கல்வி, நீர், தூய்மை, நலன் மற்றும் பிற வசதிகளை மேம்படுத்த உதவவேண்டும், அதன்மூலம் அந்தக் கிராமம் தானே இயங்குவதற்கு உதவவேண்டும்.

**இளம்பிள்ளைவாதத்தை நிறுத்துவோம்:** உலகிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதாக நாம் உறுதியெடுத்துள்ளோம், இந்தப் போரில் முழு வெற்றி அடையவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ரோட்டரியனும் தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். அக்டோபர் 24, உலக இளம்பிள்ளைவாத நாள். இதில் பங்கேற்றுக்கொள்ளுங்கள், நிதி திரட்டல்கள், நிகழ்ச்சிகள், பேரணிகள், விழிப்புணர்வுத் திட்டங்கள் ஆகியவற்றின் வழியாக இந்தச் செய்தியைப் பரப்புங்கள், இவற்றின்மூலம் நாம் எல்லாரும் சேர்ந்து போலியோவை அகற்றுவோம்.

PRID யஷ் பால் தாஸின் இறப்பு யாரும் எதிர்பார்த்திருக்காத அதிர்ச்சியாகும். இதன்மூலம் நாம் ஒரு ரோட்டரி போராளியை, ஓர் அன்பான மற்றும் பாசமுள்ள குடும்ப மனிதரை, நம்மில் பலருடைய ஓர் அன்பான நண்பரை இழந்துவிட்டோம். கடவுளுக்கும் நல்ல மனிதர்கள் தேவை என்பது இப்போது உறுதியாகிவிட்டது. இந்தப் பெரிய இழப்பைத் தாங்கிக்கொள்ளும் வலிமையைக் கடவுள் அவருடைய குடும்பத்துக்கு அளிப்பார் என்று நம்புவோம்.

**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


### Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPE Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |
| RIDE A S Venkatesh | RI Dist 3232 |

**Executive Committee Members (2020–21)**

| | |
|---|---|
| DG Sanjiv Rai Mehra<br>Chair – Governors Council | RI Dist 3011 |
| DG Sudip Mukherjee<br>Secretary – Governors Council | RI Dist 3291 |
| DG Sangram Vishnu Patil<br>Secretary – Executive Committee | RI Dist 3170 |
| DG Prashant Harivallabh Jani<br>Treasurer – Executive Committee | RI Dist 3060 |
| DG S Muthupalaniappan<br>Member – Advisory Committee | RI Dist 3232 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

# கொரோனாவுக்கு முந்தைய உலகத்திற்கு திரும்புவது தற்கொலைக்குச் சமம்: முகமது யூனூஸ்

ரஷீதா பகத்



கொரோனாவுக்கு முந்தைய உலகத்திற்கு நாம் திரும்பிச் செல்ல வேண்டியதில்லை. சமூக வணிகம்தான் இன்றைய தேவை. இந்த வகையில் ரோட்டரி முக்கிய பங்காற்ற முடியும் என்று வலியுறுத்துகிறார் நோபல்பரிசு பெற்ற முகமது யூனூஸ்.

நாம் ஏன் கொரோனாவுக்கு முந்தைய உலகத்திற்கு திரும்பிச் செல்ல விரும்புகிறோம்? என்பதுதான் எனது கேள்வி. அது தேவைதானா? இந்த தொற்றுநோய் காலத்தில் நாம் விட்டுச் சென்ற உலகம் மகிழ்ச்சிகரமாக இல்லை, ஆனால், பயங்கரமாக இருந்தது. உலகமே அழிந்துவிடும்போல் இருந்தது.

அண்மையில், சென்னை ரோட்டரி சங்கம் மெய்நிகர் நிகழ்ச்சி முறையில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் நோபல் பரிசு வென்ற முகமது யூனூஸ் சொன்ன வார்த்தைகள் இவை. அவரது இந்தப் பேச்சு அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. கொரோனா தொற்று பரவலுக்கு முன்னர் நாம் அதிவேக ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தோம். அந்த ரயில் புல்லட் ரயில்போல் அழிவை நோக்கிச் செல்வதுபோல் இருந்தது. ஆனால், நல்லவேளையாக கொரோனா தொற்று அதை தடுத்து நிறுத்திவிட்டது. அது மட்டுமல்ல, நாம் சரிவிலிருந்து மீளவும் வாய்ப்பு கொடுத்துள்ளது. இப்போது எனது கேள்வி எல்லாம் மீண்டும் அந்த ரயிலில் ஏறி அழிவை நோக்கிச் செல்ல வேண்டுமா அல்லது கொரோனாவால் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி வேறுதிசையில் நாம் பயணிக்க வேண்டுமா என்பதுதான்.

கொரோனாவுக்கு முந்தைய உலகத்திற்கு எப்படி விரைவாக திரும்புவது என்பதுதான் உலகில் அனைவரின் பேச்சாகவும் இருந்தது. அதனால்தான் இந்த கேள்வியை கேட்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது என்கிறார் யூனூஸ்.

**மூன்று காரணங்கள்:** கொரோனாவுக்கு முன்னர் தாங்கள் வசித்து வந்த உலகத்திற்கு விரைந்து செல்லவேண்டும் என்ற ஆர்வம் அரசாங்கங்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பெருவணிகர்களிடம் இருந்தது எனக்கு மிகவும் கவலை அளித்தது. பேரழிவிலிருந்து மக்களை விடுவிக்க அரசாங்கங்களும் லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான டாலர்களை செலவிட முன்வந்தன.

நாம் பேரழிவை நோக்கிச் சென்றோம் என்பதற்கு மூன்று காரணங்களை அவர் முன்வைத்தார். முதலாவது புவி வெப்பமடைதல் மூலம் ஏற்படும் அச்சுறுத்தல் காரணமாக இன்னும் 30 ஆண்டுகளில் உலகம் அழிந்துவிடும் என்பது. இந்த பேரழிவிற்கு அதிக காலம் இல்லை என்பதை இன்றைய இளைய தலைமுறையினர், பழைய தலைமுறையை அதாவது தங்களது பெற்றோர், தாத்தா-பாட்டிகள் மற்றும் என்போன்றோரை பொறுப்பற்றவர்கள் என்று பேசுவதிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். உலகின் மோசமான நிலைகளுக்கு நீங்கள்தான் காரணம். நாங்கள் வளர வேண்டியவர்கள். ஆனால், எங்களுக்கு எதிர்காலம் இருப்பதாகத் தெரியவில்லை என்று பேசி ஏதோ அவர்களின் எதிர்காலத்தை நாம் சுரண்டிவிட்டதாக குற்றஞ் சாட்டுகிறார்கள்.

இரண்டாவது காரணம் என்னவெனில் உலகில் உள்ள செல்வங்களில் பெரும்பகுதி ஒரு சிலரின் கையில் குவிந்துள்ளது. இங்கேயும் தொற்று நோய் உலகின் செல்வத்தை மிகவும் சமமாகப் பகிர்வதற்கான வாய்ப்பை வழங்கியது.

உலகம் பேரழிவை நோக்கிச் செல்வதற்கான மூன்றாவது காரணம் அதிகரித்து வரும் வேலையின்மை. இதை மிக முக்கியமான ஒரு விஷயமாக எழுப்பிய யூனுஸ், இந்த முறை வேலையின்மை குறித்த உரையாடல் வேறுபட்டிருந்ததை சுட்டிக்காட்டினார். பொதுவாக, பேச்சு வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையைப் பற்றியதாக இருக்கும், ஆனால் இந்த தொற்றுநோய் காலத்தில் வேலையில் இருந்தவர்கள் தங்கள் வேலைவாய்ப்பை இழந்தது பற்றிதான் பேச்சு இருந்தது. அடுத்த 15 ஆண்டுகளில் ஒரு பில்லியன் மக்கள் வேலையில்லாமல் இருப்பார்கள் என்றெல்லாம் கணிப்புகள் வெளியிடப்பட்டன.

செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மனிதர்களுக்கான வேலையை இயந்திரங்கள் செய்வதன் மூலம் பேரழிவை நோக்கி செல்கிறோம். இந்த மூன்று முக்கிய காரணங்களை கணக்கில் எடுத்துக் கொண்ட யூனுஸ், தொற்றுநோய்க்கு முந்தைய உலகத்திற்குத் திரும்புவது தற்கொலை செய்து கொள்வதற்கு சமம் என்றார்.

**தீர்வுகள் உள்ளன:** இந்த பேரழிவைத் தடுக்க, தவிர்க்க மற்றும் தலைகீழாக மாற்றுவதற்கான தீர்வுகள் உள்ளன என்று கூறிய அவர், ஆனால், அதற்கு நாம் தயாராக இல்லை. ஏனெனில் நாம் சௌகரியமான நிலையில் இருப்பதாக நினைக்கிறோம். புவிவெப்பமடைதலைத் தடுப்பது எப்படி, நாட்டின் செல்வம் ஒரு சிலரின் கையில் குவியாமல் தடுப்பது எப்படி, வேலையின்மையை போக்குவது எப்படி என்பது நமக்குத் தெரியும். ஆனால், அதைச்செய்ய நாம் விரும்பவில்லை என்பதுதான் உண்மை.

பேரழிவை நோக்கிச் செல்லாமல் முன்னேறுவதற்கான வழிகளில் ஒன்று நன்றாக சிந்தித்து நமது வணிகத்தை மறுவடிவமைப்பது. தற்போது வணிகம் தவறான வழியில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று நான் சொல்கிறேன்.

ஏனென்றால் எல்லா மனிதர்களும் சுயநலம் என்ற ஒரே கொள்கையின் அடிப்படையில் செயல்படுகிறார்கள். அதாவது ஒவ்வொருவரும் வணிகத்தை சுயநலத்துடனும் லாபநோக்கின் அடிப்படையிலும் வடிவமைக்கிறார்கள் என்பதுதான் அதுதான் இன்றைய வணிகத்தின் சாராம்சம்.

இந்த வகையான வணிகம் “மனிதகுலம் தவறாக சித்தரிக்கப் படுவதை அடிப்படையாகக் கொண்டது. ஒரு மனிதன் 100 சதவீதம் சுயநலவாதியாக இருக்கமுடியாது. அப்படியிருந்தால் ரோட்டரி பிறந்திருக்காது, உலகம் முழுவதும் பரவியிருக்காது. ரோட்டரி இன்று இருக்கிறது என்று சொன்னால், பிறருக்கு நீங்கள் ஏதாவது செய்ய விரும்புகிறீர்கள் என்று அர்த்தம். நாம் சுயநலவாதிகள், அதிலிருந்து வெளியேறிச் செல்ல விரும்பவில்லை என்ற பொருளாதாரக் கோட்பாட்டை நாம் அங்கீகரித்துதான் ஆக வேண்டும். நாம் சுயநலவாதியாக இருக்கலாம், நமது முன்னேற்றத்தில் மட்டுமே அக்கறை கொண்டவர்களாக இருக்கலாம், ஆனால், அதேநேரத்தில் பிறரது நலத்திலும் நாம் அக்கறை கொள்ளவேண்டும். அதற்காக பிறந்தது தான் ரோட்டரி.

இதை நாம் ஏற்றுக் கொண்டு விட்டால் இரண்டு வகையான வணிகத்தை நாம் நடத்த வேண்டும். ஒன்று ஏற்கெனவே நம்மிடம் உள்ளது. அதாவது லாபநோக்கிலான வணிகம். இரண்டாவது பொருளாதார வல்லுநர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆனால், அதை ஏற்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதை சமூக வணிகம் அல்லது பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொள்ளாமல் மற்றவர்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான வணிகம் என்றுகூட சொல்லலாம். முதல் வணிகம் அதிகபட்ச லாபம் என்ற நோக்கத்தில் செய்யப்படுவது.


*முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பேரக் ஒபாமா, முகமது யூனூஸ் அவர்களை வெள்ளை மாளிகையில் 2009ம் வருடம் கௌரவிக்கிறார்.*

இரண்டாவது அதிலிருந்து மாறுபட்டது. அதாவது தர்மம் செய்வதைவிட பயனளிக்கக்கூடியது. ஏனெனில் தர்மம் செய்யும் பணம் நல்லகாரியமாக இருக்கலாம். ஆனால், திரும்பிவராது.

அதனால்தான் அவர் சமூக வணிகம் என்கிற யோசனையை ஆதரித்தார். இந்த வணிகத்தில் பணம் சிறிது லாபத்துடன் திரும்பிவந்து விடுகிறது. அந்த பணத்தை நாம் மீண்டும் மீண்டும் முதலீடு செய்வதன் மூலம் நல்லது செய்ய முடியும். இந்த இடத்தில் RIPE சேகர் மேத்தாவின் உரையை நினைவுகூர்ந்தார். ரோட்டரி இந்தியா மூலம் நாட்டில் குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்த முடிகிறது. சமூக வணிக திட்ட முறையை நாம் பின்பற்றினால் சமூக நலத்திட்டத்துக்காக செலவிடப்படும் தொகையை மறுசுழற்சி செய்யமுடியும் என்றார். ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு நீங்கள் குடிநீர் வசதி செய்துகொடுக்கிறீர்கள் எனில் அதற்காக அவர்களிடமிருந்து ஒரு சிறிய தொகையை கேட்டுப் பெறலாம். அந்தப் பணத்தை மறுசுழற்சி முறையில் திட்டங்களுக்குச் செலவிடலாம். ஒவ்வொரு முறையும் நிதி திரட்ட வேண்டிய அவசியம் இல்லை. இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் நமது சமூக வணிகத்தை பெரிய அளவில் விரிவு படுத்தலாம்.

நல்ல தரமான கல்வி கற்றால்தான், நல்ல வேலை கிடைக்கும் என்று நாம் சொல்கிறோம். ஒவ்வொரு மனிதனுக்கும் வேலைதான் இலக்காக இருக்கிறது. ஆனால், நான் சொல் கிறேன், நாம் வேலைசெய்வதற்காக பிறக்கவில்லை, நாம் வேலை கொடுக்கும் தொழில்முனைவராக பிறந்திருக்கிறோம். ஆனால், நமது கல்வி முறை அதற்கான வாய்ப்பு களைத் தரவில்லை. எல்லோரையும் வேலைதேடுபவர் போல உருவாக்கு கிறதே தவிர இளைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான கதவை அடைத்துவிடுகிறது என்பது தான் உண்மை என்கிறார் யூனுஸ்.

ஆனால் இளம் தொழில் முனைவோரை உருவாக்கும் வகையில் கல்வி முறை மாற்றியமைக்கப்பட்டவுடன், அடுத்ததாக அவர்களுக்கு உதவ நிதி அமைப்பு பொருத்தமானதாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்திய துணைக் கண்டத்தில் நமது தொழில்முனைவோரைப் பற்றி நாம் பெருமிதம் கொள்கிறோம் என்றாலும், தொழில்முனைவோர் என்ற வார்த்தையின் வரையறை மாற்றப்பட்டு மேலும் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

லட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் திறமைகளை விற்று பிழைக்க வீடுகளை விட்டு வெளியேறுகிறார்கள், சாலைகளில் தங்கள் பொருட்களை விற்கிறார்கள், அல்லது பல்வேறு வேலைகளில் தங்களின் சிறப்புத் திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், கொரோனா அச்சுறுத்தலுக்குப் பின் புலம்பெயர் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் வீடு திரும்பியதைக் கண்டோம். இது எந்த வகையான பொருளாதாரம்? இவர்களை அப்படித்தான் நடத்துவதா?

ரோட்டரி ஆதரிக்க வேண்டும்: “முறைசாரா துறையின் முழு பொருளாதாரமும் சிறு தொழில்முனைவோர் துறையாக அங்கீகரிக்கப்பட வேண்டும்’’ என்று யூனுஸ் பரிந் துரைத்தார். நீங்கள் அவ்வாறு செய்தால், உங்களுக்கு நிறைய விதிகள், கொள்கைகள் மற்றும் செயல் பாடுகள் தேவைப்படும், ஏனென்றால் நீங்கள் அதை முறை சாரா துறை என்று அழைக்கும் வரை, அதைப் பற்றி உங்களுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை, ஆனால், அதைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் இருக்கிறது. ஆனால் அவர்கள் ஏன் அப்படி இருக்க வேண்டும்? அவர்கள்தான் நம் நாட்டில் தொழில்முனைவோரை தாங்கிப்பிடிக் கிறார்கள். எனவே நாம் சிறுதொழில் முனைவோர் என்ற யோசனையை நாம் அறிமுகப்படுத்த வேண்டும், அந்த அமைப்பை ஆதரிக்க வேண்டும்.

சிறு தொழில் முனைவோருடன் ரோட்டரி கூட்டாளியாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஆதரவளித்து நிதியுதவி செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றார் நோபல் பரிசு பெற்ற யூனுஸ்.

மைக்ரோஃபைனான்ஸின் எதிர்காலம் என்ன? இப்போதுள்ள மிகப்பெரிய நெருக்கடியிலிருந்து அது தப்பிக்க முடியுமா? என்ற கேள்வியைக் கேட்டபோது, யூனுஸ் புன்னகையுடன், “இந்தியாவின் மக்கள் தொகையில் 65–70 சதவீதம் பேர் முறைசாரா துறையின்கீழ் வருகிறார்கள், அவர்கள்



தங்களைத் தாங்களே, கவனித்துக் கொள்கிறார்கள். சொந்தமாக வாழ்கிறார்கள் மற்றும் அவர்களின் நிதித் தேவை கடன்களைப் பொறுத்தது. ஒருவகையில் அது பெரியதாகவும் இருக்கலாம் அல்லது சிறியதாகவும் இருக்கலாம்.

அவர்கள் கடினமாக உழைத்து சம்பாதித்தாலும் அதில் பெரும்பகுதி கடன்களை திருப்பிச்செலுத்தவே சரியாக இருக்கிறது. இந்த நிலையில் அவர்களுக்கு உதவக்கூடிய ஒரு நிதித்திட்டத்தை நாம் ஏன் உருவாக்கக் கூடாது?

ஏழைகளுக்கு வங்கி சாத்தியமே: முன்பெல்லாம் நாம் ஏழை மக்களுக் குக்காக வங்கி நடத்தமுடியாது என்று சொல்லுவதுண்டு. ஆனால், இன்றைய நாளில் அது வங்கேதசம், இந்தியா போன்ற நாடுகளில் சாத்தியம் தான் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. ஆனாலும் இது இன்னும் லட்சக்கணக்கான மக்களைச் சென்றடையவில்லை. இத்தகைய சூழலில் யாரும் விடுபடாத நிலையில் ஒரு நிதிக்கேந்திரத்தை நாம் ஏன் உருவாக்கக்கூடாது. நாம் அப்படிச் செய்தால், கடன் தொல்லை என்ற சுறாமீன் காணாமல் போய்விடும். நிச்சயம் நம்மால் அதைச் செய்ய முடியும்.

சிறுகடன் என்பது கிட்டத்தட்ட முறையான வங்கி போன்றதுதான். அதை நாங்கள் வங்கதேசத்தில் சிறிய அளவில் தொடங்கினோம். பின்னர் அது பெரிய அளவில் இந்தியாவில் பரவியது, பின்னர் அது உலகளாவிய நிகழ்வாக மாறிவிட்டது. நிதித் துறையில் மற்றவைகளுடன் ஒப்பிட்டால் இது மிகச் சிறியது. இதற்கு என தனி கொள்கை எதுவும் கிடையாது. சிறுதொழில் முனைவோர்க்கு என அரசு ஏன் தனி அமைச்சகத்தை உருவாக்கக்கூடாது. தொழிலாளர் நலனுக்கென தொழிற் துறை இருக்கும்போது சிறுதொழில் முனைவோர்க்கு ஏன் தனி துறை இருக்கக்கூடாது? என்று கேட்டு நான் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளேன். சிறு தொழில்கள் எண்ணிக்கையில் அதிகம் மட்டுமல்ல அவை சக்தி வாய்ந்தவை. இதற்கென தனி துறை உருவானால் அதை கட்டமைக்கவும் அவற்றின் வசதிக்காக சிறுதொழில்

## ரோட்டரி வித்தியாசமாக செயல்பட முடியும்

*கொவிட்-19 நமக்கு சில தைரியமான முடிவுகளை எடுக்க நமக்கு வாய்ப்பளித்துள்ளது என்கிறார் முகமது யூனூஸ். இந்தப் பணியில் முக்கிய பங்கேற்க ரோட்டரிக்கு அவர் அழைப்புவிடுத்தார். ரோட்டரி மீதான தனது மரியாதையையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்திய அவர், ரோட்டரியுடன் தமக்கு நீண்டகால உறவு இருப்பதை வெளிப்படுத்தினார். ஒரு கால கட்டத்தில் ரோட்டரியில் பல நிலைகளில் ஒன்றாக இணைந்து பணியாற்றியதைக் குறிப்பிட்டார். கொரோனாவுக்குப் பிந்தைய உலகில், இந்தியாவிலோ அல்லது துணைக் கண்டத்திலோ மட்டுமல்ல, உலக அளவிலும் உங்களுக்கு ஒரு பெரிய பங்கு உண்டு.*

*“பழைய கருத்துக்களை மறுபரிசீலனை செய்வதிலும் மறுவடிவமைப்பு செய்வதிலும் ரோட்டரி முக்கிய பங்காற்ற முடியும். கொரோனாவுக்கு முந்தைய காலத்துக்கு நாம் திரும்பவேண்டியதில்லை என்பதை நாம் ஏற்றுக்கொண்டுவிட்டால் புதிய உலகை நோக்கி நாம் எங்கு செல்வது அல்லது எப்படிச் செல்வது என்ற கேள்வி எழும். புவி வெப்பமடைதல், ஒரு சிலரிடம் செல்வம் குவிதல், வேலையின்மை அதிகரித்தல் என்ற நிலைக்கு மாறாக செல்வம் ஓரிடத்தில் குவிவதை தடுக்கும், வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் உலகை நோக்கி நாம் செல்ல வேண்டும்.*

*இதை எப்படிச் செய்யவேண்டும் என்பது நமக்குத் தெரியும். அதற்கான வழிகள் இல்லாமல் இல்லை. தாவரங் களிலிருந்து எப்படி எரிபொருள் பெறுவது என்பது நமக்குத் தெரியும். ஆனால், அதைச் செய்ய நாம் விரும்பவில்லை. பிளாஸ்டிக் பயன்பாடு மோசமானது என்று நமக்குத் தெரியும். அதிலிருந்து எப்படி விடுபடுவது என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், அதைச் செய்யமாட்டோம். செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன என்று நமக்குத் தெரியும். ஆனால், அதன் பக்கமே போகமாட்டோம்.*

*இந்த விஷயத்தில் ரோட்டரி உதவ முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நான் ஏன் திரும்பத் திரும்ப ரோட்டரியை குறிப்பிடுகிறேன் என்றால், ரோட்டரி மிகவும் சக்திவாய்ந்தது. அதன் சக்தி உலகளாவியது. ரோட்டரி சங்கங்கள் ஒரு திட்டத்தை தொடங்கி அதை எப்படி செய்து முடிக்கிறார்கள் என்று பாருங்கள். அதன் சக்தி உங்களுக்குத் தெரியும் என்றார் முகமது யூனூஸ்.*

வங்கிகளையும் ஏற்படுத்த முடியும். அவை பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படாது. கிராமிய வங்கிகள் பணம் சம்பாதிக்க உருவாக்கப்பட் டவை அல்ல, அவை மக்களுக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டே உருவாக்கப்பட்டன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**வங்கதேசத்தில்:** சிறுதொழில் கடனுதவி என்பது தற்போதைய கொரானா சூழ்நிலையில் தப்பிப் பிழைக்குமா என்ற கேள்விக்கு வங்கதேசம் சிறுதொழில் கடனுதவி (மைக்ரோ ஃபைனான்ஸ்) திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வருவதை யூனூஸ் சுட்டிக்காட்டினார். வங்கதேசம் இயற்கை பேரிடர்களுக்கு பெயர்போனது, புயல், வெள்ளம் என ஏதாவது ஒரு பேரிடர் வந்து கொண்டேயிருக்கும். கொரோனா வைரஸ் பரவல் காலத்தில்கூட வெள்ளம் வந்தது. ஆனால், அதைப்பற்றி யாரும் எழுதுவதில்லை.

வங்கதேசத்தில் வெள்ளத்தின் போது வெள்ள நீர் வீட்டுக்குள் வந்துவிடும். அது சாதாரண வெள்ளம் எனப்படும். அதே சமயத்தில் அபரிமிதமான வெள்ளம் வீட்டின் மேற்கூரையைத் தொட்டுச் செல்லும் போது நீங்கள் எல்லாவற்றையும் இழக்கிறீர்கள். இது கிட்டத்தட்ட

# பொது நன்மைக்கான தடுப்பூசி



கொரோனா வைரஸ் மிகப் பெரிய அளவில் பரவி உலக மக்களையே அச்சுறுத்தி வந்த நேரத்தில் அதற்கான தடுப்பூசி கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றிய பேச்சு எழுந்தது. இந்தச் சூழ்நிலையில் அனைத்து பெரிய நிறுவனங்களும் நிலைமையை தங்களுக்குச் சாதகமாக்கி கொள்ளை லாபம் அடிக்கத் தயாராகி வருவது எனக்கு கவலையை அளித்தது என்கிறார் முகமது யூனுஸ்.

மிகவும் காலதாமதம் ஆவதற்கு முன்பாக இதை பொது நன்மைக்கான தடுப்பூசி என அறிவிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்க நினைத்தேன். பொது நன்மைக்கான தடுப்பூசி என்றால் அதற்கு யாரும் உரிமை கோர முடியாது. அதைவைத்து பணம் சம்பாதிக்க முடியாது. போலியோ தடுப்பூசியால் நாங்கள் ஈர்க்கப்பட்டோம். அதைக் கண்டு பிடித்த ஜோனாஸ் சால்க், இது "மக்களுக்கான தடுப்பூசி" என்று கூறினார். (காப்புரிமை குறித்து அவரிடம் ஒரு செய்தியாளர் கேள்வி எழுப்பியபோது "நீங்கள் சூரியனுக்கு காப்புரிமை பெறுவீர்களா?" என்று பதில் கேள்வி எழுப்பினார்.)

இதேபோன்ற வழிகளில், அவர் கோவிட் -19 தடுப்பூசி விவகாரத்திலும் காப்புரிமை இல்லாத கருத்தை முன்வைக்க முயற்சிக்கிறார், சில முக்கியமான நபர்களின் ஆதரவையும் பெற்றுள்ளார். நாங்கள் இப்போது ஐ.நா. தீர்மானமாக அதை கொண்டுவர முயற்சிக்கிறோம், மேலும் இந்தியா உள்ளிட்ட முக்கிய நாடுகள் இதற்கு ஆதரவு தருமாறு அழைப்பு விடுத்துள்ளோம்.

இந்த தடுப்பூசி ஐந்து அல்லது ஆறு பெரிய மருந்து நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்பட்சத்தில், ஏற்கனவே அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் வேறு சில ஐரோப்பிய நாடுகள் லட்சக்கணக்கான டாலர்கள் செலுத் தியுள்ள நிலையில் தடுப்பூசி தயாராகி வெளிவந்ததும் அவை முதலில் பணக்காரர்களுக்குத்தான் சேவை அளிக்கும். அடுத்து நடுத்தர மக்கள் பயனடைவார்கள். கொரோனா தடுப்பூசி ஏழைகளைச் சென்றடையும் நேரத்தில் ஒன்று அவர்கள் இறந்திருப்பார்கள் அல்லது இறக்கும் தருவாயில் இருப்பார்கள். இதுதான் கவலைக்குரிய விஷயமாகும்.

பேராசைக்காரர்கள் நிறைய பணம் சம்பாதிப்பது மட்டுமல்லாமல், போலி அல்லது நிஜத்தைப் போன்று தோற்றமளிக்கும் தடுப்பூசிகள் எல்லா இடங்களிலும் ஆக்கிரமித்துக் கொள்ளும். அதை கடைகளில் விற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆனால் தடுப்பூசி காப்புரிமை இல்லாத தயாரிப்பாக மாற்றப்பட்டால், உண்மையான அல்லது போலி தடுப்பூசிகளால் கோடிக்கணக்கான டாலர்கள் லாபம் ஈட்டமுடியாது. மேலும் உலகில் உள்ள ஏழை மக்கள் அதை இலவசமாகப் பெறுவதை நாம் உறுதிசெய்ய முடியும். சமூக ரீதியில் வணிகம் செய்வோர் பணக்காரர்களிடம் கூடுதலாக பணம் வாங்கிக்கொண்டு ஏழைகளுக்கு இலவசமாக தடுப்பூசிகளை வழங்க முடியும் என்றார் யூனுஸ்.

இந்த சமயத்தில் RIPE சேகர் மேத்தா குறுக்கிட்டு, யூனுஸ் போலியோ உதாரணத்தை முன்வைத்தார். உலகம் முழுவதும் போலியோ ஒழிப்புப் பணிகளை ரோட்டரி முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது. கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு விநியோகத்துக்கு வந்தால் அதில் ரோட்டரியின் பங்கு என்ன என்பது குறித்து இப்போது நாங்கள் விவாதித்து வருகிறோம். கொவிட்-19 தடுப்பூசி குறித்து ஐ.நா.வக்கு நீங்கள் விடுத்துள்ள வேண்டுகோளை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

இந்த விஷயத்தில் ரோட்டரி எந்த விதத்தில் உதவ முடியும் என்று சேகர் மேத்தா, யூனுஸிடம் கேட்டார். அதற்கு அவர், இது ஒரு முக்கியமான பிரச்னை. தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு தயாரிக்கப் பட்டு வெளிவரும்போது அவை உலகில் உள்ள அரசாங்கங்களால் கட்டுப் படுத்தப்படும். அப்போது நாம் அவர்களுடன் பேச்சு நடத்தி அதில் ரோட்டரியின் பங்கு என்ன என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் அரசு தங்களுக்குத்தான் பெயர் வரவேண்டும் என்று நினைப்பார்கள். அமைச்சர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுவார். ஆனால், இதற்கான பணியை வேறு யாரோ ஒருவர் செய்ய வேண்டியிருக்கும். எனவே பேச்சுவார்த்தையை சாதுர்யமாக நடத்த வேண்டும். மேலும் இந்த தடுப்பூசி நாட்டின் மூலை முடுக்கில் உள்ள மக்களைச் சென்றடையும் பொறுப்பு உங்கள் கையில்தான் உள்ளது.

யாரும் நுழைய முடியாத பல தொலைதூர இடங்கள் இருக்கின்றன. அந்த இடத்தை சென்றடையும் பொறுப்பை ரோட்டரி ஏற்கவேண்டும். சிறிய இடமாக இருந்தாலும் அது மிகப் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

நான் இங்கே உலகளவில் பேசு கிறேன். நீங்கள் லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் இதே போன்ற பிராந்தியங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும். இவைதான் தடுப்பூசி பெறுவதற்கான கடைசி இடமாக இருக்கும்.

வழக்கமாகிவிட்டது. ஆனால், இதுபோன்ற சமயங்களில், சிறு கடன் திட்டம் (மைக்ரோ கிரெடிட்) தொடர்கிறது, அது மறைந்துவிடாது.

சிறுகடனுதவி திட்டம் மக்களுக்கு பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சிக்கலில் இருப்பவர்களுக்கு ஆதரவாக நின்று அவர்கள் மீண்டும் சொந்தக் காலில் நிற்க உதவுகிறது. அதுதான் சமூக வணிகத்தின் சாராம்சம். காலத்தில் உங்கள் வீடுகள், விலங்குகள் போன்றவற்றை நீங்கள் இழக்கவில்லை. எங்களின் வெள்ளகாலத்துடன் ஒப்பிடும்போது, உங்களுடையது தாற்காலிக பிரச்னைதான். நீங்கள் கஷ்டங்களை சந்தித்தாலும் குடும்பத்துடன் இருக்கிறீர்கள்.

ரோட்டரி எப்படி உதவ முடியும்: ரோட்டரி என்ன செய்ய வேண்டும், அது எப்படி உதவ முடியும் என்று RIPE மேத்தா கேட்டபோது யூனுஸ் பின்வருமாறு வருஷத்தில் ஒருமுறை கூடி நாங்கள் பல விஷயங்களைப் பேசுவோம். அந்தக் கூட்டத்தில் நீங்களும் கலந்து கொள்ளலாம். எங்களது நிர்வாகக்குழுவில் பிரான்சின் டானோன், மெக்கெய்ன் புட்ஸ், கனடா, ஜப்பான்நாட்டு நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. அவர்களும் இதில் பங்கேற்பார்கள். இதில் பங்கேற்பதன் மூலம் உங்களுக்கு சில யோசனைகள் கிடைக்கும். ரோட்டரி சங்கங்கள் சமூக வர்த்தகத்துக்கான நிதியை பெறமுடியும். இது இருவழி நிதியாகும். உங்களுக்கு ஒரு வழியில் பணம் திரும்பவரும். இதன் மூலம் மேலும் சில திட்டங்களை நீங்கள் செயல்படுத்த முடியும்.

இந்த வணிகங்கள் வேலை யில்லாமல் இருக்கும். ஆனால், தொழில்முனைவோராக விரும்பு பவர்களிடம் நல்ல யோசனைகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்ளும். இதைத் தொடர்ந்து அவர்களுக்கு தொழில்முறை ஆலோசனையையும், நிதியுதவியும் அளிக்கும். “நீங்கள் முதல் முறையாகக் கொடுக்கும் பணம் திரும்பிவரும். பின்னர் அவர் இரண்டாவது சுற்று விரும்பினால், அந்த வணிகத்தில் நீங்கள் இரண்டாம் கட்டத்தை வைத்திருக்க முடியும். முதல் கட்டத்தில், ஒரு சமூக வணிகம் ஒரு சிறிய விஷயமாக இருக்கலாம். நீங்கள் பலருக்கு உதவலாம். ஐந்து பேரின் வேலையின்மையை போக்குவது ராக்கெட் அறிவியல் அல்ல. யாராவது வேலைகேட்டு வந்தால் அவர்களை வேலைக்கு பரிந்துரைப்பது தீர்வல்ல. நாம் ஒருவருக்கு தொழில்நடத்த உதவினால் அதன் மூலம் அவர் எத்தனை வேலைவாய்ப்பு உருவாக்கு வார் என்பதுதான் முக்கியம். அதுதான் சமூக மாற்றம். வங்கதேசத்தை பொருத்தவரை நாங்கள் வேலை தேடுபவர்கள் அல்ல, வேலைவாய்ப்பை உருவாக்குபவர்கள். பலர் இங்கு வெற்றிகரமாக சிறிய தொழில் தொடங்கினர். அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் இருந்தது. ஆனால், லட்சக்கணக்காணவர்களுக்கு அது சாதகமாக இல்லை.

முன்னதாக, கூட்டத்தில் உரையாற்றிய மேத்தா, குடிநீர், சுகாதாரம், மருத்துவ வசதி, எழுத்தறிவு திட்டம், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட ரோட்டரியின் சமூக நலத் திட்டங்களை நோபல் பரிசுவென்ற முகமது யூனுஸுடன் பகிர்ந்து கொண்டார்.

**எழுத்தறிவு இயக்கம்:**

இது இந்தியாவில் ரோட்டரியின் 100 வது ஆண்டு மற்றும் எங்களிடம் சுமார் 150,000 ரோட்டேரியன்கள் இருக்கின்றனர், தேசத்தைக் கட்டி யெழுப்புவதில் ரோட்டரியினர் முக்கியப் பங்கு வகிக்கும் நேரம் வந்துவிட்டது. அங்கும் இங்கும் சிறிய திட்டங்களை நிறைவேற்றுவது நூற்றாண்டை கொண்டாடும் ரோட்டரிக்கு பொருத்தமானது அல்ல. கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளாக நாங்கள் பல்வேறு பெரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். அதில் எழுத்தறிவு இயக்கம் முன்னிலை வகிக்கிறது.

இந்தியாவில் கல்வியறிவு இல்லாதவர்களே இருக்கக்கூடாது என்ற நிலையை எட்ட வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோளாகும். நிகழ்ச்சியில் வரவேற்று பேசிய சென்னை ரோட்டரி சங்கத் தலைவர் கபில் சிதலே, உலக மக்கள்தொகையில் ஒரு சதவீதத்தினர் அதன் செல்வத்தில் 99 சதவீதத்தை வைத்திருக்கும் நிலையில் இதுபோன்ற முயற்சிகள் மட்டுமே பொருளாதார இடைவெளியை சரிப்படுத்த வழிவகுக்கும் என்றார்.



வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

# லூயியின் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்

ராஜேந்திர சாபூ



**இடதிலிருந்து:** PRIPs *லூயி ஜியே, ராஜேந்திர சாபூ,* K R *ரவீந்திரன் மற்றும் ஃபிராங்க் டெவ்லின்.*

லூயி விசன்டே ஜியே இணையற்ற பார்வையும், சந்தேகத்துக்கு இடமில்லாத வகையிலான நேர்மையும், யாரும் வெல்லமுடியாத அறிவுத்திறனும் கொண்டவர். அவரது தொழில்முறையும், எளிமையும் அவரை ரோட்டரிக்கு தலைவராக்கியது. ஒரு தெளிவான பார்வையும், செயல்திறனும் கொண்டவர்.

1983-ஆம் ஆண்டில் மான்டிகார்லோ நகரில் நான் முதன் முறையாக லூயியை சந்தித்தேன். அப்போது அவர் CoL பிரதிநிதியாகவும், நான் தேர்வு செய்யப்பட்ட RI இயக்குநராகவும் இருந்தோம். உஷாவும் நானும் சிலியா மற்றும் லூயியின் நெருங்கிய நண்பர்களானோம். வயதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் மிகவும் இளமையாக இருந்ததால் நாங்கள் அவர்களை “லவ் பேர்ட்ஸ்” என்று கேலி செய்வோம். 1974-இல் ஆளுநரான லூயி எனக்கு இரண்டு ஆண்டுகள் மூத்தவர்.

1990-91ல் லூயி அப்போது RI தலைவராக இருந்த பாவ்லோ கோஸ்டாவின் உதவியாளராக இருந்தார். நான் RIன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன். நானும் பாவ்லோவும் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். ஆனால், எங்களுக்குக்கிடையே சில பிரச்னைகள் இருந்தன. லூயி மற்றும் என்னுடைய உதவியாளரும் RI முன்னாள் துணைத்தலைவருமான ஜார்ஜ் அர்ஸியானாக்ஸின் இருவரின் உதவியுடன் அவை முடிவுக்கு வந்தன.

RI தலைவர் என்ற முறையில் நான் ஆர்ஜென்டினாவுக்கு விஜயம் செய்தேன். லூயி எனது மூன்று நாள் பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். எனது உள்ளூர் உதவியாளராக இருந்தார். மரியாதை நிமித்தமான சந்திப்புக்காக ஆர்ஜென்டினா அதிபர் கார்லோஸ் மெனெமின் அலுவலகத்தை அடைந்தோம். எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் குறித்து அவரின் செயலாளர் எங்களிடம் பின்வருமாறு கூறினார். பொதுவாக அதிபர் யாரையும் 15 நிமிடங்களுக்கு மேல் சந்திக்கமாட்டார். 10 நிமிடங்களில் அவர் காபி கேட்டால் அவர் நினைக்கும் வரை சந்திப்பு தொடரும் என்றார். ஆர்ஜென்டினாவில் அப்போது காலரா தொற்று பரவலாக இருந்தது. மரியாதை நிமித்தமான பேச்சுக்குப் பிறகு நான், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் காலரா தொற்று பரவல் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதை நாங்கள் கட்டுக்குள் வைத்திருக்கிறோம். நீங்கள் விரும்பினால், இந்தியாவிலிருந்து மருத்துவ நிபுணர்கள் குழுவை ஒருவாரத்தில் இங்கு அனுப்பி வைக்கிறேன். அவர்கள் இங்கு வந்து நான்கு வாரங்கள் தங்கி உள்ளூர் மருத்துவர்களுடன் ஆலோசனை கலந்த பின்னர் காலரா தொற்றை கட்டுப்படுத்துவது பற்றி திட்டமிடலாம் என்றேன்.

ஆர்ஜென்டினா அதிபர் உடனடியாக காபிக்கு ஆர்டர் செய்ததுடன் சுகாதார அமைச்சரையும் வரவழைத்தார். எங்களுடன் சுமார் ஒரு மணி நேரம் செலவிட்டார். ஒருவாரத்தில் இந்தியாவிலிருந்து மூன்று சிறப்பு மருத்துவர்கள் மற்றும் ஒரு பொது சுகாதார நிபுணரை என்னால் ஒருவாரத்தில் அனுப்ப முடிந்தது. லூயியை தேசிய ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. இது ஒரு மறக்கமுடியாத அனுபவம்.

1995–96ல் லூயி RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான் அறக்கட்டளைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது லூயி என்னிடம் ராஜா, அடுத்த ஆண்டு பால் ஹாரிஸின் 50வது ஆண்டு விழா. இந்த நிகழ்வைக் கொண்டாட பெரிய திட்டம் ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டார். பால் ஹாரிஸ் சர்வேதச அமைதிக்கான ஆய்வு மையம் ஏற்படுத்தலாமே

என்று கூறியபோது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இது ஒரு மிகப்பெரிய திட்டம். RI அல்லது TRF இதைக் கையாளமுடியுமா? என்று கேட்டார். 1996–97 ஆம் ஆண்டில் கிளாஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் லூயியும் நானும் இத்திட்டத்தை கூட்டாக அறிவித்தோம். இது இப்போது ரோட்டரி அமைதி மையங்கள் என்று அழைக்கப்படுகிறது. இது அறக்கட்டளையின் முதன்மை திட்டமாகும்.

1995–96 இறுதியில் RIல் நிர்வாகம், அறக்கட்டளை அறங்காவலர் அலுவலகத்தை ரோட்டரி மையத்தின் 17வது மாடிக்கு மாற்றுவதற்கு முடிவு செய்தது. அறங்காவலர் குழுவினர் அறக்கட்டளை தொடர்பான அனைத்து அலுவலகத்தையும் வேறு இடத்துக்கு மாற்றப்போவதாக மிரட்டல் விடுத்தனர். மீண்டும் லூயியும் எனது தனிப்பட்ட உறவும் கைகொடுத்து உதவியது.

உடனடியாக RI தலைவர், புதிதாக பதவியேற்க விருக்கும் இரு தலைவர்கள், அறக்கட்டளை அறங்காவலர் தலைவர், அடுத்து அடுத்து பதவியேற்கவிருந்த இரு தலைவர்கள் ஆகியோருக்கு ஓஹரோ பகுதியில் உள்ள ஹோட்டலில் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சந்திப்பு எங்களிடம் இருந்த மன அழுத்தம், கோபம், எதிர்மறை எண்ணங்களை மறையச் செய்தது. RI நிர்வாகக்குழு, TRF அறங் காவலர்கள் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

ஆப்பிரிக்காவிலிருந்து போலியோ நோயை விரட்டுவோம் என்ற பிரசாரத்தை தொடங்குவதற்காக 1996ம் ஆண்டு நாங்கள் தென்னாப்பிரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டபோது, பிரசாரத்தை தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மன்டேலா தொடங்கிவைத்தார். நாங்கள் 30 பேர் அதிபர் மன்டேலாவை சந்தித்தோம். ஆனால், அவருக்கு அருகில் நாங்கள் செல்லவோ அல்லது கைகுலுக்கவோ பாதுகாவலர்கள் அனுமதிக்க வில்லை. நிகழ்ச்சி முடிந்தவுடன் நான், மன்டேலாவிடம், RI தலைவர் லூயி ஜியே மன்டேலாவுக்கு போலியோ ஒழிப்பு பொத்தானை அணிவிக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதிபரால் மறுப்பு சொல்ல இயலவில்லை. அன்று மாலையில் நடந்த விருந்தில் நாங்கள் நெல்சன் மன்டேலாவுடன் நடனம் ஆடினோம். இது அந்த ஆண்டின் சிறப்பு அம்சமாகும்.

லூயி பல முறை இந்தியாவுக்கு வந்துள்ளார். 2001ம் ஆண்டு ஜனவரி 25 முதல் 28 வரை சண்டீகரில் RI தலைவரின் பிரதிநிதி என்ற முறையில் சண்டீகரில் இருந்தார். ஜனவரி 26-ஆம் தேதி இந்தியாவின் குடியரசுத் தினத்தன்று குஜராத்தில் பூகம்பம் வெடித்தது. எங்கள் மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பாட்டியா, பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ பணம் மற்றும் பொருள்களை திரட்டினார். அப்போது லூயியும் அவரது மனைவி சிலியாவும் முதலில் நின்று தாராளமாக நன்கொடைகளை வழங்கினர்.

நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒன்றாக இருந்தோம். இதற்கிடையில் ரோட்டரி வட்டத்துக்குள் சிலியாவும் வந்தார். இந்த அற்புதமான தம்பதிகள், உஷா மற்றும் எனது இதயத்தை வென்றுவிட்டனர்.

அந்த இதயத்தின் ஒருபகுதி இன்று மறைந்துவிட்டது. நாங்கள் அவரை இழந்து தவிக்கிறோம். ரோட்டரியில் தனது முழு குடும்பத்தையும் ஈடுபடுத்தியவர், தனது சொந்த நாடானா ஆர்ஜென்டினாவின் தூதராக நின்று ரோட்டரியின் பெயரை மேம்படுத்தியவர். மறைந்துவிட்டார். அவரது மறைவு ரோட்டரிக்கு பேரிழப்பாகும்.

லூயி கியா முன்னோக்கிச் செல்ல விரும்புபவர்களுக்கு வழிகாட்டும் தீப்பந்தம் ஏந்திச் செல்பவர் அல்ல, அவரே ஒரு ஜோதியாக இருந்தார் என்பதுதான் உண்மை.

கட்டுரையாளர் RI முன்னாள் தலைவர்.

# டைம்'ஸ் 100ல் இடம்பெற்ற PDG ஃபன்ஷோ



டைம் இதழ் ஆண்டு தோறும் வெளியிடும் உலகில் மிகக் கூடுதலான தாக்கத்தை உருவாக்கிய 100 மனிதர்கள் பட்டியலில், ரோட்டரியின் நைஜீரியத் தேசியப் போலியோப்ளஸ் தலைவர் டாக்டர் டன்ஜி ஃபன்ஷோ இடம்பெற்றுள்ளார். வைல்ட்-போலியோ இல்லாத நைஜீரியா-வை உருவாக்குவதற் காகவும், ஆப்பிரிக்கப் பகுதியிலிருந்து இந்த வைரஸை அகற்றுவதற்காகவும் ரோட்டரி மற்றும் அதன் கூட்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றிய சிறந்த தலைமைக்காக அவருக்கு இந்தப் பெருமை அளிக்கப் பட்டுள்ளது. இந்தப் பெருமையைப் பெறும் முதல் ரோட்டரி உறுப்பினர் இவர்தான்.

PDG டாக்டர் ஃபன்ஷோ ஓர் இதய மருத்துவர், நைஜீரியாவிலுள்ள லகோஸைச் சேர்ந்த RC லெக்கி, RID 9110, உறுப்பினர். இதற்கு முன் இந்தப் பெருமையைப் பெற்றுள்ளவர்களில் சிலர்: ஏஞ்செலா மெர்கெல் போன்ற தேசத் தலைவர்கள், தலாய் லாமா மற்றும் போப் ஃபிரான்ஸிஸ் போன்ற மதத் தலைவர்கள், ஓப்ரா வின்ஃப்ரெ மற்றும் போனோ போன்ற புகழ் பெற்றோர், பில் கேட்ஸ் போன்ற நன்கொடையாளர்கள், மலாலா யூசஃப்சையி போன்ற செயல்பாட்டாளர்கள். ■

# RI முன்னாள் தலைவர் லூயி ஜியேவிற்கு அஞ்சலி

K R ரவீந்திரன்

ரோட்டரியின் 86வது தலைவரான லூயி ஜியே இப்போது நம்மிடையே இல்லை. ஆனால், அவர் சில அற்புதமான நினைவலைகளை நம்மிடையே விட்டுச்சென்றுள்ளார். ரோட்டரி உலகத்தால் மதிக்கப்பட்டவர். தென்னமெரிக்க ரோட்டரியின் அனுபவம் வாய்ந்த உறுப்பினர். நமது கண்ணோட்டம் மற்றும் செயல்களின் மூலம் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்பார். நல்ல அறிவுத்திறனும் அனைவரையும் நேசிக்கும் எண்ணமும் கொண்டவர். நாகரீகம் என்பது ஆயிரக்கணக்கான செங்கல்கள் கொண்டு எழுப்பப்படும் கட்டடம் போன்றது என்று நான் நம்புகிறேன். நாம் எல்லோரும் மனிதநேயம் என்னும் பெரிய கட்டமைப்புக்கு ஆதரவாக நிற்கும் செங்கல் போன்றவர்கள் என்று சொல்லுவார். அதனால்தான் அவர் அணிந்திருந்த ஜாக்கெட்டின் நிறம் எப்போதும் சிவப்பு நிறத்தில் இருந்தது போலும்! அதனால்தான் லூயியை நான் ஸ்பானிஷ் மொழியில் ''எல் கேப்டன்'' என அழைத்தேன். அவர் ஒரு பொது கணக்காளர் மட்டுமல்ல, தொழிலதிபர். எங்கள் இருவருக்கும் கார் பந்தயத்தில் பிரியம் அதிகம். லூயி திறமையானவர். பல போட்டிகளில் பங்கேற்று சாம்பியன் பட்டம் வென்றவர். ஒரு போட்டியின் தொடக்கத்தில் தமக்கு அடுத்தபடியாக வந்த காரில் நீண்ட கூந்தல், பழுப்புநிற கண்களுடன் இளம்பெண் ஒருவர், தனது தந்தைக்கு வழிகாட்டியாக வருவதைப் பார்த்தார். அந்த நொடிப்பொழுதிலேயே சீலியா என்ற அந்த பெண்தான் தனக்கு மனைவியாக வரப்போகிறவர் என்பதைப் புரிந்துகொண்டார். சீலியா ஒரு பள்ளி ஆசிரியர், இசைப் பேராசிரியர், செய்தியாளர் என பல்வேறு முகங்களுடன் சுறுசுறுப்பான அழகான பெண்ணாகத் திகழ்ந்தார். 2014–2015ம் ஆண்டில் RIன் துணைத் தலைவரானார். தனது கணவர் லூயியின் ஆதரவு இல்லாமல் அவரால் அப்பதவியை எட்டியிருக்க முடியாது. லூயி பியோனஸ் அயர்ஸ் அருகில் உள்ள நகரான அரேஸிபஸில் பிறந்தார். 22 வயதில் உள்ல அரேஸிபஸ் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார்.

1993 ஜனவரியில் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அனாஹெய்மில் வானதியும் நானும் பயிற்சி தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு வந்தபோது லூயியை நான் சந்தித்தேன்.

இரண்டாவது வருடம் மீண்டும் நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவர் எனக்கு நடுவராக இருந்தார். அவரது குழு ஜியேஸ் குளோபல் ஜீனியஸ் என்று அறியப்பட்டிருந்தது. பிறவியிலேயே அவரிடம் தலைமைப் பண்பு இருப்பதையும், அவர் ஒரு முழுமையான மனிதர் என்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அவருக்கு ரோட்டரி குறித்த ஆழமான அறிவு இருந்ததால் மட்டுமல்ல, பார்த்தவுடன் ஒருவரின் குணாதிசயங்களை மதிப்புடுபவர் என்பதால் அல்ல, அந்தநபரின் நிலைக்கு தன்னை மாற்றிக்கொள்ளும் திறன்படைத்தவர் என்பதால் அல்ல, அவர் அழகாக ஆங்கிலம், ஸ்பானிஷ், போர்த்துகீசிய மொழி பேசுபவர் என்பதால் அல்ல. அவர் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கும்போது எனக்கு



**இடதிலிருந்து:** *PRIP லூயி ஜியே, அவர் மனைவி சீலியா, வானதி, PRIPs K R ரவீந்திரன், ஃப்ராங்க் டெவ்லின் மற்றும் அவர் மனைவி க்ளோரியா ரீட்டா.*

சரிவர ஆங்கிலத்தில் பேச வராது என்பார். ஆனால், அதைக் கண்டு நாம் ஏமாந்துவிடக்கூடாது. ஏனெனில் அவரது ஆங்கிலப்பேச்சு அவ்வளவு அருமையாக இருக்கும். அவர் எதிலும் நம்பிக்கை உடையவரும் அல்ல, நம்பிக்கையில்லாதவரும் அல்ல. ஆனால், மற்றவர்களுடன் ஒத்துப் போகும் ஒரு தலைவர். சமூகத்திறன் கொண்டவராகவும், பியானோ வாசிப்பதிலும் நடனமாடுவதிலும் வல்லவராகவும் இருந்தார்.

ஒரு வருடங்கள் கழித்து லூயி RI தலைவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட போது ஏற்படுத்தப்பட்ட குழுவில் நான் இடம்பெற்றேன். அவரது குறிக்கோளை செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட குழு அது. அந்தக் குழுவுக்கு PRID ஹோவார்டு வான் தலைவராகவும் துணைத் தலைவராக PRIP பாவ்லோ கோஸ்டாவும் இருந்தனர். தலைமைப் பதவிக்கு எந்த குந்தகமும் ஏற்படாமல் லூயி குழுவை சிறப்பாக நிர்வகித்து வந்தார். லூயியும் பாவ்லோவும் நல்ல நண்பர்கள் போலவே செயல் பட்டுவந்தனர். பாவ்லோ தலைவராக இருந்தபோது லூயி அவரது உதவியாளராக இருந்தார்.

2004ம் ஆண்டில் நான் அறங்காவலர் குழுவுக்கு பரிந்துரைக் கப்பட்ட போது, லூயி அறங்காவலர் குழு தலைவராக இருந்தார். என்னை முதலீட்டுக் குழுவில் இடம்பெறவும் செய்தார். முதல் கூட்டத்துக்கு பிறகு பிறகு நான் அவரிடம் சென்று எனக்கு பணியாற்றுவதில் சிக்கல் இருப்பதாகக் கூறி குழுவிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டேன். அவர் என்னை தனியே அழைத்து,  நீங்கள் தலைவராகும்போது முதலீடுகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். எனவே குழுவில் இருந்துகொண்டே விஷங்களை கற்றுக்கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறினார்.

லூயி ரோட்டரி  தலைவராக இருந்தபோது TRF அறக்கட்டளைத் தலைவராக ராஜேந்திர சாபூ இருந்தார். அவர்கள் இருவரும்தான் ரோட்டரி அமைதி மையங்கள் உருவாக காரணமாக இருந்தவர்கள். இந்த இரு தலைவர்களும்தான் 1996ல் தென்னாப்பிரிக்காவில் நெல்சன் மண்டேலாவுடன் இணைந்து



*PRIP லூயி ஜியே மற்றும் சீலியா கொழும்புவில் PRIP ரவீந்திரன் வீட்டில்.*

“ஆப்பிரிக்காவிலிருந்து போலியோ நோயை ஒழிப்போம்” பிரசாரத்தை தொடங்கினார்கள். அந்த நேரத்தில் இருவரும் சக்திவாய்ந்த அணியாகச் செயல்பட்டார்கள். TRF அறக்கட்டளை எதிர்கால கண்ணோட்டத்துடன் சிறப்பாகச் செயல்படும் வகையில் அதை பல ஆண்டுகள் நிர்வகித்த பெருமை லூயியையே சேரும். அதற்காக அறக்கட்டளை சார்பில் அவருக்கு நன்றிதெரிவிக்க கடைமைப்பட்டுள்ளேன். அறக்கட்டளை குழு தலைவர் என்ற முறையில் குழுவுக்கு என்ன தேவை, எப்படி செயல்பட வேண்டும் என்ற தெளிவானபார்வை அவரிடம் இருந்தது. அவரது குழுவில் PRIPக்கள் ரான் பர்டன், மார்க் மலோனி, தற்போதைய அறங்காவலர் குலாம் வாஹன்வதி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நான் RI தலைவராக இருந்தபோது எனக்கு உதவிகரமாகவும் நம்பிக்கையாகவும் இருந்த மூன்று முன்னாள் தலைவர்களில் லூயியும் ஒருவர்.

2001ம் ஆண்டில் ஒரு நாள் நியூயார்க் நகரில் பல மாடிக் கட்டடங்கள் கொண்ட ஒரு ஹோட்டல் அறையில் தங்கியிருந்த லூயி, ஹோட்டலின் ஜன்னல் வழியே வெளியே பார்த்தபடியே இவான்ஸ்டனிலுள்ள RI தலைமை செயலகத்துடன் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது ஒரு விமானம் தாழ்வாகப் பறப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அடுத்த சில விநாடிகளில் அந்த விமானம் உலக வர்த்தக மையக்கட்டடத்தில் மோதி வெடித்தது. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 2001, செப்டம்பர் மாதம் 11ம் தேதி உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டபோது அதை நேரில் பார்த்த சாட்சிகளில் லூயியும் ஒருவர் என்று சொல்லலாம்.

லூயி மென்மையானவர் மட்டுமல்ல, திறந்த மனதுடையவர். தம்மை சந்திக்கும் ரோட்டரியினரிடம் அன்புகாட்டுவார். அதனால் ரோட்டேரியன்களும் அவர் மீது தனி மரியாதையும் அன்பும் வைத்திருந்தனர். இலங்கையில் உள்ள எங்கள் வீட்டுக்கு அவர் வந்திருந்த போது இரவு விருந்தில் எனது இதர ரோட்டரி நண்பர்களுடன் சேர்ந்து விருந்து சாப்பிட்டார். அவர்களுக்கு கதை சொல்லி மகிழவைத்தார். லூயியும் அவரது மனைவி சீலியாவும் ரோட்டரி தலைவர் பதவிக்கே அழகுசேர்த்தனர் என்று சொன்னால் மிகையாகாது.

கட்டுரையாளர்,
ரோட்டரி முன்னாள் தலைவர்.

# உலக இளம்பிள்ளைவாத நாள்: நன்கொடை அளித்துக் கொண்டாடுங்கள்



1990களின் தொடக்கத்தில், என் நாட்டில் இளம்பிள்ளை வாதம் பற்றிய கவலை இன்னும் மீதமிருந்தது. அப்போது நான் இலங்கை போலியோப்ளஸ் குழுத் தலைவராக இருந்தேன், ரோட்டரியன்கள், அரசு அலுவலர்கள் மற்றும் UNICEF பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு செயற்படையில் இடம்பெற்றிருந்தேன். NIDக்கள் உள்ளிட்ட இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் முயற்சிகள் அனைத்தையும் இந்தக் குழு நடத்திவந்தது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் மூண்டிருந்தது. பிரச்னையுள்ள பகுதிகளுக்கு வெளியில்தான் NIDக்களை நடத்தலாம் என்று அரசு கூறியது. ஆகவே, ரோட்டரியும் UNICEFம் சேர்ந்து, ஒரு போர் நிறுத்தத்தைக் கொண்டுவர போராளித் தலைவர்களைத் தொடர்புகொண்டோம்.

சில வாரங்களுக்குப்பிறகு, என் அலுவலகத்துக்கு ஒரு கடிதம் வந்தது. இரண்டு நாட்களுக்குப் போரை நிறுத்திவைக்கும்படி உங்களால் உங்கள் அரசாங்கத்தைச் சம்மதிக்கச்செய்ய இயலுமானால், நாங்களும் இரண்டு நாட்களுக்கு எங்கள் துப்பாக்கிகளைக் கீழே போட விரும்புகிறோம். ஏனெனில், நாங்கள் குழந்தைகளுடன் போரிடவில்லை என்று கூறியிருந்தார். விரைவில், NID தொடங்கியது.

ஆப்பிரிக்கப் பகுதியில் ''வைல்ட் போலியோவைரஸ்'' முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. இப்போது அது இரண்டே நாடுகளில் தான் மீதமுள்ளது. அந்த நாடுகளிலிருந்தும் அதை அகற்றுவதற்காக நாம் தொடர்ந்து முன்னேறுகிறோம். 24 அக்டோபர்,உலக இளம்பிள்ளைவாத நாள் ஆகும். இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதற்கான ரோட்டரியுடைய முயற்சிகளைப்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதற்கும், அதற்காக நிதி திரட்டுவதற்கும் இது ஒரு மிகச் சிறந்த வாய்ப்பு ஆகும். மேலும் தெரிந்துக்கொள்ள: endpolio.org/worldpoliodayஐ பாருங்கள். தயவுசெய்து, இளம்பிள்ளைவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பணிக்காக நன்கொடை வழங்குங்கள்.



K R ரவீந்திரன்

அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

# சரியான தலைமையைத் தேர்ந்தெடுங்கள்!



ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் ரோட்டரி அறக்கட்டளை குழுவை கொண்டிருக்க வேண்டும் என்பதை கடந்த 2004ம் ஆண்டு RI நிர்வாகக் குழு ஒப்புக் கொண்டது. இதன் நோக்கம் என்ன வென்றால் சங்க உறுப்பினர்களுக்கு TRF பற்றி எடுத்துச் சொல்லி அது தொடர்பான நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்துவதுதான். ரோட்டரி அறக்கட்டளை பற்றியும் அதன் செயல்பாடுகள் குறித்தும் ரோட்டரியினர் தெரிந்துகொண்டால் தான் அவர்கள் தாமாக முன்வந்து அறக்கட்டளைக்கு ஆதரவு தருவார்கள்.

இதே போல ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ரோட்டரி அறக்கட்டளை குழு (DRFC) ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த குழுவுக்கு DRFCC தலைமைவகிப்பார். இது திறம்பட செயல்பட வேண்டு மானால் தலைமைப் பதவி தொடர்ச்சியாக இருக்கவேண்டும். எனவே தான் DRFCC மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுகிறார்.

DRFCC நியமிக்கப்படும் வரை மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை (DDF) பெற யாரும் அணுக முடியாது என்பதுதான் இதன் முக்கிய அம்சமாகும்.

மாவட்டத்தில் அறக்கட்டளை மானியம் மற்றும் நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ரோட்டேரியன்களை பங்கேற்கச் செய்வது குறித்து அவர்களுக்கு DRFCC குழு விரிவாக எடுத்துரைக்க வேண்டும். DRFCயின் மூன்றாண்டு பதவிக்காலம் 2021ம் ஆண்டு ஜூன் மாதம் முடிவடைகிறது. அக்டோபர் மாதம் நடுப்பகுதியில் DRFC பதவிக்காலம் முடிவடையும் மாவட்டங்களில் உள்ள DGEக்கள் புதிய DRFCCயைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிக்கையை பெறுவார்கள். DGEக்கள் இதில் DGN மற்றும் DGNDக்களை முழுமையாக ஈடுபடுத்தி கூட்டாக DRFCC தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். மாவட்டத்தின் சிறந்த நலனுக்காக DRFCCயை கவனமாகவும் புத்திசாலித்தனத்துடனும் தேர்வு செய்யுமாறு மாவட்டத் தலைவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



குலாம் வாஹன்வதி

TRF அறங்காவலர்

# யஷ்: ஒரு முழுமையான மனிதர்

ராஜேந்திர சாபூ



அவர் ஒரு அசைக்க முடியாத ஹீரோவாக இருந்தார். அன்பு, மரியாதை, பணிவு, தயாள குணம் இவற்றின் மொத்த உருவம் தான் PRID யஷ்பால் தாஸ். அர்ப்பணிப்பு அவருடைய மதமாக இருந்தது. நற்பண்புகள் நிறைந்த சிறந்த மனிதர். 1970-களின் முற்பகுதியிலிருந்து அவரது தந்தை PDG H K தாஸ் மூலம் நான் அவரை அறிவேன். யஷ்பால் விரைவிலேயே ரோட்டரியில் இழுக்கப்பட்டார். நான் அவருடன் அன்பு கலந்த நட்புறவை வளர்த்துக் கொண்டேன். அவர் மாவட்ட ஆளுநர் பதவிக்கு போட்டியிட்டபோது அவரது தேர்வு செல்லாது என்று RI நிர்வாகக் குழுவால் ரத்துச் செய்யப்பட்டது. அப்போது நான் RI தலைவராக இருந்தேன். சில விதிமுறைகள் மீறப்பட்டதாகத் தெரியவந்ததால் தேர்வு ரத்துச் செய்யப்பட்டது. ஆனால், அவர் தகுதி நீக்கம் செய்யப்படவில்லை. மீண்டும் மறு தேர்தல் நடைபெற்ற போது அவர், ஏறக்குறைய ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். யஷ்பால் மற்றும் அவரது மனைவி மஞ்சு எனக்கும் மனைவி உஷாவுக்கும் மிகவும் நெருக்கமாகி விட்டனர்.

யஷ்பால் RI இயக்குநராக இருந்த போது உடல் எடை அதிகரித்து காணப்பட்டார். ஆனால், விரைவிலேயே தனது எடையை குறைத்துவிட்டார். இது எப்படி சாத்தியம் என்று அவரிடம் நான் கேட்டதற்கு, வறுக்கப்பட்ட உணவுகள், இனிப்பு மற்றும் மதுபானம் மூன்றையும் நான் விட்டு விட்டேன். அவை தான் காரணம் என்றார். இந்த மூன்றும் தான் அவருக்கு பிடித்தமானது. ஆனால், மன உறுதியுடன் அவற்றை தவிர்த்துவிட்டார்.

திடீர் வெள்ளம் காரணமாக உத்தரகாண்ட் மலைப்பகுதிகளில் அரசுப்பள்ளிகள் மிகவும் சேதமடைந்திருந்த நிலையில் அவற்றை சவாலாக எடுத்துக்கொண்டு சீரமைத்தவர். அம்பாலாவில் ரோட்டரி புற்றுநோய் மருத்துவ மனையை ஏற்படுத்தியது அவரது மன உறுதிக்கு எடுத்துக் காட்டு. காசநோய் ஒழிப்புக்கு எதிரான போராட்டமும் அவரது பொறுப்புணர்வைக் காட்டுகிறது. போலியோ இல்லாத இந்தியாவை உருவாக்குவதில் அவருக்கு இருந்த ஆர்வமும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கவை.

இன்று (செப்டம்பர் 23) யஷ்பாலின் பிறந்தநாள். இது உத்தராயணம். பகலும் இரவும் சமமாக இருக்கும். இது யஷ்பாலின் குணத்தைப் பிரதிபலிக்கிறது. அவரது உள்ளுணர்வும், வெளியுணர்வும் சமமாகவே இருக்கிறது. அனைவரையும் கவர்ந்தவர் என்று சொன்னால் அது மிகையில்லை.

கட்டுரையாளர்
RI முன்னாள் தலைவர்.

# ரோட்டரியின் உதாரண புருஷர் யஷ்பால்!

அசோக் மகாஜன்

எனது நண்பரும், ரோட்டரியின் முன்னாள் இயக்குநரும், அம்பாலா நகரின் புகழ்பெற்ற பிரமுகர்களில் ஒருவருமான யஷ்பால் தாஸ் கடந்த செப்டம்பர் 22ம் தேதி புதுதில்லியில் காலமாகிவிட்டார். அவர் ஒரு நண்பரைவிட எனக்கு சகோதரர் போன்றவர் இத்தனை வருடங்களாக நான் அவரின் புகழ் பாடிக்கொண்டிருந்தேன். ஆனால், இப்போது அவர், கண்ணீருடன் அஞ்சலி கடிதத்தையும் எழுதச் செய்துவிட்டார்.

அவர், உலகிற்கு நாம் செய்யக்கூடிய நன்மைகள் என்ன என்பதை எடுத்துக்காட்டினார். ரோட்டரி மூலமான சேவை சவாலானது மட்டுமல்ல, இனிமையானது, சுவாரஸ்மானது என்று நமக்கு புரியவைத்தார்.

1993-1994 ஆண்டில் அவர் மாவட்ட ஆளுநராக இருந்தார். நான் அவரை தனித்துவமான ஆனால் பன்முகத்தன்மை கொண்டவராகவே பார்த்தேன். அவர் முதலில் மக்களின் மனிதர். ஒரு நேர்மையான வணிகராக எல்லோராலும் பாராட்டப்பட்டவர்.

ஒரு சிறந்த ரோட்டேரியன், ஒரு எழுச்சியூட்டும் பேச்சாளர், தொலை நோக்கு கொண்ட தலைவர் என்றாலும் எல்லாவற்றுக்கும் மேலாக அவர் மனிதநேயம் மிக்கவர்.

என்னுடன் இந்திய தேசிய போலியோ பிளஸ் குழுவில் சக உறுப்பினராக இருந்தார். போலியோ ஒழிப்பில் அவர் மேற்கொண்ட அயராத பணியால் அவர் எல்லோராலும் மதிக்கப்பட்டார், பாராட்டப்பட்டார். அவர் எதிலும் நம்பிக்கை வைப்பவர். உலகம் முழுவதிலும், குறிப்பாக இந்தியாவில் போலியோவை முற்றிலும் ஒழித்துவிட முடியும் என்று அவர் நம்பினார். இமாலயத்தில் கார்வால் பகுதியில் திடீர் வெள்ளத்தால் பேரழிவு ஏற்பட்ட போது துணிந்து நின்று 25 தரமான பள்ளிகளை கட்டினார். அவர் செய்த இந்த சேவையை யாரால் மறக்க முடியும்? உத்தரகண்ட் மாநிலத்தின் பாடாவில் ஆரம்ப சுகாதார மையம் நிர்மாணிப்பதை அவர் தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டார்.

Y P என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட யஷ்பால் தாஸ், இந்தியாவில் ஒரு புதுமையான ரோட்டரியை கட்டமைப்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். ரோட்டரி மாவட்டங்கள் மற்றும் சங்கங்களின் நிர்வாகம் தொடர்பான சர்ச்சை க்குரிய சிக்கல்களைக் கையாளும் குழுவில் இடம்பெறுமாறு பலமுறை அவர் RI தலைவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

RI நிர்வாகத்தின் மிகவும் சக்தி வாய்ந்த செயற்குழு தலைவர் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்



*PRID யஷ்பால் தாஸ் ஆதித்யா பிர்லா குழுமம் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா மற்றும் PRID அஷோக் மகாஜன் அவர்களுடன் கொல்கத்தாவில் நடைபெற்ற ரோட்டரி நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில்.*

பட்டது, ரோட்டரி சந்திக்கும் எந்த ஒரு சிக்கலான பிரச்னையையும் அவரால் தான் சிறப்பாகக் கையாளமுடியும் என்று நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒன்றுபட்ட கருத்து கொண்டிருந்ததை சுட்டிக் காட்டியது. எந்த ஒரு கடினமான பிரச்னையாக இருந்தாலும் அதற்கு எளிமையான ஒரு தீர்வை அவர் வைத்திருந்தார்.

அன்பு, கருணை, நற்குணம் ஆகியவற்றின் மொத்த உருவமான யஷ்பால் திகழ்ந்தார். எப்போதும் நேர்மறையான சிந்தனா சக்தியை வளர்த்துக்கொள்ளுங்கள். அதன் மூலம் இந்தியாவில் உள்ள 130 கோடி மக்களின் மனதை நீங்கள் வெல்ல முடியும் என்று ரோட்டரியினருக்கு அவர் அறிவுரை கூறுவார்.

2011 முதல் 2013 வரை அவர் ரோட்டரி இயக்குநராக பதவி வகித்த காலம். ரோட்டரி சங்கங்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் ரோட்டரியின் கொள்கைகளைத் திருத்தியமைத்தார். சங்கத்தின் உறுப்பினர்கள் நிதிகளைக் கையாள்வதில் ஒரு ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அம்பாலாவில் உள்ள டாடா குழுமத்தின் ஆட்டோமொபைல் சில்லறை விற்பனை துறையின் தலைவர் என்ற முறையில் அவரது நிபுணத்துவம் மற்றும் சீரிய தலைமைக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

மனைவி மஞ்சு அவருக்கு வாழ்நாள் முழுவதும் உற்ற துணையாக இருந்து தேவையான ஆதரவை வழங்கினார். அறக்கட்டளை மற்றும் சமூக சேவைகளுக்கு இந்த தம்பதிகள் மிகவும் தாராளமாக நன்கொடை வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

அவரின் இழப்பை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்த வேறு வார்த்தைகளே இல்லை. ஒரு சிறந்த பேச்சாளரான யஷ்பால் தாஸ் உலக மேடையிலிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டார். எதைச் செய்யவேண்டுமோ அதை நன்றாகச் செய்தார். அவர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாலும் அவரது நினைவுகள் என்றென்றும் நிலைத்திருக்கும். நேர்மையான வாழ்ந்து மறைந்த அந்த தலைவருக்கு ரோட்டரி உலகமே கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும். எந்த நிலையில் வாழவேண்டும், நேர்மையாகவும் நற்குணங்களுடன் வாழ்வது எப்படி என்பதற்கு உதாரண புருஷராக யஷ்பால் தாஸ் விளங்கினார்.

கட்டுரையாளர்
RI முன்னாள் இயக்குநர்

## நேர்மறை சிந்தனையாளர்

RIPE சேகர் மேத்தா



*யஷ்பால் தாஸ் மறைந்துவிட்டார் என்ற செய்தி அதிர்ச்சியளிக்கிறது. என்னால் நம்பமுடியவில்லை. மூன்று நாள் முன்னதாகத்தான் அவருடன் பேசினேன். அப்போது கூட அவர் மிகவும் உற்சாகமாகவும் நம்பிக்கையுடன் இருந்தார்.*

*என்ன ஒரு சிறந்த மனிதர் மென்மையான பேச்சு, நன்னடத்தை, பணிவு என எல்லாமே அவரைப் பற்றி நல்லதைத்தான் சொல்ல முடியுமே தவிர குறைகாணமுடியாத மனிதர். எதையும் நேர்மறையாக சிந்திப்பவர்.*

*எனக்கும் அவருக்கும் இருந்த பிணைப்பு மகத்தானது. ரோட்டரி இன்டர்நேஷனல் நிர்வாகக்குழுவில் நானும் அவரும் ஒன்றாக இரண்டு வருடங்கள் பணியாற்றினோம். அவர் தனக்கு கொடுக்கப்பட்ட பணியை சிறப்பாகச் செய்தார். நிர்வாகக்குழு கூட்டங்களில் அவர் வார்த்தைகளை அளந்தே பேசுவார். ஆனால், அவரது செயல்பாட்டில் வேகம் இருக்கும். கல்யாண் பானர்ஜி RI தலைவராகவும், நாங்கள் இருவரும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகவும் இருந்தபோது எங்களை இந்தியன் மாஃபியா என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுவார்கள்.*

*ஒவ்வொரு நாளும் நிர்வாகக்குழு கூட்டத்துக்கு பின்னர் நாங்கள் நால்வரும் (யஷ்பால், மஞ்சு, ராஷி மற்றும் நான்) இரவு உணவிற்காக ஒன்றுகூடுவோம். அந்த நேரத்தை பயனுள்ளதாக செலவிடுவோம். அவர் இன்று நம்மிடையே இல்லை என்பதை நம்புவதற்கு கடினமாக உள்ளது. அவருடன் நான் இருந்த காலங்கள் தொடர்ந்து என் மனதில் நிழலாடுகின்றன. அவரது மறைவு மிகுந்த வேதனை அளிக்கிறது.*

*ராஷியும் நானும் ஒரு அன்பான நண்பரை இழந்துவிட்டோம். இது தனிப்பட்ட முறையில் எங்களுக்கு பேரிழப்பாகும். அவரது மறைவால் மஞ்சு மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள இழைப்பை தாங்குவதற்கு பலத்தை கொடுக்குமாறு இறைவனை பிரார்த்திக்கிறோம்.*

*ஓம் சாந்தி.*

# பள்ளி மாணவர்கள் கல்வியிற்கு உதவ ஸ்மார்ட் ஃபோன்

ரஷீதா பகத்

மும்பையில் கொலாபா நகராட்சிப் பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் 51 மாணவர்களுக்கு இந்த ஆண்டு சுதந்திரதினம் மறக்கமுடியாத நிகழ்வாக அமைந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் மும்பை துறைமுக ரோட்டரி சங்க உறுப்பினர்கள் அவர்கள் எல்லோருக்கும் புதிய ஸ்மார்ட்போன் வழங்கியதுதான்.

தற்போதைய சூழ்நிலையில் இந்த மாணவர்கள் ஆன்லைன் வகுப்புகளை கவனிக்கவும், 2021ம் ஆண்டு இறுதித் தேர்வில் பங்கேற்று தங்கள் திறமையைக் காட்டவும் அவர்களுக்கு ஸ்மார்ட்போன் இருப்பது அவசியம் என கருதிய சங்கத்தின் உறுப்பினர்கள் 40 பேரும் மாணவர்களுக்கு இலவசமாக ஸ்மார்ட்போன் வழங்க முடிவு செய்தனர்.

எங்கள் சங்கத்துக்கும் கொலாபா நகராட்சிப் பள்ளிக்கும் நீண்டகாலத் தொடர்பு உண்டு. கடந்த காலங்களில் இப்பள்ளிக்கு கூடைப்பந்து விளையாட்டு மைதானம் ஏற்படுத்திக் கொடுத்தது. அறிவியல் கண் காட்சியை நடத்த உதவியது, மாணவர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு கல்வி ஆலோசனை வழங்கியது, மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் ஏற்படுத்த விளையாட்டு உபகரணங்கள் வாங்கிக் கொடுத்தது என பல உதவிகளைச் செய்து வந்துள்ளோம். எனவே இப்போது பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட செல்லிடப்பேசிகளை வாங்கித் தர முடிவு செய்தோம் என்றார் சங்கத்தின் தலைவர் ஜெயேஷ் பாண்ட்யா.

கொரோனா வைரஸ் உலகையே அச்சுறுத்தி வரும் நிலையில் அது இந்தியாவையும் பாதித்துள்ளது. குறிப்பாக மகாராஷ்டிர மாநிலத்தில் அதன் தாக்கம் அதிகரித்திருந்த நிலையில் ஆன்லைன் மூலம் படிப்பை தொடரும் மாணவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய நாங்கள் விரும்பினோம். உடனடியாக பள்ளியின் முதல்வரை சந்தித்து கலந்து ஆலோசித்தோம். கொரோனாவை கட்டுப்படுத்தும் முயற்சியாக போடப்பட்ட பொது முடக்கம் காரணமாக பள்ளிகள் செயல்படாத நிலையில் ஆன்லைன் வகுப்புகள் மூலம் மாணவர்களுக்கு பாடம் நடத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் 120 பேரில் பலரிடம் ஆன்லைன் வகுப்புகளை பின்பற்ற அவர்களிடம் ஸ்மார்ட்போன் இல்லை என்று குறிப்பிட்டார். உடனே ஸ்மார்ட்போன் வாங்க இயலாத கூலித்தொழிலாளர்கள் மற்றும் குடிசை வாசிகளின் குழந்தைகள் 51 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சங்கத்தின் மூலம் ஸ்மார்ட்போன் இலவசமாக வழங்க திட்டமிட்டோம். மாணவர்களுக்கு பெயரளவுக்கு செல்லிடபேசி வாங்கிக்கொடுத்தோம் என்றில்லாமல் அவர்கள் ஆன்லைன்




**இடதிலிருந்து:** *ஷத்தின் பாண்ட்யா, திலிப் ஜானி, நிலேஷ் ருபாரேல், ஷரத் தாவே, சங்கத்தலைவர் ஜெயேஷ் பாண்ட்யா, கைலாஷ் குப்தா, ப்ரதீப் மேத்தா மற்றும் மசூத் சைஃபூதின் கொலோபா முனிசிபல் பள்ளி குழந்தைகளுடன்.*

# ஏழை மாணவர்களின் தேவதூதன் ரோட்டரி

மும்பை கொலாபா நகராட்சிப் பள்ளியில் படிக்கும் பத்தாம் வகுப்பு மாணவர்களான முஸ்கான் ஷேக், ஏ.ஆஷிஷ் இருவரும் மும்பை துறைமுக ரோட்டரி சங்கத்தினரை தேவதூதர்களைப் போலவே கருதுகிறார்கள். ஜெயேஷ் பாண்ட்யாவும் அவரது ரோட்டரி சங்க உறுப்பினர்களும் எங்கள் பள்ளிக்கு 20 ஆண்டு கலமாக உதவி வருகிறார்கள். நாங்கள் படிப்பதற்கு வசதியாக புத்தகங்கள் வாங்கிக் கொடுத்துள்ளனர். மாணவர்களுக்கு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள். கட்டுரைப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டி களை நடத்தி பரிசுகள் வழங்கி எங்களை ஊக்குவித்து வருகிறார்கள். இப்போது எங்களுக்கு மிகப் பெரிய நன்கொடையாக "ஸ்மார்ட்போன்" வழங்கியுள்ளார்கள் என்று மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார் 15 வயது முஸ்கான்.

முஸ்கானின் தந்தை மெஹ்பூப் ஷேக் கூலித்தொழிலாளி. அவர், முஸ்கான் உள்பட தனது மூன்று குழந்தைகளுடன் அம்பேத்கர் நகர் பகுதியில் ஒரு குடிசைப் பகுதியில் வசி த்து வருகிறார். எங்கள் குடும்பம் செ ல்லிடைபேசி வாங்கித் தரும் நிலையில் இல்லை. இந்த நிலையில் ஆன்லைன் வகுப்புகளை எப்படி எதிர்கொள்வது, வீட்டுப் பாடங்களையும் மற்ற வேலைகளையும் எப்படிச் செய்வது என்பது தெரியாமல் கவலையுடன்



A ஆஷிஷ் (நடுவில்)

இருந்தேன். ஆனால், இப்போது ரோட்டரி சங்கம் எங்களுக்கு ஸ்மார்ட்போன் வழங்கியுள்ளது. இதனால் என்னால் ஆன்லைன் வகுப்புகளை கவனித்து வீட்டுப் பாடங்களையும் குறித்த நேரத்தில் செய்துமுடிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்கிறார் ரோட்டரி செய்திக்குழுவுக்கு அளித்த பேட்டியில் முஸ்கான். அவரிடம் தொடர்புகொண்டு பேசியபோது ஆங்கிலத்தில் பேசுவதையே விரும்பினார். ஸ்மார்ட்போன் கிடைத்துள்ளது மனதிற்கு நிம்மதியை அளித்துள்ளது. இப்போது நாங்கள் எந்தக் கவலையும் இல்லாமல் பாடங்களில் கவனம் செலுத்தி வருகிறோம் என்றார்.

ஸ்மார்ட்போனுக்கு கால் வந்தால் முதல் ரிங் வந்தவுடனேயே அதை எடுத்துப் பேசி பதில் சொல்கிறார். ஏனெனில் அதன் முக்கியத்துவத்தை அவர் அறிந்திருப்பதுதான். அவர் தினமும் இரண்டு மணி நேரம் வீதம் மூன்று பாடங்களை ஆன்லைன் மூலம் படித்து வருகிறார். அவளுடைய சகோதரிகளும் பள்ளியில் படித்து வருகிறார்கள். நன்றாக உழைத்து படித்து பட்டம் பெற விரும்பும் முஸ்கான், ஒரு மனநல மருத்துவராக விரும்புகிறார். "மனநல மருத்து வராவதில் அப்படியென்ன விருப்பம்" என்று கேட்டால், "மூளையைப் பற்றிய அனைத்து மர்மங்களையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" என்கிறார்.

ஆஷிஷின் தந்தை வாகன ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகிறார். எனக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மராத்திய வழி கல்வி பயின்று வருகின்றனர். 8 வயதாகும் இளைய சகோதரி ஆங்கில வழிக்கல்வி பயின்று வருகிறார். அவர் எங்கள் எல்லோரையும்விட புத்தி சாலியானவர். சிறு வயதிலிருந்தே அவருக்கு ஆங்கிலத்தின் மீது மோகம் அதிகம் என்று பெருமையுடன் குறிப்பிட்டார் ஆஷிஷ்.

ஆஷிஷ்க்கு ஸ்மார்ட்போனை இயக்குவது ஒன்றும் பெரிய விஷயமாக இல்லை. ஏனெனில்



முஸ்கான் ஷேக் தன் தாயாருடன்

அவரது தந்தை ராஜ்பால்நாது வால்மீகியிடம் ஏற்கெனவே ஸ்மார்ட்போன் உள்ளது. ஆஷிஷ் அதை அடிக்கடி பயன்படுத்தியுள்ளார். இப்போது அவருக்கே ஸ்மார்ட்போன் கிடைத்துள்ளது ஆன்லைன் வகுப்பு களை கவனிப்பதற்கு வசதியாக உள்ளது. தனக்கு வகுப்பு இல்லாத நேரங்களில் சகோதரர்கள் அல்லது சகோதரி ஆன்லைன் வகுப்புகளை கவனிக்க கொடுத்துவிடுகிறார். பல ஆண்டுகளாக தங்கள் பள்ளிக்கு மும்பை துறைமுக ரோட்டரி சங்கம் உதவிகள் செய்து வருவதை நன்றிப்பெருக்குடன் நினைவுகூர்கிறார் 16 வயதான ஆஷிஷ்.

நன்றாகப் படித்து போலீஸ் அதிகாரியாக வேண்டும் என்பதுதான் எனது நீண்டநாள் கனவு. அதற்காக கடுமையாக உழைக்கவும் நான் தயாராக இருக்கிறேன். முதலில் அறிவியல் பாடத்தில் பட்டம் பெற வேண்டும். போலீஸ் அதிகாரி வேலைக்குச் சேர வேண்டும் என்பது தான் எனது ஆசை என்கிறார் ஆஷிஷ்.

உங்கள் படத்தை நல்ல தரத்துடன் வாட்ஸ்ஆப் மூலம் அனுப்புங்கள் என்று சொன்னதுதான் தாமதம். அடுத்த 5 நிமிடங்களில் அவர்களின் படங்கள் எங்களுக்கு வந்துசேர்ந்துவிட்டன. ரோட்டரியினரைப் போல அவர்களும் சுறுசுறுப்பாகவே இருக்கிறார்கள் என்றார் ஜெய்ஸ்ரீ.

வகுப்புகளை கவனிக்கவும், தேவையான பாடங்களை தங்கள் செல்லிடபேசியில் தேக்கி வைக்கவும் உதவும் வகையில் நவீன வசதிகள் கொண்ட ஸ்மார்ட்போன் வழங்க முடிவு செய்தோம் என்று விளக்கம் அளித்தார் பாண்ட்யா.

உடனடியாக ஏழை மாணவர்களுக்கு செல்லிட பேசி வழங்கும் திட்டத்தை சங்க உறுப்பினர்கள், ரோட்டரியில் இல்லாத நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் தெரிவித்தோம். அவர்கள் மூலம் 51 ஸ்மார்ட்போன் வாங்குவதற்கு தேவையான ரூ.3.5 லட்சம் வசூலானது.

இதனிடையே ரோட்டேரியன் ஒருவர், தனக்குத் தெரிந்த செல்லிட பேசி விற்பனையாளரிடம் தொடர்பு கொண்டு தள்ளுபடி விலையில், மாணவர்களுக்கு உதவும் நவீன வசதிகள் கொண்ட ஸ்மார்ட்போனை வாங்குவதற்கு உதவி செய்தார். கடந்த ஆண்டு பள்ளியில் பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 94 சதவீதமாக இருந்ததால், பள்ளியின் தரத்தை கருதியும் மாணவர்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் தரமான செல்லிடப் பேசியை வாங்கித் தருவதில் நாங்கள் குறியாக இருந்தோம் என்றார் பாண்ட்யா.



*சங்க உறுப்பினர் திலிப் ஜானி மாணவியிற்கு கைப்பேசியை அளிக்கிறார்.*

கொரோனா காலத்தில் அதிக கூட்டம் இருக்கக்கூடாது என்பதாலும், சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்பதாலும் 51 மாணவர்களை இரண்டு தொகுதிகளாகப் பிரித்து நிகழ்ச்சியில் அவர்களுக்கு ஸ்மார்ட்போன் வழங்கினோம். இந்நிகழ்ச்சியில் மும்பை நகராட்சி கல்வித்துறை அதிகாரி மதுகர் பால்கர், காவல்துறை உதவி ஆணையர் தால்வி மற்றும் ரோட்டேரியன்கள் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஸ்மார்ட்போன் சிம் கார்டுகளை ஆக்டிவேட் செய்வதற்காக ஜியோ நிறுவனப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். முன்னதாக மாணவர்களுக்கு வழங்கப்படும் செல்லிட பேசிக்கான ஆதார் அட்டை உள்ளிட்ட தேவையான ஆவணங்களை செல்லிட பேசி சேவை வழங்கும் நிறுவனத்திடம் அளிக்கப் பட்டது. முதல் நான்கு மாதங்களுக்கு இலவச இணைய வச திக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்பிறகு மாணவர்களே அதனை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஸ்மார்ட்போனில் ஏதாவது பிரச்னை எனில் அதை சரிசெய்து தர ரோட்டரி சங்கம் உறுதியளித்தது.

திட்ட இயக்குநர் தேவாங் வோரா தலைமையில் ரோட்டேரியன்கள் நிலேஷ்ருபாரல், திலிப் ஜானி உள்ளிட்ட 15க்கும் மேலான ரோட்டரியினர் இத்திட்டத்து க்கு தங்கள் பங்களிப்பை செய்தனர்.

மும்பை துறைமுக ரோட்டரி சங்கத்தினர் இந்த திட்டத்தை தவிர கொரோனா நிவாரணப் பகுதிகளிலும் ஈடுபட்டனர். கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் ஏழைகளுக்கு 4,000 உணவுப் பொட்டலங்களை வழங்கியுள்ளனர். மேலும் வேறு சில சங்கங்களுடன் இணைந்து கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவ மனைகளுக்கு மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்களை நன்கொடையாக அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ■



*சங்கத்தலைவர் ஜெயேஷ் பாண்ட்யா ஒரு மாணவருக்கு கைப்பேசியை அளிக்கிறார்.*

Rotary PEOPLE OF ACTION

# ஹைதராபாதில் ரோட்டரியின் பிளாஸ்மா வங்கி

கிரண் ஜெஹ்ரா



*RC ஹைதராபாத் டெக்கான் தலைவர் VVSN ராஜு மத்திய அமைச்சர் G கிஷன் ரெட்டியை கௌரவிக்கிறார். DG N V ஹன்மந்த் ரெட்டி மற்றும் Rtn ஷரத் சௌத்ரி ஆகியோரும் உள்ளனர்.*

RC ஹைதராபாத் டெக்கான், RID 3150, இந்நகரிலுள்ள ரோட்டரி சல்லா ரத்த வங்கியில் ஒரு பிளாஸ்மா வங்கியைத் தொடங்கியது. தீவிரக் கோவிட் நோயாளிகளுக்கான ஒரு சிகிச்சை முறையாக, கோவிடிலிருந்து குணமாகிவருவோருடைய பிளாஸ்மா-வை மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். இதற்கான வளர்ந்துவரும் தேவையை, உள் விவகாரங்களுக்கான ஒன்றிய இணை அமைச்சர் G கிஷன் ரெட்டி தொடங்கிவைத்த இந்தப் புதிய வளாகம் நிறைவு செய்யும்.

2018ல் TRF மற்றும் RC நேப்பியர்வில்லெ, சிகாகோ, RID 6450 உடன் இணைந்த ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாகப் பெறப்பட்ட ஒரு ரத்த தான வேனும் சேவைக்குக் கொண்டுவரப்பட்டது. திரட்டுதல் கருவி, கொடையாளர் படுக்கைகள், குறுகிய காலச் சேமிப்புத் தீர்வுகள் போன்ற ரத்த தானச் செயல்முறைக்குத் தேவையான அனைத்தும் இந்த வண்டியில் உள்ளன. சமீபத்தில், இதில் நோய்த்தொற்றை நீக்கும் ஜெட்டிங் இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன, இதன்மூலம், ஒவ்வொரு ரத்த தானத்துக்குப் பிறகும் வேனைத் தூய்மைப்படுத்தலாம்'' என்கிறார் இந்தச் சங்கத்தின் PR இயக்குநரான ஆனந்த் கங்காரியா. கோவிடிலிருந்து மீண்ட நோயாளிகள் தங்களுக்குப் பிடித்த நேரத்தில், பிடித்த இடத்தில் எளிதாகவும் வசதியாகவும் பிளாஸ்மா நன்கொடை அளிக்க இந்தச் சிறப்பு வேன் உதவும்.

பிளாஸ்மா நன்கொடையாளர்கள் ரத்த வங்கிக்கு வரலாம், அல்லது, வீட்டில் இருந்தபடியே ரத்தத்தை நன்கொடையாக வழங்கலாம் என்றார் கங்காரியா. இதன்மூலம் அரசு மருத்துவமனைகளில் உள்ள ஏழைகள், தேவையுள்ள நோயாளிகளுக்கு ரத்தப் பொருட்களை இலவசமாக வழங்குகிறோம்.

சங்கத்தினர்களுடைய துணைவர்கள் உதவுகிறார்கள். நாங்கள் சரியான பொருத்தத்தைக் கண்டறிவதுடன், சாத்தியமுள்ள நன்கொடையாளர்களை அழைத்துப் பேசுகிறோம், கோவிட் நோயாளிகளுடைய உயிர்களைக் காக்கும்படி அவர்களை ஊக்குவிக்கிறோம்'' என்கிறார் இவர். ஆனால், பிளாஸ்மா வங்கியின் உண்மையான வெற்றி, நன்கொடையாளர்கள் தாங்களே முன்வந்து நன்கொடை அளிக்கும் போது தான்'' என்று சுட்டிக்காட்டுகிறார் இவர். நாங்கள் ஒரு சிக்கலில்லாத, பாதுகாப்பான நன்கொடையளித்தல் அனுபவத்தை உண்டாக்கியுள்ளோம், கோவிடிலிருந்து மீண்ட நோயாளிகள் தாங்களே முன்வந்து பிளாஸ்மா-வை நன்கொடையாக அளிக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம், நோயாளிகளும் நன்கொடையாளர்களும் www.plasmaforyou.org என்ற இணையத் தளத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

இச்சங்கம் மரம் நடு விழாவையும் நடத்தியது. சங்க உறுப்பினர் தேவேந்திர சூரணா தன்னுடைய தொழிற்சாலையில் 10,000 மரங்களை நட்டார், பிற உறுப்பினர்கள் தங்கள் வீடுகளில், அலுவலக வளாகங்களில் மரக்கன்றுகளை நட்டார்கள்.■

# ஏழைகளுக்கு உணவு அளிக்கும் “ஆஹார் கிச்சன்”

ஜெய்ஸ்ரீ

ஷில்லாங்கில் உள்ள ஆஹார் கிச்சன் தினமும் குறைந்தது 300 பேருக்கு இலவசமாக உணவு வழங்கி வருகிறது. இது 2018 ஆம் ஆண்டில் அர்தேந்து தர்ம அறக்கட்டளையால் தொடங்கப் பட்டது. இதற்கு ரோட்டரி மாவட்டம் 3240ன் முன்னாள் மாவட்ட ஆளுநர் மனஸ் சௌதுரி நிர்வாக அறங்காவலராக இருக்கிறார். ஹெலிகாப்டர் விபத்தில் இறந்த தமது சகோதரர் அர்தேந்து நினைவாக அவர் இந்த அறக்கட்டளையை உருவாக்கியுள்ளார். “அவர் ஒரு நல்ல இதயமுள்ள MLA மட்டுமல்ல, மேகாலயாவில் மக்கள் மத்தியில் பிரபலமானவர். அவரது நினைவுநாளில் (செப்டம்பர் 22) பசித்தோருக்கு உணவளிப்பதற்கான ஒரு திட்டத்தைத் தொடங்குவது சரியானது என்று நினைத்ததுதான் இந்த அறக்கட்டளை நிறுவப்பட முக்கிய காரணம் என்று சௌதுரி கூறினார். ரோட்டரியைப் போலவே சேவைதான் முக்கியம் என்ற லட்சியத்தைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. ஷில்லாங் டைம்ஸின் முன்னாள் ஆசிரியரான, அவருக்கு பத்திரிகைத் துறையில் சிறந்த சேவை செய்ததற்காக அப்போதைய குடியரசுத்தலைவர் அப்துல் கலாம், பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்துள்ளார். மாநில அமைச்சரவையிலும் அவர் அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

அறக்கட்டளையின் சமையல் அறையில் ஒரு சமையல்காரர் மற்றும் மூன்று உதவியாளர்களைக் கொண்ட ஒரு குழுவால் சைவ உணவு தயாரிக்கப்படுகிறது. பின்னர் சமைக்கப்பட்ட உணவு பகல் 12 மணிக்கு ஜாலுபாரா என்ற இடத்திற்கு வேனில் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு மக்கள் நடைபாதையில் வரிசையில் பொறுமையாக காத்திருக்கிறார்கள். தேவையான நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. “எங்கள் விருந்தினர்கள்” சாப்பிடுவதற்கு முன்பு கைகளை கழுவுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம். ஏனென்றால் பலர் பசியுடன் காத்திருப்பதால், அவர்களின் பார்வை உணவுமீதே இருக்கும், அதனால் சுகாதாரத்தை அவர்கள் காற்றில் பறக்கவிடக்கூடும் என்ற காரணத்தால் கை கழுவும் நிலையத்தில், கைகளை கழுவ சோப் தயாராக வைக்கப் படுகிறது. அருகில் ஒரு குப்பைத் தொட்டியும் வைக்கப்படுகிறது என்றார்,

எவர்சில்வர் தட்டுகளில் உணவு வழங்கப்படுகிறது. இரண்டாவது அல்லது மூன்றாவது முறை உணவு கேட்டாலும் மறுக்கப்படுவதில்லை. அவர்களில் சிலர் பாத்திரங்களைக் கொண்டுவந்து இரவு சாப்பிடுவதற்கான உணவையும் பெற்றுச் செல்கிறார்கள். 80 வயதான ஒரு மூதாட்டி மிகக் குறைவாகவே சாப்பிடுகிறார். ஆனாலும் தனது இருப்பிடத்தின் பக்கத்திலிருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு இங்கிருந்து உணவு கொண்டு செல்கிறார்.



பசித்தவர்களுக்கு உணவு வழங்கும் இந்த பணிக்கு தன்னார்வம் கொண்ட தொண்டர்கள் சிலர் உதவிகரமாக இருக்கிறார்கள். இலவச உணவு என்றால் சிலர் அதை வாங்கி சாப்பிடுவதில் தயக்கம் காட்டக்கூடும் என்பதால் ஆரம்பத்தில் ஒரு சாப்பாடு ரூ.5 என கட்டணம் வசூலித்தோம். அதுமட்டுமல்ல ஒவ்வொரு கவளம் சாப்பாடும் மதிப்பு மிக்கது என்பதை உணர்த்தவும் கட்டணம் வசூலித்தோம். ஆனால், கொரோனா தொற்று பரவல் ஏற்பட்ட தொடர் நடவடிக்கைகளால் பலரும் பாதிக்கப்பட்டதால் கடந்த ஏப்ரல் முதல் இலவசமாகவே உணவு வழங்கிவருகிறோம்.

பொது முடக்க காலத்தில் சாலையோர கடைகள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டதால் எங்களின் ஆஹார் கிச்சனுக்கு முக்கியத்துவம் அதிகரித்தது. ஓரளவு வசதியானவர்கள்கூட எங்களிடம் உணவு வாங்கி சாப்பிட்டனர். எனினும் கொரோனா பரவல் உச்சம் தொட்டதை அடுத்து சில தினங்களுக்கு திட்டம் நிறுத்திவைக்கப்பட்டது. நாங்கள் மீண்டும் பணியைத் தொடங்கியபோது வழக்கமாக உணவு சாப்பிட வரும் ஒரு முதியவரை சந்திக்க நேர்ந்தது. அவர், தனது பையிலிருந்து ஒரு ரொட்டித் துண்டை எடுத்துக் காட்டி, கடந்த ஐந்து நாளாக இதை வைத்துத்தான் நான் பசியாறினேன். மேலும் பசித்தால் தண்ணீரைக் குடித்து சமாளித்து வந்தேன் என்று சொன்னார்.



பலர் அன்றாட ஆகாரத்திற்கு ஆஹார் கிச்சனையே நம்பியிருக்கிறார்கள். பொது முடக்கம் அறிவிக்கப் பட்டது அவர்களுக்கு வசதியாக போய்விட்டது என்றார் சௌதுரி.

உள்ளூர் காவல்துறையினரின் வேண்டுகோள் பேரில் எங்கள் குழு மேலும் ஓரிடத்தில் அதாவது பால்தான் பஜாரிலும் உணவு விநியோகத்தை தொடங்கியது. உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் முகக்கவசம், கிருமி நாசினி கொண்டு கைகழுவுதல் மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றி செயல்பட்டனர். உணவு வழங்கப்படும் முன்னர் அந்த இடம் முழுவதும் நோய் பரவாமல் தடுக்கும் வகையில் பிளீச்சிங் பவுடர் கொண்டு தூய்மைப்படுத்தப்படுகிறது.

மெனுவில் பொதுவாக அரிசி சோறு, பருப்பு, ரொட்டி, சட்னி, சப்ஜி, மற்றும் ஏராளமான பச்சை மிளகாய் மற்றும் உப்பு ஆகியவை அடங்கும். இது எல்லா நேரத்திலும் பிடித்தமான ஒரு காம்போ உணவாகும். சாதாரணமாக உணவகத்தில் இதை சாப்பிட்டால் ரூ.100 வரை செலவாகும். உள்ளூர் பிரமுகர்கள் பலர் தங்கள் பிறந்தநாள், திருமணநாள், பெரியோர்களின் நினைவுநாள் போன்ற முக்கிய நிகழ்வுகளின்போது ஒரு நாளைக்கான உணவுத் தேவைக்கான செலவை ஏற்றுக்கொள்கிறார்கள். சில சமயங்களில் இனிப்புகள், மாவுப் பண்டங்கள், பழங்கள் போன்றவற்றை வழங்குகிறார்கள். அண்மையில் IPDG டாக்டர் தேபஷிஷ் தாஸ், தாம் மாவட்ட ஆளுநர் பதவியை சிறப்பாக முடித்ததற்காக ஒரு நாள் உணவுச் செலவை ஏற்றுக்கொண்டார் என்றார் சௌதுரி.

நாங்கள் உணவு வழங்கும் போது இவர் ஏழை, இவரால் பணம் செலவழிக்க முடியும் என்று வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. நாங்கள் தயாரித்து வழங்கும் உணவு தரமானதாகவும், சுவையாகவும் இருப்பதால் ஓரளவு வசதி யானவர்களும் இங்கு வந்து உணவு சாப்பிடுகிறார்கள். ஒரு



முறை நாங்கள் உணவு வழங்கிய இடத்திற்கு லக்னௌவிலிருந்து சுற்றுலாப் பயணிகளுடன் ஒரு டூரிஸ்ட் பஸ் வந்தது. அவர்களைப் பார்த்தபோது ஆதரவற்றவர்கள் போல் தெரியவில்லை. முதலில் அவர்கள் நாங்கள் உணவு வழங்குவதை பார்க்க வந்திருக்கிறார்கள் என நினைத்தோம். அதன் பின்னர்தான் தெரிந்தது. அவர்கள் இங்கு உணவு சாப்பிட வந்திருக்கிறார்கள் என்று. ஏழைகளுக்கு உணவு வழங்கும் இடத்தில் சாப்பிட வந்தது ஏன் என்று கேட்டபோது, இங்கு சுத்தமான சைவ உணவு கிடைக்கும் என்று பஸ் டிரைவர் சொன்னதால் வந்ததாகச் சொன்னார்கள். பின்னர் அவர்கள் அனைவரும் உணவு சாப்பிட்டுவிட்டு எங்களை வாழ்த்திவிட்டுச் சென்றார்கள் என்றார் சௌதுரி.

ஒரு நாளைக்கு உணவு தயாரிப்பதற்கு ரூ.15,000 வரை செலவாகிறது. பிற அறக்கட்டளைகள் மற்றும் நன்கொடையாளர்கள் எங்கள் அறக்கட்டளைக்கு கணிசமான நிதியை வழங்குகிறார்கள். இது தவிர, மேகாலயா அரசு தனது பொது விநியோக திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் 10 குவிண்டால் அரிசியை ஒதுக்கீடு செய்கிறது, மேலும் மளிகைப் பொருட்கள் மொத்த விலையில் வாங்கப்படுகின்றன. சௌதுரியின் சொந்த ஊரில் இயங்கும்

ஷில்லாங் ரோட்டரி சங்கமும் இதற்கு பங்களிப்புச் செய்கிறது. சமீபத்தில் இந்த சங்கமும், அறக்கட்டளையும் சேர்ந்து பொது மக்களுக்கு, சோப்புகள், கிருமிநாசினிகள், முகக்கவசம் உள்ளிட்டவைகளை விநியோகித்துள்ளது. மேலும் குளிர்காலத்தில் அவர்கள் போர்வைகள் மற்றும் கம்பளி ஆடைகளையும் வழங்கி வருகின்றனர்.



### இதர சேவைகள்...

2005 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த அறக்கட்டளை, நகரங்களில் தண்ணீர் பற்றாக்குறையை போக்குவதற்கு வீடுகளுக்கு மானிய விலையில் தண்ணீர் சப்ளை செய்கிறது. 2007 முதல், பள்ளி மாணவர்களுக்கு மானிய கட்டணத்தில் பேருந்து சேவை வழங்கப்படுகிறது. பல்வேறு காரணங்களுக்காக தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்லவும் மீண்டும் பள்ளியிலிருந்து வீட்டுக்கு அழைத்து வர முடியாத பெற்றோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும் என்றார் சௌதுரி. ஏழை மாணவர்களுக்கு அறக்கட்டளை மூலம் நிதியுதவியும், பொருளுதவியும் வழங்கப்படுகின்றன. மேலும் தகுதியான மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.



PDG *தேபஷிஷ் தாஸ் உணவு பரிமாறுகிறார்.*

தமது சகோதரர் இறந்ததை அடுத்து பல்வேறு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க சௌதுரி இரண்டு முறை MLAவாகப் பணியாற்றியுள்ளார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக செலவிட்டு அதற்கு கணக்கு வைத்திருந்ததற்காக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிடமிருந்து பாராட்டுக் கடிதம் பெற்றுள்ளார் சௌதுரி. “நான் ஒரு அரசியல்வாதி என்பதைவிட நான் ஒரு ரோட்டேரியன் என்று சொல்லிக்கொள்வதையே பெருமையாக நினைக்கிறேன்” என்கிறார் சௌதுரி.

1980ல் ரோட்டரியில் சேர்ந்த சௌதுரி, கடந்த ஆண்டு மாவட்ட பயிற்சியாளராக இருந்தார். அடுத்த ஆண்டு CoL கூட்டத்தில் பங்கேற்கும் மாவட்ட பிரதிநிதியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.■

# ரோட்டரி இதழாளர் குழுவொன்றை அமைக்கிறது RID 3232

ரோட்டரி செய்திக்குழு

RID 3232, பல சங்கங்களைச் சேர்ந்த ஆர்வமுள்ள ரோட்டரியன்கள், ஆனெட்களைக் கொண்ட ரோட்டரி இதழாளர்கள் குழு ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்தச் சங்கம் பரந்த சமூகத்துக்குச் செய்துவரும் பணிகளைப்பற்றிய தகவல்களை இந்தக் குழுவினர் பரப்புவார்கள். சமீபத்தில், இவர்களுக்காக மெய்நிகர் தளத்தில் ஒரு 'ரோட்டரி எழுத்தாளர்கள் கூட்டத்துக்கு' ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தப் புதிய இதழாளர்களுடைய பணி, ஆளுநருடைய மாதாந்திரக் பத்திரிக்கையான 'பவர்ப்ளே', ரோட்டரி இணையத் தளம், ஃபேஸ்புக், டுவிட்டர் மற்றும் யூட்யூப் வழியாக, ரோட்டரி பிராண்டைப்பற்றிய தகவல்களைத் திரட்டுதல், தொகுத்தல், மதிப்பைக் கூட்டுதல். இந்தத் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம், ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துதல்.

இந்த யோசனையை DG S முத்துப்பழனியப்பன் வழங்கியதாக 3232 மாவட்டத்தின் பொதுத் தோற்றத் தலைவர் நாச்சியப்பன் கூறினார். இந்தத் திட்டத்தின் நோக்கமாக அவர் குறிப்பிட்டவை, நன்கு



DG S *முத்துபழனியப்பன் மற்றும் அவர் மனைவி கமலா.*



YouTube *சேனல் சானக்யா நிறுவனர் ரங்கராஜ் பாண்டே.*

எழுதும் கலையைக் கற்றுக்கொள்ள ரோட்டரியன்கள், ஆன்கள் மற்றும் ஆனெட்களை ஊக்குவித்தல், GMLக்குப் பங்களிக்க அவர்களுக்கு வாய்ப்பு அளித்தல், அவர்களுக்குப் பயிற்சி அளித்தல். இவர்களுக்காக இன்னும் பல பயிலகங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

புகழ் பெற்ற யூட்யூப் சானலான *சாணக்யா*-வின் நிறுவனர், CEOவும், பெரும் எண்ணிக்கையிலான ரசிகர்களைக் கொண்ட வருமான ரங்கராஜ் பாண்டே இப்பயிலகத்தில் பேசுகையில், இதழாளர்கள் சரியான தகவல்களை வழங்கவேண்டும், சார்பு நிலை இல்லாமல் இருக்க வேண்டும், சமூகத்தில் ஒரு நேர்வித மாற்றத்தைக் கொண்டுவரப் பணியாற்ற வேண்டும் என்றார். பார்வையாளர்களை மயக்கத்தில் ஆழ்த்திய உண்மை வாழ்க்கை எடுத்துக் காட்டுகள் சிலவற்றை சுட்டிக்காட்டினார், ஊடகத்தின் பகுதியால் தூண்டப்படும் பொய் யான பரப்புரையைப் பெரும் சமூகம் புறக்கணிக்கிறது, நிராகரிக் கிறது என்றார். இதழாளர்கள் உண்மையாக இருக்கவேண்டும், பாமரர்களுக்குக்கூடப் புரியும் வகையில் உண்மையைச் செயல் திறனோடு கூறவேண்டும் என்றார்.

ரோட்டரி மாவட்டத்தின் சங்கங்கள் நிறைவேற்றும் திட்டங் களைப் பற்றி, அவற்றால் பலன் பெறுவோரைப்பற்றி இந்த ரோட்டரி இதழாளர்கள் பேசவேண்டும், பலன் பெறுவோருடைய வாழ்க்கைகளில் ரோட்டரியன்கள் கொண்டு வருகிற மாற்றத்தைக் காட்சிப்படுத்தவேண்டும் என்று *ரோட்டரி செய்திகள்* ஆசிரியர் ரஷீதா பகத் வலியுறுத்தினார்.

DG முத்துப்பழனியப்பன் பேசுகையில், ரோட்டரியன்கள் செய்கிற பணியைப்பற்றி ரோட்டரி இதழாளர்கள் எழுதவேண்டும், அதற்கு அவர்கள் களத்துக்கே சென்று பணியாற்றவேண்டும்'' என்று தான் நம்பியதால் தான் இந்த யோசனையை முன்வைத்ததாகக் கூறினார்.

*பவர்ப்ளே* என்ற தலைப்பில் வெளியாகும் மாவட்ட GMLன் ஆசிரியரான சுகன்யா ஸ்ரீராம், இப்பயிற்சித் திட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும்'' என்றார். ■

# அகதியாக வந்த பெங்களூர் ரோட்டேரியனின் சாதனை

ரஷீதா பகத்

*இதய அறுவை சிகிச்சை பெற்ற இந்தோனேசிய குழந்தை.*



கர்ப்பிணியான தாய், இரண்டு வயது சகோதரன் ஆகியோருடன் அச்சிறுவன் போலீஸார் லாகூர் ரயில்நிலையத்துக்கு வந்து விட்டபோது அந்தச் சிறுவனுக்கு வயது 9 இருக்கும். 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் தேதி, எங்கள் காலனி தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் புகைமூட்டம், கூச்சல் குழப்பம். நாங்கள் பாதுகாப்புக்காக இடம்தேடி ஓட முற்பட்டபோது, உங்களை ஒரே ஒரு இடத்துக்குத்தான், அதாவது லாகூர் ரயில் நிலையத்துக்குத்தான் நாங்கள் அழைத்துச் செல்ல முடியும் என்று போலீஸார் கூறினர். என்று நினைவுகூர்ந்தார் பெங்களூர் இந்திராநகர் ரோட்டரி சங்கத்தில் 1972 முதல் உறுப்பினராக இருந்துவரும் O P கன்னா. ரயிலில் பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பலரும் ரயிலின் மேற்கூரையில் அமர்ந்து பயணித்தனர். ஆனால், எனது தாயார் கர்ப்பிணி என்பது தெரியவந்ததால் எங்களுக்கு ரயில் பெட்டியில் இடம் கிடைத்தது. நாங்கள் பாதுகாப்பாக ஜலந்தரை அடைந்தோம். ஆனாலும் லாகூரில் இருக்கும் எங்கள் தந்தைக்கு நாங்கள் இந்தியா வந்துவிட்டோம் என்பது அப்போது தெரியாது. பின்னர் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம் என்பதை அறிந்தவுடன், அவரும் ஒருநாள் எங்களுடன் வந்து இணைந்து கொண்டார்.

இது எனக்கு முதல் சம்பவம். கடவுள்தான் எங்களை காப்பாற்றினார். அவருக்குத்தான் நாங்கள் நன்றி சொல்ல வேண்டும் என்று தேசப் பிரிவினையின்போது நடந்த சம்பவங்களை நினைவுகூர்ந்தார் ரோட்டேரியன் கன்னா.

பின்னர் 1998ம் ஆண்டில் நான் ஐ.நா. பணி நிமித்தமாக கடல் கடந்து சென்றபோது எனக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. ஆனால், நல்லவேளையாக எனக்கு சரியான நேரத்தில் சரியான சிகிச்சை கிடைத்தது. மூன்று ஜோடி ஆடைகளுடன் அன்று அகதியாக இந்தியா வந்த நான் சமூகத்தில் நான் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தும் வகையில் அறக்கட்டளையை ஏற்படுத்த விரும்பினேன். மனைவியும், குழந்தைகளும் ஆதரவாக இருந்ததை அடுத்து 2001ம் ஆண்டில் பெங்களூர்

மணிப்பால் மருத்துவமனையுடன் இணைந்து Needy Hearts Foundation (NHF) என்னும் அறக்கட்டளையை நிறுவினேன். இதய அறுவைச் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு உதவி அவர்களுக்கு வாழ்வளிப்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது என்கிறார் O P கன்னா.

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வரும் இந்த அறக்கட்டளை இதுவரை 10 ஆயிரம் இதய நோயாளிகளுக்கு வாழ் வளித்துள்ளது. தேவைப் பட்டவர்களுக்கு இதய அறுவைச் சிகிச்சையும் நடத்தப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளை மட்டும் இல்லாவிட்டால் என்னால் ஒருவருக்குகூட உதவி செய்திருக்க முடியாது என்கிறார் கன்னா. இதுபோன்ற சமூக சேவைக்காக நான் முதலில் இந்தியாவில் உள்ள ரோட்டேரியன்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். என்னுடைய குறிக்கோள் நிறைவேற ரோட்டரி அறக்கட்டளையும் உதவியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த இதயநோயாளிகள் மட்டுமல்ல, வங்கதேசம், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட 12 நாடுகளைச் சேர்ந்த இதய நோயாளிகளும் இந்த அறக்கட்டளை மூலம் பயன்பெற்றுள்ளனர். இந்த அறக்கட்டளை மூலம் இதய நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஆண்டு ரூ.30 லட்சம் வரை செலவிடப்படுகிறது. இதற்கான தொகை எனது வருமானம், குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அளிக்கும் நன்கொடைகள் மற்றும் நான் சார்ந்திருக்கும் ரோட்டரி சங்கம் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை பங்களிப்பு மூலம் கிடைத்தது என்கிறார் கன்னா.

கன்னா, IIT கோரக்பூரில் என்ஜினீயரிங் படிப்பு முடித்தவர். இயந்திரவியல் நிபுணர் என்பதால் சொந்தமாக தொழில்நடத்தி வருகிறார். எனக்கு முதல்முறையாக மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சை பெற்ற பிறகு நான் 14 நிறுவனங்களில் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்தேன். இந்த நிறுவனங்களின் கூட்டங்களில் பங்கேற்பதற்காக எனக்கு வழங்கப்படும் தொகையை நான் NHF அறக்கட்டளைக்கு கொடுத்துவிடுவேன். இதனால் நிறுவனங்கள் இயக்குநருக்கு சேர வேண்டி தொகையை நேரடியாக அறக்கட்டளைக்கே செலுத்தி வந்தன. என்னால் நிறுவனங்களுக்கும் லாபம். அவர்களால் எனக்கும் லாபம். அதாவது அவர்களுக்கு வரிவிலக்கு கிடைக்கும். நானும் அவற்றுக்கு வருமானவரி செலுத்தத் தேவையில்லை என்று விளக்கினார் கன்னா.



NHF *மருத்துவமனையில்* O P *கன்னா (இடது).*

தனது வருமானம் மற்றும் குடும்ப உறுப்பனர்களின் வருமானத்தின் ஒரு பகுதியை அறக்கட்டளைக்கு கொடுத்ததன் மூலம் மருத்துவ மனையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டார் கன்னா. மேலும் பல்வேறு தொண்டு நிறுவனங்களுடன் உடன்பாடு செய்து கொண்டார். இதனால் NHF மூலம் ஏழை இதய நோயாளிகளுக்கு குறைந்த கட்டணத்தில் தரமான அறுவைச் சிகிச்சை அளிக்க அவரால் முடிந்தது.

சண்டீகர், தில்லி போன்ற நகரங்களில் இதய நோயாளிகள் யாருக்காவது அறுவைச் சிகிச்சை செய்வதில் சிக்கல் இருந்தால் ரோட்டரியின் மூத்த தலைவர்களான PRIP ராஜேந்திர சாபூ, RIPE சேகர் மேத்தா, PRID சுஷில் குப்தா போன்றவர்கள் அந்த நோயாளியை எங்களுக்கு பரிந்துரைப்பார்கள். நாங்கள் வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவோம் என்கிறார் கன்னா. Needy Hearts Foundation மணிப்பால் மருத்துவமனை தவிர வேறு நான்கு சேவை நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு செயல்பட்டு வருகிறது. நாங்கள் 2001க்கு முன் NHF அறக்கட்டளை அமைப்பது தொடர்பாக விவாதித்தபோது இதய அறுவைச் சிகிச்சை நிபுணரான டாக்டர் தேவி ஷெட்டி (தற்போது பெங்களூரு நாராயணா ஹிருதாலயா மருத்துவமனையின் தலைவராக உள்ளார்.) மணிப்பால் மருத்துவ மனையில் பணிபுரிந்தார். அவர் அங்கிருந்து சென்றுவிட்டாலும் எங்களுக்கு அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கி வருகிறார் என்றார் கன்னா.

### இதய வால்வு வங்கி

2006ம் ஆண்டு NHF மற்றொரு லட்சிய திட்டத்தை அறிமுகப் படுத்தியது. ஒரே சீரான தன்மை யுடைய இதய வால்வுகள்

வங்கியை அமைத்தல் என்பதுதான் அது. பெங்களூர் இந்திராநகர் ரோட்டரி சங்கம், NHF மற்றும் மணிப்பால் மருத்துவமனை ஆகியவற்றின் முயற்சியாக, இந்த வங்கி மணிப்பால் மருத்துவ மனையில் அமைக்கப்பட்டது, மேலும் இதற்காக ரூ.1 கோடி வரை முதலீடு செய்யப்பட்டது என்கிறார் கன்னா. திட்டத்தின் ஒரு பகுதிக்கு TRF அறக்கட்டளை மூலம் சர்வ தேச மானிய உதவியாக 43,112 டாலர் பெறப்பட்டது. இதற்கு பெங்களூரு ரோட்டரி சங்கத்தினுடன் தொடர்புடையை அமெரிக்காவின் விஸ்கான்ஸின், எல்க்ஹார்ன் ரோட்டரி சங்கம் உறுதுணையாக இருந்தது.

இந்த இதய வால்வு வங்கியின் மூலம் பெறப்பட்ட மனித திசுக் களிலான வால்வுகளை அறுவைச் சிகிச்சைகள் மூலம் பொருத்தி இதுவரை 200-க்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகள் பலன் பெற்றுள்ளனர் என்றார் கன்னா. இந்த வால்வு வங்கி குழந்தைகளுக்காகவே உருவாக்கப்பட்டது. ஏனென்றால் நாம் ஒரு குழந்தைக்கு ஒரு செயற்கையான அல்லது பிளாஸ்டிக் வால்வுகளை இதயத்தில் பொருத்தினால் குழந்தை வளரும்போது வால்வு வளராது. வால்வு பொருத்திய நான்கு அல்லது 5 ஆண்டுகளுக்குப் பிறகு, அது பயனற்றதாகிவிடும் என்று விளக்கினார் கன்னா

ஹோமோகிராஃப்ட்ஸ் என்பது மூளைச்சாவு அடைந்தவர்கள் உடலிலிருந்து அல்லது இறந்தவர்களின் உடலிலிருந்து 24 மணி நேரத்துக்குள் எடுக்கப்படும் திசுக்களாகும். ஆனால், இதை நன்கொடையாக அளிப்பவர்கள் நோய்த்தொற்று இல்லாதவர்களாக இருக்க வேண்டும். சாதாரணமாக நாம் இதய வால்வுகளை எப்போது வேண்டுமானாலும் தயார் செய்து கொள்ளலாம். ஆனால், இந்த வால்வுகளை தயாரித்து சுமார் –180 டிகிரி சென்டிகிரேடில் பதப்படுத்தி சேமித்துவைக்க வேண்டும். மனித இதய வால்வுகளை சேமிக்க மிகவும் குறைந்த வெப்பநிலை தேவைப்படுவதால், ஒவ்வொரு வால்வுக்கான சேமிப்பு செலவு வேறுபட்ட நிலையில் ரூ.10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை இருக்கும். இந்த வால்வுகள் மூலம் இதய நோய் சிக்கலான குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும்.



*இதய ஹோமோகிராஃப்ட்.*

உண்மையில், இதுபோன்ற திசுக்களால் ஆன வால்வுகள் கிடைக்கா விட்டால் சிக்கலான குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை அளிக்க முடியாது. சந்தையில் சில மாற்று வால்வுகள் மற்றும் இதயக்குழாய்கள் கிடைத்தாலும், அவை மிகவும் செலவுபிடிப்பதாகவும், சாதாரண மனிதர்கள் வாங்க முடியாத அளவுக்கு விலை உயர்ந்ததாகவும் இருக்கும் என்கிறார் கன்னா.

### லாபநோக்கு இல்லாத அரிய சேவை

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் இதய நோயுடன் சுமார் 2,00,000 குழந்தைகள் பிறப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால், இவர்களில் சுமார் 15,000 முதல் 20,000 குழந்தைகள் மட்டுமே சில வகையான அறுவை சிகிச்சைகளைப் பெற முடிகிறது. எஞ்சியவர்கள் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தாலோ அல்லது நிதிவசதி இல்லாத காரணத்தாலோ மெல்ல மெல்ல இறக்க நேரிடுகிறது.

எனவே இதய நோய் பிரச்னை உள்ள ஏழைக் குழந்தைகள், பெண்களுக்கு நாங்கள் லாபநோக்கு இல்லாமல் குறைந்த கட்டணத்தில் வால்வு வங்கி மூலம் இதய வால்வுகளை வழங்குவதுடன் அவர்களுக்குச் சிகிச்சையும் அளிக்கிறோம். பெங்களூர் இந்திராநகர் ரோட்டரி சங்கம், TRF மூலம் கிடைத்த திட்டச் செலவின் ஒருபகுதியாக சர்வதேச நிதி 43,112 டாலர், அமெரிக்காவில் உள்ள ரோட்டரி சங்கம், மணிப்பால் மருத்துவமனை ஆகியவற்றின் மூலமே இது சாத்தியமானது.

இந்த வால்வு வங்கி மூலம் மணிப்பால், ஜெயதேவா, நாராயண ஹிருதாலயா மற்றும் பிற மருத்துவமனைகள் மூலம் 200 குழந்தைகளுக்கு மேல் வெற்றிகரமாக அறுவைச்சிகிச்சை மூலம் வால்வு பொருத்தப் பட்டது. இந்த கட்டுரையை எழுதும் நேரத்தில், அதாவது ஆகஸ்ட் இறுதியில் திசுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட 50 இதய வால்வுகள் தயார் நிலையில் இருந்தன. ஆனால், அவற்றை நான்கு வாரங்களுக்கு மட்டுமே சேமிக்க முடியும் என்று தெரிவித்தார் கன்னா.■

# கோவிட் போராளிகளுக்கு ரோட்டரியின் உதவி

கிரண் ஜெஹ்ரா




DG *ப்ரஷாந்த் ஜானி, அவர் மனைவி ஹிட்டா,* AG *மிஹிர் தக்கர் கச்சோலியில் உள்ள* PHC*யில் பாதுகாப்புக்கவசங்கள் அளிக்கின்றனர்.*

இரவு சுமார் 11 மணி. RC கந்தேவி, RID 3060, உறுப்பினரான பரிமள் நாயக்குக்கு மருத்துவர் பிரத்னேஷ் பர்மரிடமிருந்து ஓர் அவசர அழைப்பு வந்தது. எங்களிடம் முககவசங்களோ PPEகளோ இல்லை, நாளை நாங்கள் கோவிட் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கவேண்டும். எங்களுக்குத் தேவை உள்ள போதெல்லாம் உங்கள் சங்கம் எங்களுக்கு உதவிவந்துள்ளது, இம்முறையும் நீங்கள் எங்களுக்கு உதவுவீர்கள் என்று நம்புகிறோம்'' என்றார் பர்மர்.

மறுநாள் காலை, கடத் பகுதியில் உள்ள, பர்மார் பணிபுரிகிற கிராமப்புற முதன்மை நல மையத்துக்கு இந்தச் சங்கத்திடமிருந்து ஒரு பராமரிப்புப் பொதி வந்தது. நான் சொன்னது சரிதான். ஒரே இரவில் எங்களுக்கு PPEகள், முககவசங்கள் தூய்மைப்படுத்திகள் கிடைத்துவிட்டன. ரோட்டரியன்களுக்கு நன்றி சொல்ல என்னிடம் சொற்களே இல்லை என்று தொடர்ந்து கூறுகிறார் அவர்.

RC கந்தேவி, குஜராத்திலுள்ள 35 கிராமப்புற PHCகள் மற்றும் குழந்தைகளுக்கான நலப் பராமரிப்பு மையங்களுடன் பணியாற்றிவருகிறது. இந்த அமைப்புகளெல்லாம் ஒவ்வொரு வராக எங்களை அழைத்தார்கள், PPEகள், முககவசங்கள், தூய்மைப்படுத்திகள், வெப்பநிலை மானிகள் வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் எங்கள்மீது நம்பிக்கை வைத்திருந்ததால் எங்களைத் தொடர்புகொண்டார்கள் என்கிறார் நாயக்.

கொரோனா நோய்த்தொற்றின் தொடக்கக் காலத்தில், முககவசங்கள், கையுறைகள், தூய்மைப்படுத்திகள் உள்ளூரிலேயே பெறப்பட்டன. ஆனால், தேவை வளர்ந்துவருவதை நாங்கள் அறிந்திருந்தோம், ஆகவே, எங்களுடைய பழைய கூட்டு அமைப்புகளைத் தொடர்புகொள்ளவும், ஒரு பன்னாட்டு நல்கை விண்ணப்பத்தைப் பதிவுசெய்யவும் தீர்மானித்தோம்'' என்று தொடர்ந்து கூறுகிறார் அவர்.

இதுவரை இந்த அமைப்பு $42,000 மதிப்புள்ள கோவிட் உதவிப் பொருட்களை நன்கொடையாக அளித்துள்ளது. TRF, AIPNO (அமெரிக்காவிலுள்ள வடக்கு ஒஹாயோவைச் சேர்ந்த இந்திய மருத்துவர்கள் அமைப்பு) மற்றும் கூட்டுச் சங்கங்களான RCகள் பர்தோலி, வாபி வேஸ்ட், RID 3060; எமோரி ட்ருயிட் மலைகள், RID 6900க்கு; RIDகள் 3054, 3053 ஆகியோரின் ஆதரவு இல்லாவிட்டால் இந்த நன்கொடைகள் சாத்தியமாகி யிருக்காது என்கிறார் நாயக். பெரும் பாலான கோவிட் போராளிகள் எங்களுடைய சக ஊழியர்கள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், கூட்டாளிகள்தாம்; அவர்கள் தங்களுடைய பணிகளைச் செய்ய இந்த ஆதரவு தேவை. சரியான நேரத்தில் TRF எங்கள் நல்கையை வழங்கியதால், எங்களால் அவர்களை ஆதரிக்க இயன்றது.

சுமார் 1,200 N95 முககவசங்கள், 27,000 மூன்றடுக்கு முககவசங்கள், 650 உயிரிப் பொறி முககவசங்கள் மற்றும் 8,000 கதர் முககவசங்கள், 26,000 கையுறைகள், 1,500 PPE பொதிகள், 7,000 தூய்மைப்படுத்திகள் மற்றும் 50 அகச்சிவப்பு வெப்பநிலை மானிகள், PHCகள், ஐந்து அரசு, தொண்டு மருத்துவமனைகள், காவல்துறையினர், நலப்பணியாளர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன, இவற்றுடன் உணவும் வழங்கப்பட்டது. நாங்கள் மருத்துவமனைகளின் பட்டியலொன்றைத் தயாரித்துள்ளோம், ஒவ்வொரு மருத்துவமனையாக உதவிவருகிறோம்'' என்கிறார் இவர். ■

# அருணாச்சலில் உதயமானது ரோட்ராக்ட் சங்கம்

V முத்துக்குமரன்



RAC நம்ஸாய் சாசனத் தலைவர் குஷ்பு சர்மா.

மக்கள் மனதைக் கவரும் வகையில் இயற்கை எழில் மிகுந்த அருணாச்சலத்தில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆகஸ்ட் மாதம் 14-ஆம் தேதி நம்ஸாய் ரோட்ராக்ட் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு ரோட்டரி மாவட்டம் 3240, 1990ம் ஆண்டில் உருவாக்கப் பட்டபோதிலும் இதற்கு முன்னர் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் ரோட்டரி இல்லை. இதன் அர்த்தம் என்னவென்றால் இந்த ரோட்ராக்ட் சங்கம் ரோட்டரி சங்கத்துக்கு முன்னதாகவே வடகிழக்கு மாநிலத்தை அடைந்துள்ளது.

இதன் நடைமுறையில் வேறு சில சாதனைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த புதிய ரோட்ராக்ட் சங்கம் தெற்காசியாவில் நான்காவது. இதை சாசனப்படுத்தியது RAC தின்சுகியா ரோட்ராக்ட் சங்கம். ஒரு ரோட்ராக்ட் சங்கத்தை ஸ்பான்ஸர் செய்த மற்றொரு ரோட்ராக்ட் சங்கம் என்ற இந்த அரிய சாதனையை இந்த பிராந்தியத்தில் எட்டிய இரண்டாவது மாவட்டமாகும் இது.

அருணாச்சலில் 15 புதிய ரோட்ராக்டர்களுடன் இந்த புதிய சங்கம் சாசனத் தலைவர் குஷ்பு சர்மாவின் தலைமையில் உருவாகியுள்ளது. வரும் 2021ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் தேதிக்குள் இந்த சங்கம் 40 உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாக வளர்ந்துவிடும் என்கிறார் DRR துஷார் ஜலான். நம்ஸாய் ரோட்ராக்ட் சங்கம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சங்கமாகும். நான், மாவட்ட செயலாளர் அமித் மோர், பழங்குடியினர் மற்றும் மாவட்ட அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்புடைய குஷ்பு ஆகியோரின் உதவியால்தான் இது சாத்தியமானது என்கிறார் ஜலான்.

### ஆறு மாத கடின உழைப்பு

எல்லைப்புற மாநிலமான அருணாச்சல், சீனாவுடன் நீண்ட எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. பாதுகாப்பு பிரச்னை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பொதுவாக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இங்கு செயல்பட இந்திய அரசு அனுமதிப்பதில்லை. மேலும் இங்குள்ள பழங்குடியினர்களும்

வெளியாட்கள் தங்கள் நிலத்தை ஆக்கிரமிப்பதை விரும்புவதில்லை என விளக்கினார் ஜலான். ஆனால் ரோட்டரிக்கு உள்ள செல்வாக்கு மற்றும் இளைஞர்கள் ரோட்ராக்டில் அதிக ஆர்வத்துடன் சேர விரும்புவதை கருத்தில் கொண்டு மாவட்ட ஆணையர் R Kசர்மா, ரோட்ராக்ட் சங்கம் தொடங்க எங்களுக்கு அனுமதி வழங்கினார். முதல்வர் பெமா காண்டுவின் ஆசியும் எங்களுக்கு உள்ளது என்றார் குஷ்பு.

இப்போது ஓராண்டுக்குள் மாநிலத்தில் ரோட்டரி சங்கத்தை திறக்கும் நோக்கில் ஜலானுடன் இணைந்து கடுமையாக உழைத்து வருகிறார் குஷ்பு. அருணாச்சல பிரதேசத்தில் ரோட்ராக்ட் சங்கத்தை அமைப்பதில் தளவாடங்கள் மற்றும் பிற உதவிகளை முன்னின்று செய்வதில் தின்சுகியா ரோட்டரி சங்கம் முக்கிய பங்காற்றியுள்ளது.

எனினும் மாவட்ட ஆணையர் அலுவலகத்திலிருந்து அதிகாரிள் குழு வந்து இடத்தை பார்வையிட்டது, பழங்குடியினரில் கருத்துக்களை கேட்டறிந்தது அறிக்கை தாக்கல் செய்வது என அனைத்து நடைமுறைகளும் முடிவதற்கு 6 மாதங்களானது. உள்ளூர் மக்கள் ரோட்ராக்ட் சங்கம் அமைக்க பச்சைக் கொடி காட்டியதற்கு முக்கிய காரணம் நல்லிதயம் படைத்த பெண்ணான குஷ்புவுக்கு அவர்களுடன் இருந்த நெருங்கிய தொடர்புதான். ஒரு வழியாக எங்களுக்கு மாவட்ட ஆணையர் அலுவலகத்திலிருந்து ‘ஆட்சேபணை இல்லை’ என்ற சான்றிதழ் கிடைத்தது. அதற்காக குஷ்புவுக்கு நாங்கள் நன்றிசொல்லியே ஆக வேண்டும்.

### ஒரு புனிதமான உறுதிமொழி

DRR ஆக நான் பணியாற்றும் காலத்திற்குள்ளாகவே வடகிழக்கு மாநிலங்களில் ரோட்ராக்ட் சங்கம் தொடங்கப்பட வேண்டும் என்பது தான் தமது நோக்கம் என்றும் ஜலான் குறிப்பிட்டார். அடுத்து மணிப்பூரிலும், ரோட்ராக்ட் சங்கங்களை ஏற்படுத்து வதற்கான நடவடிக்கைகளில் தாம் இறங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கார்ப்பரேட் நிர்வாகம், பிராண்டிங் மற்றும் மார்க்கெட்டிங் துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் ‘இன்டர்கோன் குளோபல்’ என்னும் நிறுவனத்தை ஜலான் நடத்தி வருகிறார். இது தவிர குடும்பத் தொழிலான தேயிலை வியாபாரத்திலும் ஈடுபட்டு வருகிறார். வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள உயர் போலீஸ் அதிகாரிகள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் தொழில் முனைவோருடனான தனக்கு இருக்கும் நல்ல உறவை பயன்படுத்தி ரோட்ராக்ட் சங்கத்தை மேம்படுத்தி வருகிறார்.

30 சங்கங்களைச் சேர்ந்த 400 ரோட்ராக்டர்கள் மூலம் ரூ.2 லட்சம் மதிப்புள்ள முகக் கவசங்கள், முக கேடயங்கள், கிருமிநாசினிகளை விநியோகம் செய்துள்ளார்.

‘சன்மான்’ திட்டத்தின் மூலம் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், தூய்மைப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், காவல்துறையினர் உள்ளிட்ட கோவிட் செயல் வீரர்கள் 500 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

### வெள்ள நிவாரணத் திட்டம்

பிரம்மபுத்திரா நதியில் ஏற்படும் வெள்ளத்தால் ஒவ்வொரு ஆண்டும் அஸ்ஸாமில் சுமார் ஐந்து மில்லியன் மக்களும் ஆயிரக்கணக்கான விலங்குகள் மற்றும் கால்நடைகளும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், மறுவாழ்வு அளிக்கவும் நிதி திரட்ட 12 வெவ்ரோட்டரி, ரோட்ராக்ட் சங்கங்கள் மற்றும் மாவட்டங்களுடன் ஒரு கூட்டணியை உருவாக்கினேன் என்கிறார் ஜலான். ஆகஸ்ட் வரை, அஸ்ஸாமில் ஐந்து இடங்களில் வெள்ள நிவாரண முகாம்களை அமைக்க ரூ.1.5 லட்சம் திரட்டினோம். ரேஷன் பொருட்கள், உணவு, மளிகை பொருட்கள் மற்றும் பாய், பாத்திரங்கள் உள்ளிட்ட அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருள்களும் வழங்கப்பட்டன.



RIPE சேகர் மேத்தா மற்றும் ராஷி அவர்களுடன் DRR துஷார் ஜலான்.

### அதிக சங்கங்கள், அதிக உறுப்பினர்கள்

RI பதிவேட்டின் படி 60 சங்கங்கள் உள்ளன. ஆனாலும் RID 3240ல் 40 சங்கங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன, அவற்றின் அலுவலக பொறுப்பாளர்கள் சமூக திட்டங்களை முன்னெடுத்து நிறைவேற்ற முன்வருமாறு ரோட்ராக்டர்களிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

நான் DRR பொறுப்புக்கு வந்தபோது மாவட்டத்தில் ரோட்ராக்ட் உறுப்பினர்களின் எண்ணிக்கை 878 ஆக இருந்தது. இதை 1000மாக உயர்த்துவதே எனது குறிக்கோளாகும். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 4 புதிய சங்கங்கள் திறக்கப்பட்டுள்ளன. வரலாற்று சாதனையாக ஆகஸ்ட் 28 ஆம் தேதி ஒரே நாளில் மட்டும் 175 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.

மேலும் அடுத்த ஆண்டு இந்த நேரத்தில் அருணாச்சல பிரதேசத்தில் புதிய ரோட்டரி சங்கம் உருவாகிவிடும் என்கிறார் ஜலான்.■

Rotary PEOPLE OF ACTION

# கோரக்பூர் ரோட்டரி சங்கத்துக்கு நிதியுதவி செய்யும் கார்பொரேட் நிறுவனம்

ரஷீதா பகத்



பள்ளி ஒன்றில் RC கோரக்பூர் அமைத்துள்ள கை கழுவும் வசதி.

2018–19 ஆம் ஆண்டில்தான் இது நடந்தது. உத்தரப்பிரதேச மாநிலம், கோரக்பூர் மாவட்டம், கௌரியா என்ற இடத்தில் பூர்வ மத்யமிக் வித்யாலயா பள்ளியை ரோட்டரி மாவட்டம் 3120க்கு உட்பட்ட கோரக்பூர் ரோட்டரி சங்கம் தத்தெடுத்து நடத்த வேண்டும் என்று செயலாளர் M P கண்டோய் யோசனை தெரிவித்தார்.

உடனே சங்கத்தின் உறுப்பினர்கள் அந்தப் பள்ளியை அழகு படுத்துவதிலும், கைகழுவும் நிலையம், கழிப்பறைகள் கட்டித்தருவதிலும், மின்னணு கற்றல் முறையிலான ஸ்மார்ட் வகுப்புகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதிலும் ஆர்வம் காட்டினர்.

அந்த பள்ளியை ரோட்டரி உறுப்பினர்கள் முன்னின்று அழுகுபடுத்தியது உள்ளூர் மகக்ள் பலரின் கவனத்தையும் கவர்ந்தது. அதுமட்டுமல்லாமல் கோரக்பூர் பகுதியில் உரத்தொழிற்சாலை நிறுவி வரும் டோயோ என்ஜினீயரிங் இந்தியா என்ற ஜப்பானிய நிறுவனத்தின் கவனத்தையும் ஈர்த்தது. உனடியாக அந்த கார்ப்பொரேட் நிறுவனம் மாவட்டம் 3120-இன் சமூக பொறுப்புணர்வு (CSR) பிரிவின் தலைவரும் முன்னாள் மாவட்ட ஆளுநரும் சங்கத்தின் உறுப்பினருமான அனுப் அகர்வாலைத் தொடர்பு கொண்டது. ரோட்டரியின் சமூகப் பணிக்கு தங்கள் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்ட நிதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு வலியுறுத்தியது. இந்த நிறுவனத்தின் தலைமையகம் மும்பையில் உள்ளதால் ஏற்கெனவே ரோட்டரியுடன் இணைந்து சில பணிகளை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர். கோரக்பூரிலும் ரோட்டரியுடன் இணைந்து செயலாற்ற விருப்பம் தெரிவித்தனர் என்றார் அகர்வால்.

ஜப்பானிய நிறுவனம் CSR நிதியுதவி திட்டத்தின் 32,500 டாலர் நிதி வழங்கத் தயாராக இருந்தது. ஆனால், தாங்கள் நன்கொடையாக அளிக்கும் நிதியை தாங்கள் கட்டி வரும் தொழிற்சாலை பகுதியைச்

சுற்றியுள்ள அரசு பள்ளிகளின் மேம்பாட்டுக்குத்தான் செலவிட வேண்டும் என்று நிபந்தனை விதித்தது. தங்கள் தொழிற்சாலை ஊழியர்களின் குழந்தைகளுக்கு பயனளிக்கும் வகையில் இது இருக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் எண்ணமாகும். மேலும் பணியை 2019ம் ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தது.

தொடக்கத்தில் டோயோ என்ஜினீயரிங் நிறுவனம் ரூ.20 லட்சம் கொடுப்பதாகத் தெரிவித்திருந்தது. பின்னர் கணக்குப் போட்டு பார்த்ததில் மேலும் நிதி தேவைப்படும் என தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த நிறுவனம் ரூ.23 லட்சம் தர முன்வந்தது. ரோட்டரியும் TRF மூலம் சர்வதேச மானிய உதவி அளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது என்றார் அகர்வால்.


சங்கம் அளித்த இருக்கைகளில் அமர்ந்துள்ள பள்ளிக்குழந்தைகள்.

இதன் விளைவாக சர்வதேச மானிய உதவி 60,129 டாலர். இதில் டோயோ என்ஜினீயரிங் நிறுவனத்தின் நன்கொடை 30,875 டாலர்.

இந்த நிதியின் மூலம் ரோட்டரி பணியைத் தொடங்கியது. 10 பள்ளிகள் மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. 391 செட் மேஜையுடன் இணைந்த பெஞ்சுகள், 14 கழிப்பறைகள், 12 ஸ்மார்ட் வகுப்புகளுக்கு மின்னணு கற்றல்முறைக்கு தேவையான உபகரணங்கள், குடிநீர் வசதி, 12 கைகழுவும் நிலையங்கள், 38 மின் விசிறிகள் மற்றும் 9 குடிநீர் சுத்திகரிப்பு கருவிகளும் வழங்கப்பட்டன.

இந்த திட்டம் 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டபடி 2019ம் ஆண்டு மார்ச் 31ந் தேதிக்குள் முடிக்கப்பட்டது. ரோட்டரியின் பணியை கார்ப்பொரேட் நிறுவனத்தினர் பாராட்டினர். அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் ரோட்டரியின் பணியை பார்வையிட்டு திருப்தி தெரிவித்தனர். அத்துடன் நில்லாமல் அந்த நிறுவனத்தின் செயலாளர் சுஹாஸ் பட்வர்தன் எங்களை மீண்டும் அணுகி மேலும் சிஆர்எஸ நிதி வழங்க ஆர்வமாக இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்த முறை என்னவிதமான பணியை மேற்கொள்ளப் போகிறீர்கள், அதற்கு எவ்வளவு நிதிவேண்டும் என்று சொல்லுங்கள் என்றும் கூறியதாக


RC கோரக்பூர் புதுபித்த பள்ளி ஒன்றில் RID பரத் பாண்டியா.



*ஸ்மார்ட் வகுப்பு.*

அகர்வால் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

நாங்கள் இந்த முறை அதிக எண்ணிக்கையில் மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். சுகாதாரத் திட்டத்திலும் கவனம் செலுத்த இருக்கிறோம் என்று கண்டோய் தெரிவித்தார். இந்த முறை 16 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டன. இந்த பள்ளிகளில் ஏற்கெனவே கழிப்பறை வசதிகள் இருந்தன. பள்ளி வளாகத்தை சீரமைத்து அழகுபடுத்த வேண்டும், ஸ்மார்ட் வகுப்புகளுக்கான மின்னணு கற்றல் உபகரணங்கள் வேண்டும், கை கழுவும் நிலையங்கள் வேண்டும், மாணவர்களுக்கு மேஜைகள், பெஞ்சுகள் வேண்டும், மின் விசிறிகள் வேண்டும், மாணவர்களுக்கு கற்பிக்க வெள்ளை நிற பலகைகள் வேண்டும் என்று கல்வி அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். இப்பணிகளை நிறைவேற்றவும், 16 பள்ளிகளையும் மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றவும் ரோட்டரி ஒப்புக்கொண்டது. இந்தத் திட்டத்துக்கான சர்வதேச மானிய உதவி 58,825 டாலர். இதில் டோயோ என்ஜினீயரிங் நிறுவனத்தின் பங்களிப்பு 39,875 டாலர்.

மூன்றாவது முறை CSR நிதியுதவித் திட்டத்துக்கும் அந்த நிறுவனம் மீண்டும் கோரக்பூர் ரோட்டரி ச ங்கத்தையே தெரிவு செய்தது. அறக்கட்டளை ஒன்றின் மூலம் செயல்பட்டு வரும் குரு ஷ்ரீ கோரக்நாத் சிகித்சாலையா மருத்துவ மனைக்கு புற்றுநோய் கண்டறியும் கருவி உள்ளிட்ட நோய் கண்டறியும் பிற கருவிகளையும் வழங்க முடிவு செய்யப்பட்டது. சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்துக்கு 1,34,028 டாலர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் டோயோ என்ஜினீயரிங் நிறுவனத்தின் CSR நிதிப் பங்கு ரூ.67.8 லட்சமாகும் (91,650 டாலர்). ரேடியோலஜி பிரிவுக்கு ரூ.40 லட்சம் மதிப்பில் கதிரியக்க கருவி வாங்கவும் இது தவிர ரூ.54.75 லட்சத்துக்கு இதர நோய்கண்டறியும் கருவிகள் வாங்கவும் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக இத்திட்டம் நிறைவேறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. கோரக்நாத் ஆலயத்துடன் இணைந்தது இந்த மருத்துவமனை. உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு இந்த ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 17ம் தேதி எங்கள் சங்கம் தொடங்கி 75வது ஆண்டுகள் பூர்த்தியாகி 76வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அன்றைய தினத்தில் முதல்வரைக் கொண்டு இத்திட்டத்தை தொடங்கிவைக்க திட்டமிட்டுள்ளோம் என்றார் அகர்வால்.

இந்தத் திட்டத்துக்கு ரூ.1.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. RIPE சேகர் மேத்தாவின் வழிகாட்டுதல்படி நாங்கள் செயல்பட்டு வருகிறோம். ரோட்டரி இந்தியா 100 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. முதன் முதலில் கொல்கத்தாவில் ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்டது. ரோட்டரி மிகப்பெரிய திட்டங்களை செயல்படுத்த முன்வர வேண்டும் என்று சேகர் மேத்தா கூறுவார். அதை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். இந்த திட்டத்தில் டோயோ என்ஜினீயரிங் நிறுவனத்தின் CSR நிதிப் பங்கு ரூ.1.2 கோடி.

டோயோ என்ஜினீயரிங், கோரக்பூர் ரோட்டரி சங்கம் செய்துவரும் பணிகள் குறித்து மகிழ்ச்சியும் திருப்தியும் தெரிவித்துள்ளனர். எங்களின் அடுத்த சமூக நலத் திட்டத்துக்கும் அவர்கள் நிதியுதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்று குறிப்பிட்டார் கண்டோய்.■

# கோவிட் பரிசோதனை வளாகத்தை மேம்படுத்திய நாக்பூர் ரோட்டரியன்கள்

ரோட்டரி செய்திக்குழு

நாக்பூர் டௌன்-டவுன் ரோட்டரி சங்கம், RID 3030, நாக்பூரிலிருக்கும் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள வைரல் ஆராய்ச்சி, நோய் கண்டறிதல் ஆய்வகத்துக்கு (VRDL) ஓர் உயர் தொழில் நுட்ப, தானியங்கி RNA / DNA பிரித் தெடுத்தல் கருவியை வழங்கியது. $42,250 மதிப்புள்ள இந்தப் பன்னாட்டு நல்கைத் திட்டம் RC சிகாகோ காஸ்மோபாலிடன், RID 6450, USA மற்றும் TRF ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டது. பெர்சிஸ்டென்ட் அறக்கட்டளை தன்னுடைய CSR முன்னெடுப்பின் ஒரு பகுதியாக ரூ.15 லட்சம் பங்களித்தது, லட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ரூ.2 லட்சம் வழங்கியது.



DG ஷபீர் ஷகீர், மாவட்ட ஆட்சியர் ரவீந்திர தகாரே, திட்டத்தலைவர் வீரேந்திர பட்ரிகர் VRDL மையத்தில்.

விதர்பா, சத்திஸ்கர் மற்றும் மத்தியப்பிரதேச மக்களுக்கு கோவிட்–19 பரிசோதனைகள் நடைபெறும் ஒரே இடம் VRDL தான் என்று திட்டத் தலைவர் வீரேந்திர பட்ரிகர் கூறினார். இந்த ஆய்வகத்தின் பரிசோதனைத் திறனை இப்புதிய கருவி நான்கு மடங்கு விரைவாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதற்குமுன், RNA /DNA பிரித்தெடுத்தல்கள் கைமுறையாகச் செய்யப்பட்டன, அதனால், எங்களுடைய PCR அமைப்புகள் சரியாகப் பயன் படுத்திக் கொள்ளப்படவில்லை, எங்களால் ஒரு நாளைக்கு 150 மாதிரிகளைமட்டுமே பரிசோதிக்க இயன்றது. இப்போது, இந்த மேம்பட்ட கருவியின்மூலம் நாங்கள் 500–600 பரிசோதனைகளைச் செய்யலாம்'' என்றார் VRDL உடன் இணைந்து பணியாற்றும் Dr ரவீந்திர கடாசெ.

மாவட்ட ஆட்சித்தலைவர் ரவீந்திர தகாரெ இந்த இயந்திரத்தை ஆய்வகத் திடம் வழங்கினார். DG ஷப்பிர் ஷகிர், IGGMH டீன் Dr அஜய் கியோலியா, சங்கத் தலைவர் நிஷாந்த் காஷிகர், முன்னாள் தலைவர் சந்தீப் தேஷ்பாண்டே, இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.■

# செய்தித்தாள் வழங்கும் பையன்களைப் பெருமைப்படுத்திய RC மாண்ட்வி



RC மாண்ட்வி, RID 3054, கட்ச்லோக் என்ற உள்ளூர் நாளிதழும் சேர்ந்து, 35 செய்தித்தாள்கள் விநியோகிப்பவர்களை பெருமைப்படுத்தினார்கள். முடக்கம், கோவிட் நோய்ப்பரவலின் போதும் ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் தொடர்ந்து செய்தித் தாள்களை வழங்கிய இவர்களுடைய துணிச்சலைப் பாராட்டிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவர்களுக்கு முகக்கவசங்கள், தூய்மைப் படுத்திகள், பகிர்தல் பொருட்களையும் சங்கம் வழங்கியது.

மாண்ட்வியிலிருக்கும் சுமார் 9,450 வீடுகளுக்கு இவர்கள் செய்தித்தாள்களை ஒரு நாள் விடாமல் வழங்கியுள்ளார்கள்.

இச்சங்கம் PM CARES நிதிக்கு ரூ.25,000 பங்களித்தது.■

# RILMன் லட்சியக் கனவு 2025க்குள் எழுத்தறிவு பெற்ற இந்தியா

ஜெய்ஸ்ரீ

2025ம் ஆண்டுக்குள் இந்தியாவில் அனைவரும் எழுத்தறிவு பெற்றவர் களாக இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு TEACH திட்டத்தை ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம் (RILM) முழுவீச்சில் செயல்படுத்தி வருகிறது என்று அதன் தலைவர் PRIP கல்யாண் பானர்ஜி அண்மையில் மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற மெய்நிகர் நிகழ்ச்சியில் தெரிவித்தார். RILM தலைவர் கமல் சங்வி மற்றும் RIPE சேகர் மேத்தா இருவரும் முன்னின்று நடத்திய இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்துக்கும் மேலானவர்கள் பங்கேற்றனர். இது முகநூல் (ஃபேஸ்புக்), யூடியூப் ஆகியவற்றிலும் நேரலையாக ஒளிபரப்பானது.

2014ம் ஆண்டு தொடங்கப்பட்ட திலிருந்தே RILM ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

ஆஷா கிரண் திட்டம் 40,000 குழந்தைகளை முறையான பள்ளிப் படிப்பில் சேர்க்க உதவியது; 20,000 பள்ளிகள் மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் 4,000 நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கல்யாண் பானர்ஜி கூறினார், மேலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஆதரவைப் பாராட்டினார். இந்தியாவில் உள்ள அனைவரும் எழுத்தறிவு பெறும் வரை இந்த உறவு தொடர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இளைஞர்களை வேலைக்கு அமர்த்தும் முயற்சியாக அப்பல்லோ மருத்துவமனைக் குழுமத்துடன் இணைந்து RILM “மருத்துவத்திறன்’ திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் இளைஞர்களுக்கு மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் நோய் கண்டறியும் மையங்களில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தமுடியும் என்றார் கமல் சங்வி. இதற்காக மூன்றுமாத பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்த வகுப்புகளில் சேர வெளியில் ரூ.50,000 வரை செலவிட வேண்டியிருக்கும். ஆனால், ரோட்டரி பரிந்துரைக்கும் நபர்களுக்கு ரூ.4500 கட்டணத்தில் பாட வகுப்புகள் நடத்தப்படும். 30 நாட்கள் ஆன்லைன் வகுப்புகளும், 60 நாள் மருத்துவநிலையங்களில் நேரடி பயிற்சி வகுப்பும் நடைபெறும். ரோட்டரியினர் தங்கள் பகுதியில் உள்ள இளைஞர்கள் இந்த வகுப்புகளில் சேர நிதியுதவி செய்யலாம். அப்பல்லோவில் மட்டும் 28 திறன் வளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட நகரத்தில் இளைஞர்கள் அதிக அளவில் ஆர்வம் காட்டினால் அங்கு புதிய மையங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படும். ஒரு வருஷத்தில் 50 ஆயிரம் இளைஞர்களாவது பயிற்சி பெற வேண்டும் என்பதுதான் எனது நோக்கமாகும் என்றார் அவர்.



டிஜிட்டல் முறையில் பாடங்கள் நடத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். கொரோனா அச்சுறுத்தல் காலம் எப்போது முடியும் என்பது தெரியாத நிலையில் ஆன்லைன் வகுப்புகள் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆசிரியர்களும் மின்னணு கல்வி தொடர்பான தொழில்நுட்பங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றார் கமல் சங்வி.

இதுபோன்ற பயிற்சி வகுப்புகளை நடத்த RILM ஆதரவு அளிக்கும் என்றும் ஒரு மாதத்தில் 5,00,000 லட்சம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதே லட்சியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரோட்டேரியன்கள் அதிக அளவில் மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்க முன்வர வேண்டும் என்று RILM தலைவர் சேகர் மேத்தா வலியுறுத்தினார். ஒரு மகிழ்ச்சிப்



*மத்திய கல்வித்துறை அமைச்சர் ரமேஷ் போக்ரியால் நிஷாங்க்.*

பள்ளியை உருவாக்க ரூ.3 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை செலவிடப்படுகிறது. படிப்பதற்கு நல்ல சூழல் இருந்தால்தான் குழந்தைகள் நன்கு கல்வி கற்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை மின்னணு கல்வி தொடர்பான பாடங்களை தொகுப்பதில் ரோட்டரி மற்றும் NCERT இடையே கடந்த ஜூலை மாதம் அமைச்சர் நிஷாங் முன்னிலையில் ரோட்டரி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதை மேத்தா நினைவு கூர்ந்தார்.

வயதுவந்தோர் கல்வி பற்றி குறிப்பிட்ட மேத்தா, இன்டராக்டர்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் மூலம் இதுவரை ஒருலட்சம் பேருக்கு கல்வி கற்பிக்கப்பட்டு எழுத்தறிவு பெற்றுள்ளதாகத் தெரிவித்தார். இந்தியாவில் மொத்தம் 27 கோடி முதியோர்கள் எழுத்தறிவு இல்லாமல் உள்ளனர். இவர்களில் 7 கோடி பேர் எழுத்தறிவு பெறமுடியாத அளவுக்கு வயதானவர்கள். மீதமுள்ள 20 கோடி பேரில் 10 கோடி பேரை எழுத்தறிவு பெற்றவர்களாக உருவாக்க ரோட்டரி முயற்சி மேற்கொண்டு வருகிறது.

வயதுவந்தோருக்கு இளைஞர்கள் கல்வி கற்றுக் கொடுக்க வசதியாக ஐந்து பக்க கையேட்டை தயாரிக்க ரோட்டரி தயாராக உள்ளது. இது தொடர்பாக மத்திய அரசு ரோட்டரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வர வேண்டும் என்று மேத்தா வலியுறுத்தினார்.

ரோட்டரி திறன்மிகுந்த வலுவான இயக்கம். அதற்கு கல்வித்துறையின் ஆதரவு எப்போதும் உண்டு என்று அமைச்சர் நிஷாங்க் பேசுகையில் குறிப்பிட்டார். எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்த உணர்வுபூர்வமான அணுகுமுறை தேவை. நாம் எத்தனைப் பேரை இதில் ஈடுபடுத்துகிறோம் என்பது முக்கியமல்ல, எத்தனைப் பேர் முழு ஈடுபாட்டுடன் இதில் செயல்படுகிறார்கள் என்பதுதான் முக்கியம். நல்ல அணுகுமுறையும், திறமையும் இருந்தால் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும் என்றார்.

எழுத்தறிவு திட்டத்தை மேம்படுத்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அதில் ஈடுபடுத்த வேண்டும். இத்திட்டத்தில் தொழில் பயிற்சியையும் சேர்ப்பது பற்றியும் பரிசீலிக்கலாம் என்றார்.

புதிய கல்விக் கொள்கை குறித்தும், அது இளைஞர்கள் கல்வி கற்பதில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது குறித்தும் அமைச்சர் பேசினார்.

ஆன்லைன் வகுப்புகளுக்கான பாடங்களை வகுப்பதில் ரோட்டரி, அரசுடன் இணைந்து செயல்படுவதை அவர் பாராட்டினார். ஸ்மார்ட் போன்கள் அல்லது இணையதள வசதி இல்லாத குழந்தைகளுக்கு "ஒரு வகுப்பு-ஒரு அலை வரிசை" திட்டம் சென்றடைகிறது. மேலும் ஆன்லைன் கற்றல் தளத்தில் 31 கோடி மாணவர்கள் சாதனை அளவாக பயன் பெற்றுவருவது பாராட்டத்தக்கது என்றும் அமைச்சர் நிஷாங்க் கூறினார்.■



# நள்ளிரவு நொறுக்குத்தீனிகள்

ஹாங்க் சார்ட்டின்



ஜூன் மாதம் 12ம் தேதியிலிருந்து 16ம் தேதி வரை நடைபெறவுள்ள 2021 ரோட்டரி பன்னாட்டுச் சந்திப்புக்காக தைபே நகருக்கு வரும் போது, ஒவ்வோர் இரவும் இரவு சந்தையை கண்டு மகிழலாம்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஷிலின் இரவுச் சந்தை இயங்கிவருகிறது. அநேகமாக இந்நகரின் மிகப் புகழ் பெற்ற சந்தை இதுவாக தான் இருக்கும். முதலில், இங்குள்ள தேசிய அரண்மனை அருங்காட்சியகத்தைக் காணுங்கள், பிறகு, அதற்கு அருகில், பிற்பகலின் பின் பகுதியில் தொடங்கும் சந்தைக்கு வாருங்கள்.

ஷிலின் சந்தையில் ஜியான்டன் மெட்ரோ நிலையத்துக்கு அருகில் வெளி உணவுக் கடைகள் உள்ளன; மற்ற பொருட்கள் யங்மிங் ப்ளாஸா என்ற இடத்துக்கருகில் கிடைக்கின்றன.

இங்கு நீங்கள் கண்டிப்பாகக் காணவேண்டிய இன்னொரு புகழ் பெற்ற இடம் லின்ஜியாங் தெரு இரவுச் சந்தை, இதை டங்குவா தெரு இரவுச் சந்தை என்றும் சொல்வார்கள். இது தைபே 101 கோபுரத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

ஓர் இரவுச் சந்தைக்குச் செல்லுமுன், கொஞ்சமாக இரவு உணவு சாப்பிடுங்கள். அப்போது தான், தைவானியத் தெரு உணவின் சுவைப்பண்டங்களை ருசிபார்க்க வயிற்றில் இடமிருக்கும். எடுத்துக்காட்டாக, வெங்காயத்தாள் பேன்கேக்குகள், வாணலியில் பொரித்த டம்ப்ளிங்குகள், பலப்பல வகைகளில் கிடைக்கும் வாட்டப்பட்ட சாசேஜ்கள் ஆகியவற்றை முயன்று பாருங்கள். "நாற்ற மடிக்கும் டோஃபு" என்ற பெயரைக் கேட்டதும் கொஞ்சம் குழப்பம் வரலாம், ஆனால்,அதை நன்கு பொரித்துப் பூண்டு சாஸுடன் சாப்பிட்டால் நல்ல சுவையாக இருக்கும். அல்லது, உங்களுக்குப் பிடித்த சாஸ்களுடன் நீங்கள் நூடுல்ஸைச் சப்புக் கொட்டிச் சாப்பிடலாம்.

convention.rot*ary.org* இணைய தளத்தை பாருங்கள்.

# திருநங்கைகளுக்கு நம்பிக்கை ஒளியேற்றும் ரோட்டரி

ரஷீதாபகத்



PDG Dr *ஜமீர்பாஷா, அவர் மனைவி ஷகீலா, சங்கத்தின் முன்னாள் தலைவர்* S *ஹேமலதா மற்றும் சிவானந்தா பாலாலயா பள்ளி தலைவர்* N R K *பாபு.*

கடந்த 2018ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், அனைத்து பெண் உறுப்பினர்களின் சங்கமான திருச்சிராப்பள்ளி சக்தி ரோட்டரி சங்கத்தின் தலைவர் பதவியை ஏற்க S ஹேமலதா தயாராகி வந்தார். அந்த சங்கத்தில் மொத்தம் 41 உறுப்பினர்கள் இருந்தனர். புதிதாக தலைமைப் பதவிக்கு வருபவர்கள் ஏதாவது ஒரு புதிய திட்டத்தை அறிவித்து செயல்படுத்த விரும்புவது வழக்கம். அதுபோலவே ஹேமலதாவும் தனது பதவிக்காலத்தில் (2019–2020) செயல்படுத்த ஒரு நல்ல திட்டத்தைத் தேடிக்கொண்டிருந்தார்.

இந்த சமயத்தில் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரான சுனிதா ரெட்டி என்னிடம், திருநங்கை குழந்தைகளுக்கு வீட்டு வசதி, கல்வி, கௌரவமான வாழ்க்கை இவற்றை வடிவமைத்து செயல்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆர்வம் இருக்கிறதா என்று கேட்டார். அவரது யோசனையின் பேரில் உதித்ததுதான் திருநங்கைகள் அல்லது மூன்றாவது பாலின குழந்தைகளுக்கு தங்கும் விடுதி கட்டித்தரும் திட்டம் என்று நினைவுகூர்ந்தார் ஹேமலதா.

சுனிதாவின் கணவரான NRK பாபு, இந்திய ராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றவர். சுவாமி சிவானந்த வித்யா சமிதி அறக்கட்டளை சார்பில் நடைபெறும் சிவானந்த பாலாலயா பள்ளியில் தலைமைச் செயல் அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். இந்தப் பள்ளியில் மொத்தம் 450 மாணவர்கள் படித்து வருகின்றனர். இவர்களில் 100 பேர் சிறப்புக் குழந்தைகள். ஒருவர் மட்டும் திருநங்கை அல்லது மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்.

சுனிதா ரெட்டி சொன்ன யோசனை ஹேமலதாவுக்குப் பிடிக்கவே அதை தமது சங்கத்தின் திட்டமாக செயல்படுத்த முடிவு செய்தார். மானிய உதவி ரூ.8 லட்சம் மற்றும் சங்க உறுப்பினர்கள் கொடுத்த ரூ.1 லட்சம் மற்றும் கட்டிடக்கலைஞரான சிந்துஜா தொழில்முறையில் ரூ.1 லட்சம் மதிப்பிலான சேவைகளை இலவசமாக அளிக்க முன்வந்தது ஆகியவற்றின் பேரில் 2019 ஜூலை 27ம் தேதி ரூ.10 லட்சம் மதிப்பிலான புதிய திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் தங்கும் விடுதியை முன்னாள் மாவட்ட

ஆளுநர் ஜமீர்பாஷா, விடுதியை திறந்துவைத்தார். மேஜர் ஜெனரல் பாபு, தற்போது சங்கத்தின் தலைவராக இருக்கும் வளர்மதி, செயலாளர் பிரியா வனராஜ், ஹேமலதா ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



மெய்நிகர் நிகழ்ச்சியில் DG A L சொக்கலிங்கம், PDG M முருகானந்தம் மற்றும் பலர்.

### மூன்றாம் பாலினக் குழந்தைகளின் மோசமான நிலை:

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன் இதுபற்றி ஆய்வு செய்தபோது மூன்றாம் பாலினக் குழந்தைகளின் நிலையை கேட்டபோது பரிதாபகரமாக இருந்தது என்கிறார் அச்சுத்தொழில் மற்றும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கான பரிசுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஹேமலதா. இத்தகைய குழந்தைகளை பெற்றெடுக்கும் தாய்மார்கள் இதை சமூக களங்கம்போல் பாவித்து அவர்களை வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிடுகின்றனர். பலவீனமான வயதில் இக்குழந்தைகள் சமூக விரோதிகள், கிரிமினல் கும்பல்களிடம் சிக்கி குற்றச்செயல்களிலும் வன்முறை வாழ்க்கையிலும் ஈடுபடுகிறார்கள். ஆனால், இப்போது இதுபோன்ற குழந்தைகளை வீட்டைவிட்டு பெற்றோர்கள் வெளியேற்றுவது தெரிய வந்தால் அவர்களுக்கு சட்டத்தின் மூலம் கடுமையான தண்டனை வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

38 திருநங்கை குழந்தைகள் தங்கும் வசதி கொண்ட இந்த இரண்டு மாடி கட்டடத்துக்குத் தேவையான நிலத்தை பள்ளி நிர்வாகம் நன்கொடையாக அளித்துள்ளது. அவர்களுக்கு தரமான கல்வி அளிப்பதையும் உறுதிசெய்துள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக பள்ளி மூடப் பட்டுள்ளது. எனவே தங்கும் விடுதிக்கு மூன்றாம் பாலின குழந்தைகள் எவரும் சேர்க்கப் பட்டவில்லை. சில சமூகத்தில் உள்ள பெற்றோர்கள் தங்களின் மூன்றாம் பாலினக் குழந்தைகளை தாங்களே பராமரிக்கவும் அவர்களுக்கு தரமான கல்வி அளிக்கவும் முன்வந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார் ஹேமலதா.

ஆகஸ்ட் மாதத்தின் நடுப்பகுதியில் திருச்சிராப்பள்ளி சக்தி ரோட்டரி சங்கம் சார்பில் திருநங்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மெய்நிகர் மாநாடு நடத்தப்பட்டது. இதில் பலர் கலந்துகொண்டனர். மாநாட்டுக்கு ரோட்டரி மாவட்டம் 3000 ஆளுநர் A L சொக்கலிங்கம் தலைமைவகித்தார். அவரும் எங்கள் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார். இத்திட்டத்துக்கு சிவசக்தி என பெயரிடப்பட்டது. அது மட்டுமல்லாமல் திருநங்கைகள் நலவாழ்வு மற்றும் அதிகாரம் அளித்தல் திட்டத்தின் மாநில தலைவராக என்னை நியமித்தார். எங்கள் திட்டக்குழுவின் உறுப்பினராக உள்ளூர் அரசு நிர்வாக குழந்தைகள் நலத்துறை அதிகாரி இடம்பெற்றிருந்தார் என்றார் ஹேமலதா.



திருநங்கைகள் உரிமைகள் ஆர்வலர் கல்கி சுப்ரமணியம்.

உங்கள் தங்கும் விடுதிக்கு 38 மூன்றாம் பாலினக் குழந்தைகளை எப்படி தேடி கண்டுபிடிப்பீர்கள் என்று கேட்டதற்கு, குழந்தைகள் நல அரசு அதிகாரி இதற்கு உதவியாக இருப்பார். மேலும் சமூக வலைத்தளங்கள் மூலமும் ரோட்டரி இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது என்று ஹேமலதா தெரிவித்தார்.

இது ஒரு தங்கும் விடுதி என்பதால் இந்தியாவில் எந்த இடத்திலிருக்கும் ஒருவர் தங்களுக்குத் தெரிந்த, வேறுதங்குமிடம் இல்லாத மூன்றாம் பாலினக்குழந்தைகளை

எங்களுக்கு பரிந்துரைக்கலாம். அவர்களுக்கு நாங்கள் தங்குவதற்கு இடம் கொடுப்பதுடன், கல்வி கற்கவும் ஏற்பாடு செய்வோம். பள்ளியில் படிக்க கல்விக் கட்டணம் செலுத்த முடியாதவர்களுக்கு சங்கத்தின் மூலம் ஸ்பான்ஸர்கள் கண்டுபிடித்து உதவு வோம் என்றார் அவர். இவர்களுக்கு தையல் பயிற்சி அளித்து அதன் மூலம் அவர்கள் வாழ்வாதாரத்தை தேடிக் கொள்ளவும் சங்கத்தின் மூலம் உதவி யளிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

திருநங்கைகள் அல்லது மூன்றாம் பாலினக் குழந்தைகளை சாதாரண குழந்தைகளைப் போல கருதவேண்டும், அவர்களுக்கு ஒழுக்கமான, தரமான கல்வியைத் தரவேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வை எங்கள் திட்டம் ஏற்படுத்தும் என்று நம்புகிறோம். இதற்கு ஒரு உதாரணம் திருநங்கைகள் உரிமைகள் ஆர்வலர், நடிகை மற்றும் எழுத்தாளர் கல்கி சுப்பிரமணியம். நிகழ்ச்சியில் அவர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். ஆணாகப் பிறந்த இவர், பின்னர் பாலின மாற்று அறுவைச்சிகிச்சை மூலம் பெண்ணானார். பெற்றோர் இவரை ஒதுக்கவில்லை. ஆனால், அவருக்கு ஆதரவாக இருந்து கல்வி கற்க வைத்தனர். அவர் இன்று சமூகத்திற்கு பயனுள்ள நபராக இருக்கிறார். ஒரு தொண்டு நிறுவனத்தை தொடங்கி திருநங்கைகளுக்கு ஆதரவாக இருக்கிறார். நிகழ்ச்சியில் பேசிய கல்கி, இந்த குழந்தைகள் பாகுபாடில்லாத சூழலில் கண்ணியத்துடன் வாழ்வது முக்கியமானது என்றார். தனது அனுபவங்களைக் கூறிய கல்கி, திருநங்கை அல்லது மூன்றாம் பாலினக் குழந்தைகள் அவர்கள் குடும்பத்துடனேயே வாழ்வதற்கான வழிவகைகளை நாம் செய்ய வேண்டும். இதற்காக அவர்களின் பெற்றோர், இதர குடும்ப உறுப்பினர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், மருத்துவர்கள், நீதித்துறையினர் ஆகியவர்களுடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துவது அவசியம் என்றார். மூன்றாம் பாலினக் குழந்தைகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டினாலொழிய அவர்களுக்கு வளமான வாழ்வை நாம் தரமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாவட்ட ஆளுநர் சொக்கலிங்கம் பேசுகையில், மூன்றாம் பாலினக் குழந்தைகள் சந்திக்கும் பிரச்னைகளையும் அவர்களுக்கு கண்ணியமான வாழ்வு அளிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் திட்டக்குழு தலைவர் ஹேமலதா, இணை தலைவர் விஜயஸ்ரீ, ஒருங்கிணைப்பாளர் கவிதா ஆகியோரின் முயற்சிகளைப் பாராட்டினார். இந்த மெய்நிகர் நிகழ்ச்சியில் 300க்கும் மேலான ரோட்டேரியன்கள் பங்கேற்றனர்.

ஸ்ரீ சிவானந்தா பாலாலயாவின் தலைமைச் செயல் அதிகாரி மேஜர் ஜெனரல் N R K பாபு, மூன்றாம் பாலினக் குழந்தைகளுக்கு நாங்கள் தங்குமிடம் அளிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் கல்விகற்கவும், தனித்து உணராமல் அவர்களையும் மற்றக்குழந்தைகளைப் போல் கருதவும் நடவடிக்கை எடுக்கப்படும். சமூகத்தில் ஏற்பட்ட களங்கம் என மூன்றாம் பாலினக் குழந்தைகளை கைவிட நினைக்கும் பெற்றோர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு என்றும் தெரிவித்தார்.

மனநல மருத்துவரும் ரோட்டேரியனுமான டாக்டர் கவிதா ஃபென், மூன்றாம் பாலினக் குழந்தைகளை கையாளும்போது நினைவில் கொள்ள வேண்டிய ஐந்து முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டார்.

- முதலில் அவர்கள் ஏன் மாறுபட்டு இருக்கிறார்கள் என்கிற உண்மைகளைத் தெரிந்துகொள்ளுங்கள். பின்னர் மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுங்கள்.
- சில சமயங்களில் நாம் சொல்லும் வார்த்தைகள் அவர்கள் மனதை புண்படுத்தலாம் அல்லது கொன்றுவிடலாம். எனவே மூன்றாம் பாலினக்குழந்தைகளுடன் எப்படி நடந்துகொள்ள



மூன்றாம் பாலினருக்கான தங்கும் விடுதி.



*சிவானந்த பாலாலயா பள்ளியில் மாணவ மாணவியர்.*

வேண்டும் என்று மற்றவர்களுக்கு கற்றுக்கொடுங்கள்.

- நமது குழந்தைகளுக்கு நாம்தான் சகிப்புத்தன்மையை கற்றுக்கொடுக்க வேண்டும். மூன்றாம் பாலினக் குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகள் இப்படி மாறும்போது மிகுந்த வேதனை அடைகிறார்கள். இதுபோன்ற குழந்தைகளை நாம் ஒருபோதும் தனிமைப்படுத்தக்கூடாது. பிறந்தநாள் விழா உள்ளிட்ட பொது விழாக்களில் பங்கேற்க வருமாறு அவர்களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும். இப்படிச் செய்வதன்மூலம் அவர்கள் வீட்டைவிட்டு வெளியேறிச் செல்வதைத் தடுக்க முடியும்.
- யாராவது அவர்களிடம் பாகுபாட்டுடன் நடந்து கொண்டால் ஆட்சேபம் தெரிவியுங்கள். அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுங்கள். சும்மா வீட்டிலிருந்தபடியே மூன்றாம் பாலினத்தவர் மீது பரிவுகாட்டுவது எந்தவிதத்திலும் உதவாது. நாம் அவர்களுக்கு பரிவுகாட்டும் அதே நேரத்தில் அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும். நம்மால் முடிந்தவரை அவர்களுக்கு உதவ வேண்டும்.
- திருநங்கைகள் அல்லது மூன்றாம் பாலினத்தவர்கள் மீது வெறுப்பு காட்டாமல் அவர்களையும் நம்மில் ஒருவராகக் கருதும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.

மகாபாரதம் போன்ற பழங்கால காவியங்களில் திருநங்கைகள் இருந்ததையும் அவர்களை அனைவரும் ஏற்றுக்கொண்டதையும் PDG M முருகானந்தம் (மாவட்டம் 3000-த்தின் பயிற்சியாளர்) விளக்கிக் கூறினார். மகாபாரதத்தில் வரும் சிகண்டி என்ற கதாபாத்திரத்தையும் பெண்ணாக பிறந்த அவர் பின்னர் ஆணாக மாறிய கதையையும் அவர் கூறினார். சிகண்டி, துருபத மன்னனின் மகள். அதுமட்டுமல்ல, பாண்டவர்களை மணந்துகொண்ட திரௌபதியின் சகோதரி. பெண்ணாக பிறந்தபோதிலும் அவர் ஒரு ஆண் மகன் போல் வளர்க்கப்பட்டார். பின்னர் ஆணாக மாறிய பின் அனைத்து போர்க்கலைகளையும் கற்றுக்கொண்டு போர் வீரனாக உருவெடுத்தார் என்றார் முருகானந்தம். ரோட்டேரியன்கள் திருநங்கைகளுடன் அன்பும் பரிவும் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்ட அவர், திருச்சிராப்பள்ளி சக்தி ரோட்டரி சங்கம் திருநங்கைகளின் நல்வாழ்வுக்காக ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டினார்.

திருநங்கைகளுக்கு உடனடி ஆதரவு தெரிவிக்கும் அடையாளமாக மூன்றாம் பாலித்தனவர்கள் வரைந்த ஓவியங்களை கல்கி சுப்பிரமணியம் ஏலம் விட்டார். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது என்று தெரிவித்தார் ஹேமலதா.

எங்களின் மெய்நிகர் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ரோட்டேரியன்கள், திருநங்கைகளை தங்களது நிறுவனத்தில் பணியமர்த்தி ஆதரவு அளிக்க போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தனர். இதுவே எங்கள் திட்டத்தின் வெற்றி என்பது தெளிவாகத் தெரிந்தது. இதுபோன்று மாவட்டத்தில் உள்ள ரோட்டேரியன்கள் திருநங்கைகளுக்கு ஆதரவு அளிக்க முன்வந்தால், நாங்கள் திருநங்கைகள் தான். எங்களாலும் மாற்றத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று அச்சமின்றி கூறுவார்கள் என்றார் ஹேமலதா.■

# இதயங்களை வென்ற ரோட்டரி கோவிட் மையம்

கிரண் ஜெஹ்ரா



*விளையாட்டுப் பொருட்களுடன் குழந்தை பகீஸா சலீம்.*

மகாராஷ்டிராவின் அகமதுநகரில் உள்ள ரோட்டரி கோவிட் சிகிச்சை மையத்தில் ஒரு பிளாஸ்டிக் தடுப்பின் பின்னால் இருந்து ரஸியா, தனது ஏழு வயது மகள் பகீஸா சலீமிடம் செல்லிடப்பேசியில் பேசும்போது முத்தங்களை பகிர்ந்து கொண்டார். RID 3132க்கு உட்பட்ட அகமதுநகர், அகமதுநகர் மிட் டவுன், அகமதுநகர் பிரியதர்ஷினி, அகமது நகர் சென்ட்ரல் மற்றும் அகமதுநகர் இண்டக்கிரிடி ஆகிய ஐந்து ரோட்டரி சங்கங்கள் இணைந்து இந்த கோவிட் சிகிச்சை மையத்தை அமைத்திருந்தது. பரிசோதனையில் கொரோனா தாக்குதல் அறிகுறி இருந்ததால் பகீஸா சிகிச்சைக்காக இந்த மையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தாய் ஒரு பக்கம் சோகத்துடன் இருந்தபோதிலும் குழந்தை, பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்தது. பின்னர் குணமடைந்ததும் அந்தக் குழந்தை வீடு திரும்பியது. இந்த மையத்தில் குழந்தைகள் விளையாடுவதற்காக பொழுதுபோக்கு பொருள்களை ரோட்டரி சங்கங்கள் நற்சிந்தனையுடன் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த மையம் கடந்த ஒரு மாதத்தில் 90 குழந்தைகள் உட்பட 1,000க்கும் மேற்பட்ட அறிகுறியற்ற கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளது. உலக சுகாதார நிறுவனம் மற்றும் இந்திய அரசின் விதி முறைகளுக்கு ஏற்ப இந்த மையம் ரூ.10 லட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அகமது நகர் மிட்டவுன் ரோட்டரி சங்கத் தலைவர் ஷிதிஜ்ஜவாரே தெரிவித்தார். உள்ளூர் மருத்துவமனைகள் நோயாளிகளை இந்த மையத்துக்கு அனுப்புகின்றன. ஏழைகளுக்கு நாங்கள் கட்டணம் எதுவும் வாங்குவதில்லை.

கொரோனா தொற்று அறிகுறியில்லாத நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை. இதுபோன்ற மையங்களில் சிகிச்சை பெற்றாலே போதுமானது. இதன் மூலம் கொரோனா நோய்த் தொற்றால் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகள் பலர் மருத்துவ மனையில் சேர்ந்து சிகிச்சை பெறமுடியும்.

அவசர காலங்களில் தேவைக்காக இரண்டு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. தேவைப்பட்டால் நோயாளிகளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லவும் ஆம்புலன்ஸ் தயார் நிலையில் உள்ளது. இந்த மையத்தில் இரண்டு மருத்துவர்களும், நான்கு செவிலியர்களும் ஷிப்ட் முறையில் பணிபுரிகிறார்கள் என்று தெரிவித்தார் மையத்தின் பொறுப்பாளரும் ரோட்டரி சங்க உறுப்பினருமான Dr ராஜ்குமார்.

அகமத்நகர் மாநகராட்சி உதவியுடன், அரசு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் விடுதியில் 150 படுக்கைகளுடன் அமைக்கப்பட்ட இந்த மையத்தில் ஆக்ஸிமீட்டர், மருத்துவக் கழிவு மேலாண்மைப் பிரிவு, கண்காணிப்பு கேமராக்கள், பணியாளர்கள் குடியிருப்பு, துணிகளை சலவை செய்யும் பிரிவு என பலவச திகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கும் தனிநபர் பாதுகாப்பு உடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் இங்கு சிகிச்சைக்குச்



DG *ஹரீஷ் மோட்வானி (வலதிலிருந்து நான்காவது) ரோட்டரி கோவிட் மையத்தை திறந்து வைக்கிறார்.*



*76 வயது கர்பாஸ் சிகிச்சை முடிந்து வீடு திரும்புகிறார்.*

சேர்ந்த 76 வயது கர்பாஸ், குணமடைந்து வீடு திரும்பினார். ரோட்டரியினர் கடவுள் போல் எங்களை காக்கின்றனர். குடும்ப உறுப்பினர்கள் எங்களுடன் இருக்க முடியாத ஒரு காலகட்டத்தில், ரோட்டேரியன்கள் எங்களுக்கு சூடான உணவும் வசதியான தூக்கமும் கிடைப்பதை உறுதி செய்கிறார்கள். நான் முழு மனதுடன் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன் என்றார்.

இந்த மையத்தில் ரூ.15 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட சமையலறையிலிருந்து சூடான, ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இது தவிர ஆயுர்வேத மருந்துகளும் வழங்கப்படுகின்றன. சமையலறை தொடர்ந்து இயங்குவதற்கு தேவையான மளிகைப் பொருள்கள் வழங்குவது மற்றும் அதற்குத் தேவையான நிதியை திரட்டும் பணியில் அனைத்து ரோட்டரி சங்கங்களும் ஈடுபட்டுள்ளன என்கிறார் ஜவாரே. சமீபத்தில் இந்த மையம் கணேச சதுர்த்தி மற்றும் சுதந்திர தின விழாவை நோயாளிகளுடன் சேர்ந்து கொண்டாடியது குறிப்பிடத்தக்கது. ■

# சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களுடன் உரையாடிய பழங்குடியின மாணவர்கள்

ரஷீதா பகத்

ரோட்டரியன்கள் உண்மையான "செயல் வீரர்கள்" என்பதையும், மிக மோசமான பேரழிவுகளைக் கண்டும் அவர்கள் துவள்வதில்லை என்பதையும் இன்னொரு முறை நிரூபிக்கும்விதமாக, ரோட்டரி உலகை இணைக்கிறது'' மற்றும் ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கிறது'' என்கிற இரண்டு தலைவர் கருப்பொருட்களுக்கு இணங்கும்விதமாக, செகந்திராபாத் வெஸ்ட் ரோட்டரி சங்கம் மற்றும் BITS பிலானி, ஹைதராபாத் வளாக ரோட்டராக்ட் சங்கத்தினர் ஒரு தனித்துவமான திட்டத்தைத் தொடங்கியுள்ளார்கள்.

கொரோனா தன்னுடைய கரங்களை உலகெங்கும் பரப்புகின்ற இந்த நேரத்தில், தொலைதூரக் கிராமப்புறப் பகுதிகளைச் சேர்ந்த சில பழங்குடியின மாணவர்களுக்கு ஒரு மெய்நிகர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வழிகாட்டுதல் நிகழ்ச்சி குருகுலம் என்ற பெயரில் நடத்தியது.

மூன்று மணிநேரம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி வருங்காலத் தொழில் நுட்பங்களைப்பற்றிப் பேசியது. இந்த அறிவு, இளம் பட்டதாரிகள் மிகச் சிறந்த தொழில் நுட்ப நிறுவனங்களில் வேலைகளைப் பெறுவதற்கு உதவும். இந்த மாநாட்டில் ஃபேஸ்புக், கூகுள், IBM, TCS, பெப்சிகோ, டெக் மகிந்திரா போன்ற பெருநிறுவனங்களைச் சேர்ந்த மூத்த வல்லுனர்கள் மாணவர்களுடன் உரையாடினார்கள், கணினி உலகத்தில் ஏற்பட்டுவரும் இப்போதைய முன்னேற்றங்கள் வழங்கும் பல வாய்ப்புகளைப்பற்றிப் பேசினார்கள் என்றார் RC செகந்திராபாத் வெஸ்ட் சங்கத்தின் தலைவர் S திவாகெர் ரெட்டி.

இந்த மாநாட்டின் நோக்கம், பழங்குடியின மற்றும் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களைப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களின் முன்னணித் தலைவர்களுடன் உரையாடச் செய்வது தான் என்றார். தெலங்கானா மாநிலத்தின் மிகத் தொலைதூரப் பகுதிகளிலிருந்து வருகிற, தெலங்கானா பழங்குடியினர் நலன் கிராமப்புறப்பட்டக் கல்லூரி மாணவர்கள், இது போன்ற பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த எட்டுத் தலைவர்கள் பேசு வதைக் கேட்கிற, அவர்களுடன் உரையாடுகிற அரிய வாய்ப்பை முதன்முறையாகப் பெற்றார்கள். இம்மாநிலத்தின் பழங்குடியினப் பகுதிகளைச் சேர்ந்த இந்த மாணவர் களில் பெரும்பாலானோர் முதல் தலைமுறையாகப் பள்ளிக்குச் செல் கிறார்கள், இவர்கள் அனைவரும், வாழ்க்கையில் பெரிய அளவில் சாதிக்கவேண்டும் என்ற கனவுகளுடன் உள்ளார்கள்.



**மேல் இடப்புறத்திலிருந்து கடிகாரச் சுழற்சியாக:** *பரத் ராம், மயூரி கங்கோ, பிரவீணேந்தர் ராவ், அனில் குமார் S, கமல் ஜெயின் மற்றும் அர்ப்பனா வடாலா.*

## வளாக வேலை வாய்ப்பு

ஃபேஸ்புக் நிறுவனத்தின் ஆசிய பசிஃபிக் பகுதி ஆட்சேர்ப்புத் தலைவர் அர்ச்சனா வடாலாவுடன் சங்கத்தின் முன்னாள் தலைவர் கமல் ஜெயின் பேசினார், ஃபேஸ்புக் போன்ற ஒரு நிறுவனத்தில் இணைய விரும்புகிற மாணவர்களிடம் அவசியமாக இருக்கவேண்டிய, இந்த நிறுவனங்களைச் சேர்ந்த அர்ச்சனா வைப் போன்ற ஆட்சேர்ப்பு வல்லுனர்கள் அவர்களை நேர்காண்கிற போது அவர்களிடம் எதிர்பார்க்கிற அடிப்படைக் குணங்களைப்பற்றிக் கேட்டார்.

இளம் பட்டதாரிகள் தொடக்கத்திலேயே தங்களுடைய முக்கியத்துவங்களை வரையறுப்பதும், தங்களுக்கு எதில் பேரார்வம் இருக்கிறது என்பதைத் தீர்மானிப்பதும் முக்கியம் என்றார் அவர். உங்கள் பணிவாழ்க்கையின் தொடக்கப் பகுதி மிக முக்கியமானது, அதேபோல், நீங்கள் பேரார்வத்துடன் இருக்கிற விஷயத்தில் ஈடுபடுவதும் முக்கியமானது. தொழில்நுட்பத் துறையில் இருக்கிற ஆட்சேர்ப்பு வல்லுனர்கள் அனைவரும், குறிப்பிட்ட வேலைக்குத் தேவைப் படும் அடிப்படைத் திறன்களை எதிர்பார்ப்பார்கள். அதே நேரம், இன்னும் சில திறன்களும் முக்கியமானவை, அந்தத் திறன்களின் ஒரு மிகப் பெரிய பகுதி, தகவல் தொடர்பு. நீங்கள் எப்படித் தெளிவாகப் பேசுகிறீர்கள் என்பதையும், உங்களுடைய கவனிக்கும் திறன்களையும் உங்கள் தன்னம்பிக்கையையும் அவர்கள் கவனிப்பார்கள்.

நாம் ஒரு பன்னாட்டுச் சூழலில் பணிபுரிவதால், பலவகைப் பணியாளர்களுடன் உங்களால் இணைந்து பணியாற்ற இயலுகிறதா என்பதையும் நிறுவனங்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றன. படைப்புணர்வு, புதுமைச்சிந்தனை, நீங்கள் கொண்டுவரும் யோசனைகள், பிரச்னைகளைத் தீர்க்கும் உங்கள் திறன் ஆகியவற்றையும் நிறுவனங்கள் கவனிக்கின்றன. பல புதிய தொழில்நுட்பங்கள் வந்துகொண்டே இருக்கின்றன, புதிய பிரச்னைகளின் சிறப்புத் தொகுப்புகளையும் அவை தங்களுடன் கொண்டுவருகின்றன. அப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய மக்களைத்தான் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன, அவற்றைப்பற்றிப் புகார் சொல்கிறவர்களை இல்லை என்று தொடர்ந்து கூறினார் அர்ச்சனா.

வாழ்க்கையில் வெல்லவேண்டுமென்றால், நீங்கள் உங்களுடைய பேரார்வத்தைப் பின் தொடர வேண்டும்'' என்று கூகுள் இந்தியாவின் தொழில்துறைத் தலைவர் மயூரி கங்கோ கூறினார்.

கணினிப் பாதுகாப்பைப்பற்றிப் பேசிய பெப்சிகோவின் டிஜிட்டல் அனுபவத் துணை இயக்குநர் ஜெய்தீப் லகானே ஓர் ஆர்வமூட்டும் கேள்வியைக் கேட்டார்: நாம் அனைவரும் பூட்டுகளைப் பயன்படுத்துகிறோம்; ஆனால், அவை அனைத்துக்கும் நாம் ஒரே சாவியை வைத்திருக்கிறோமா? இல்லை. அதேபோல், நாள்தோறும் நம்முடைய வங்கிக் கணக்குகளுக்கு, கணினியில் உள்நுழைவதற்கு, பிற செயலிகளுக்கு என்று நாம் வெவ்வேறு பயனாளர் IDக்களைக் கையாள்கிறோம், ஆனால், அவை அனைத்துக்கும் நாம் ஒரே கடவுச் சொல்லை (பாஸ்வேர்ட்) வைக்க இயலாது, வைக்கக்கூடாது. எல்லா இடங்களிலும் ஒரே ஒரு கடவுச் சொல் இருந்தால் மிகவும் நன்றாகதான் இருக்கும்; ஆனால், அப்படிச் செய்தால், நீங்கள் தாக்கப்படுகிற வாய்ப்பு மிகுதியாகும், உங்கள் கணக்கில் பிறர் ஊடுருவுகிற வாய்ப்பு மிகுதியாகும். அதனால்தான், அங்கீகாரம் என்கிற அடுத்த படிநிலை தொடங்கப்பட்டது.

ஹிடாச்சி வன்டாரா கட்டுமானப் பிரிவு மூத்த இயக்குநரும் தரவு அறிவியல் தொழில் வல்லுநருமான பரத் ராம் தொழில்நுட்பத்தின் வருங்காலத்தைப்பற்றிப் பேசுகையில், அதிநவீனத் தீர்வுகளைக் கட்டமைப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றியும், ஹைதராபாத் உள்ளிட்ட இந்தியாவின் மிகச் சிறந்த, அறிவார்ந்த நகரங்களில் சில இதுபோன்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எப்படிக் கட்டப்பட்டன என்பதைப் பற்றியும் பேசினார். அத்துடன், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களைத் தொடர்ந்து பின்பற்றுவதும் முக்கியம்; "ஃபார்ச்சூன் 500" நிறுவனங்களில் 52 சதவிகித நிறுவனங்கள் இதைச் செய்ய இயலாமல், டிஜிட்டல் வழியில் செல்ல இயலாமல் காணாமல் போய்விட்டன. இதற்கு எடுத்துக்காட்டாக, அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட, வீட்டுக்கே திரைப்படங்களை வழங்குகிற, வீடியோ விளையாட்டுகளை வாடகைக்கு அளிக்கிற சேவைகளை வழங்கும் "பிளாக்பஸ்டர் வீடியோ"வைக் குறிப்பிட்டார் அவர். அன்றைக்கு நெட்ஃப்ளிக்ஸ் பற்றி யாரும் பேசவில்லை. ஆனால் இன்றைக்கு, "பிளாக்பஸ்டர் வீடியோ" காணாமல் போய்விட்டது, "நெட்ஃப்ளிக்ஸ்" நன்கு வளர்ந்துள்ளது.

சங்கத்தின் முன்னாள் தலைவர், மாவட்டப் பயிற்சியாளரான அனில் குமார் பேசுகையில், ஆர்வமூட்டும் விஷயம், அவற்றில் பெரும்பாலானவை வளாக வேலை வாய்ப்பு மற்றும் ஆட்சேர்ப்பு பற்றியவை என்றார். 350 பங்கேற்பாளர்களில் சுமார் 80 பேர் பழங்குடியினர் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். பிறர் சிங்கப்பூர், மும்பை, தில்லி எனப் பலவகை இடங்களைச் சேர்ந்தவர்கள், மற்றும் தெலங்கானா மாநிலத்தின் சிறிய நகரங்கள், கிராமங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்தச் சங்கம் வழிகாட்டிகளின் குழு ஒன்றை உருவாக்கத் தீர்மானித்துள்ளது. சங்க உறுப்பினர்கள் 45 பேரில் சுமார் 10 பேர் இந்தக் குழுவில் பங்கேற்பார்கள். இவர்கள் சட்டம், மருத்துவம், நிதி, பொறியியல், தொழில்நுட்பம் போன்ற வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள். நாங்கள் இந்தக் கல்லூரிக்கு ஒரு வீடியோ இணைப்பை உருவாக்குவோம்; வெவ்வேறு தலைப்புகள், பணிகளைப் பற்றி ஒவ்வொரு வாரமும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்வுகளை நடத்துவோம்'' என்றார் குமார்.

இந்த மாநாட்டின் இன்னொரு நேர்விதப் பலன், இந்தச் சங்கம் இதுபோன்ற ஒரு மெய்நிகர் கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் நடத்தவேண்டும் என்கிற கோரிக்கைதான். நாங்கள் இதை ஒவ்வொரு மாதமும் செய்யத் தீர்மானித்துள்ளோம் என்றார் அனில்குமார். ■

# ஜாம்ஷெட்பூர் ரோட்டரியின் “வசுந்தரா” திட்டம்

கிரண் ஜெஹ்ரா



மரம் நடுவோம், பாதுகாப்போம், காடுகளை நிர்வகிப்போம், அவற்றால் ஏற்படும் நன்மைகளை அளவிடுவோம். இந்த வழியில்தான் நாம் நிலையான எதிர்காலத்தை உருவாக்க முடியும் RID 3250ன் முயற்சியான ஒரு ரோட்டேரியனுக்கு ஒரு மரம் என்ற வகையில் 1.2 மில்லியன் மரங்கள் நடும் ‘வசுந்தரா’ திட்டத்தை மெய்நிகர் கூட்டத்தின் மூலம் தொடங்கி வைக்கும்போது RIPE சேகர் மேத்தா இவ்வாறு குறிப்பிட்டார். ஜாம்ஷெட்பூர் வெஸ்ட் ரோட்டரி சங்கத்தின் சிந்தனையில் உருவானது இத்திட்டம். கடந்த 12 வருடங்களுக்கு மேலாக இந்த சங்கம் பழங்குடி வகுப்பினருடன் இணைந்து செயலாற்றி வருகிறது. அதனால் மரம் நடும் திட்டத்துக்கு கிராமப் பஞ்சாயத்துகளை எளிதில் அணுகமுடிந்தது.

இந்த முயற்சி நன்கு திட்டமிடப் பட்டது. மேலும் ஜார்க்கண்டின் நகர்ப்புறங்களையும் உள்ளடக்கியது என்று விளக்கினார் மாவட்ட ஆளுநர் ராஜன் கண்டோத்ரா. இந்த மரம் நடும் திட்டம் மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தப்பட உள்ளது. முதல் கட்டம் ஊரகப்பகுதிகளில் பெருமளவில் மரங்களை நடுவது. இரண்டாவது கட்டம் மரங்களுடன் வரவேற்பது. மூன்றாவது கட்டம் நகர்ப்புறங்களில் மரங்களை நடுவது. இதற்காக திட்டமிடுதலில் முன்முயற்சி மேற்கொண்ட டாக்டர் அமித் முகர்ஜி, அல்பனா ஷா மற்றும் அமிதாப் பக்ஷி ஆகியோருக்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

எங்களது முக்கியமான குறிக்கோள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களைப் பயன்படுத்தி




DG *ராஜன் கண்டோத்ரா (வலதிலிருந்து 5வது) சாந்த்பூர் கிராமத்தில் மரம் நடும் திட்டத்தை துவக்கி வைக்கிறார்.*

அதை வளமாக்குவது தான். இது பல்லுயிர் பெருக்கத்துக்கு வழிவகுப்பதுடன் மதிப்புமிக்க வகையில் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் என்றார் DG.

ஒரு சிறந்த திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த முனைந்துள்ளதற்காக தமது சொந்த மாவட்டத்தை RID கமல் சாங்வி பாராட்டினார். இந்த மெய்நிகர் நிகழ்ச்சியில் பங்கேற்ற RID பிரான் செஸ்கோ அரிஸ்ஸோ (அமெரிக்கா), PRID-க்கள் கீதா மானெக் (கென்யா), ராஃபி கார்ஸியா III (பிலிப்பின்ஸ்) ஆகியோர் தங்கள் பிராந்தியத்திலும் இத்திட்டத்தை செயல்படுத்த பரிந்துரைப்பதாகத் தெரிவித்தனர். Grow-Trees. Com உடன் இணைந்து இந்த திட்டத்தை செயல்படுத்த முனைந்துள்ள சங்கத்தின் தலைவர் அஞ்சனி நிதி மற்றும் அவரது மனைவி பணஸ்ரீ ஆகியோரையும் அவர் பாராட்டினார்.

PRIP கேரி ஹுவாங் மற்றும் அறங்காவலர் குலாம் வாஹன்வதி இருவரும் தங்கள் பெயரில் மரக்கன்றுகள் நடப்பட்டதற்காக மாவட்டத்துக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

'குரோ-ட்ரீஸ்.காம்' முழு திட்டத்தையும் கண்காணித்து மரம் நடும் பணியில் ஈடுபட்டுள்ள கிராம மக்களுக்கு ஊதியம் வழங்கும். அதே நேரத்தில் ரோட்டரி, உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிலங்களை அடையாளம் காணும். சமீபத்திய புயல் மற்றும் சூறாவளியால் நாசப்படுத்தப்பட்ட சுந்தர்பன் வனப்பகுதியை மீண்டும் பசுமையாக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் அஞ்சனி நிதி.

*எங்களது முக்கியமான குறிக்கோள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களைப் பயன்படுத்தி அதை வளமாக்குவது தான்.*

**ராஜன் கண்டோத்ரா**
**மாவட்ட ஆளுனர், RID 3250**

ஜாம்ஷெட்பூர் அருகில் உள்ள சந்த்பூர், முர்ககுடு, ஹரிசுந்தர்பூர் கிராமங்களில் 50,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. டாடா ஸ்டீல் நிறுவனத்துடன் இணைந்து ஜார்க்கண்ட் நகரத்தை பசுமையாக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது என்று கண்டோத்ரா தெரிவித்தார்.

RID 3190-க்கு உட்பட்ட பெங்களூர் ஆர்ச்சார்ட்ஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரான ரவிசங்கர் டகோஜீ, 1.2 மில்லியன் மரங்கள் நடும் திட்டம் சாத்தியமானது தான். இத்திட்டத்தில் பிற சேவை நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டால் எளிதில் நிறைவேற்றி விடலாம் என்றார்.

பூமித் தாய்க்கு சேவை செய்யும் போது நீங்கள் ஒரு ரோட்டேரியன், ஒரு சிங்கம் அல்லது ஆல்ரவுண்டர் என்றால் அதில் எந்த வித்தியாசமும் இல்லை.■

இசையும் & இனிமையும்

# காலத்தை வென்ற இசைமேதை கிஷோர் குமார்

S R மது

ஒருமுறை பிரபல இயக்குநரான சத்யஜித்ரே சொன்னார், கிஷோர்குமாருக்கு இனிமையான, வளமான குரல். அது அவருக்கு இறைவன் கொடுத்த வரம். திரைப்படப் பாடல்களைப் பாடுவதில் அவருக்கு இணை யாரும் இல்லை என்றார். கிஷோர்குமார் என்ற பெயரைக் கேட்டாலே நமக்கு சிரிப்பு வரும். தனது மென்மையான குரலால் எல்லோரையும் மகிழ்விப்பவராயிற்றே அவர் என்கிறார் பிரபல நடிகர் அமிதாப்பச்சன்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள லட்சக் கணக்கான கிஷோர்குமார் ரசிகர்களில் சத்யஜித்ரே, அமிதாப் இருவரும் அடங்குவர். கிஷோர்குமாரின் படைப்பாற்றல் சினிமாவை பலவழிகளில் மேம்படுத்தியது. தனது 42 ஆண்டுக்கால திரை வாழ்க்கையில் கிஷோர்குமர் 2600-க்கும் மேலான ஹிந்தி திரைப்படப் பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் பல முத்தான பாடல்கள். பாலிவுட்டில் பலராலும் விரும்பி ரசிக்கப்படுபவை. பாடல்களுக்கு ஏற்றாற்போல் ஹம்மிங் செய்து ரசிகர்களை மயக்கினார். அவர் பின்னணிப் பாடகராக மட்டுமல்லாமல், இசையமைப்பாளர், நடிகர், பாடலாசிரியர், பாடல் காட்சிகளை எடிட் செய்வது, இயக்குநர் என பன்முகத் தன்மையுடன் அவர் விளங்கினார்.

ஆனால், அவருக்கு பின்னணி பாடுவதில்தான் மிகுந்த விருப்பம். நடிப்பு என்பது போலியானது. ஆனால், இசை இதயத்திலிருந்து வெளிப்படுவது என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவார். அவர் முறைப்படி பாட்டு கற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் ஒரு பயிற்சிபெற்ற





*கிஷோர் குமார் மனைவி லீனா சந்தவர்கருடன்.*

பாடகனைப் போல பாடுவார். அவரது மனதிலிருந்து இசை அவரது மனோநிலைக்கு தகுந்தபடி வெளிவரும். எனக்குப் பிடித்த பாலிவுட் பாடகர் கிஷோர்குமார்தான். அவருக்கு கடவுளின் அருள் இருப்பதால் அவரால் சிறப்பாக பாடமுடிகிறது என்று லதா மங்கேஷ்கர் ஒரு முறை குறிப்பிட்டார். பின்னணிப் பாடகர்களிலேயே இனிமையான குரல் கொண்டவர் கிஷோர்குமார்தான். எந்த பாடலையும் சர்வசாதாரணமாக பாடிவிடுவார். அதற்காக பிரத்யேக முயற்சி எதையும் அவர் எடுக்கமாட்டார். இத்தனைக்கு அவர் கர்நாடக சங்கீதத்தை முறைப்படி பயின்றவர் அல்ல. ஆனாலும் அவரால் என்னைவிட சிறப்பாக பாடமுடிகிறது. இசை அவரது உடலோடு பிறந்தது என்கிறார் மற்றொரு பின்னணிப் பாடகரான மன்னாடே.

கிஷோரின் குரலில் ஆழமும், ஆண்குரலின் வலிமையும், அத்துடன் இனிமையான பெண் குரலும் இழைந்தோடும். துயரமான பாடல்களை அவர் பாடும்போதும் அதில் ஒரு ஜீவன் இருப்பதை நாம் காண முடியும். மேரா ஜீவன் கோரா காகஸ் (கோரா காகஸ்), கோயி ஹம்தும் நா ரஹா (ஜம்ரூ), ஜிந்தகி கீ ஸஃபர் மெய்ன்குஸார் ஜாதே ஹைன் (ஆப் கீ கஸம்), துகி மன் மேரே (பன்டூஷ்), மேரி பீகி பீகி கீஸி (அனாமிகா) ஆகிய பாடல்கள் குறிப்பிடத்தகவை.

கிஷோர்குமார் வேறு ஆணுடனோ அல்லது பெண்ணுடனோ டூயட் பாடினால் அவரது பாடல்தான் எடுப்பாக இருக்கும். ஒரு பாடலில் இரண்டு பேரின் பின்னணிப் பாடல் அமைந்திருந்தால் அதில் கிஷோர் குரல்தான் ரசிகர்கள் மனதில் இடம்பெறும். R D பர்மன் இசையமைப்பில் 1976ல் மெஹபூபா- மேரே நைனா சவன் பதூன் என்னும் இதயத்தை துளைத்தெடுக்கும் பாடலை எடுத்துக்கொள்ளுங்கள். லதாவும், கிஷோரும் படத்தின் வெவ்வேறு கட்டங்களில் தனித்தனியாக இப்பாடலைப் பாடினர். லதா வழக்கம்போல இனிமையாகப் பாடினார். ஆனால், கிஷோர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு அந்தப் பாடலை பாடினார். ரசிகர்களின் மனதைப் பிழியும் வகையில் அந்த பாடல் அமைந்திருந்தது.

சின்ன வயதிலிருந்தே கிஷோருக்கு பாட்டு பாடுவதில் ஆர்வம் இருந்தது. K L ஸைகாலைப் போலவே பாடநினைப்பார். ஆனால் அவரது குரல் சிலசமயங்களில் கீச்சுக்குரலாகவும் சிலசமயங்களில் குரல் கரடு முரடாகவும் இருக்கும். 10 வயது இருக்கும்போது அவரது தாயார் சமையல் அறையில் காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தார். கிஷோர் வேகமாக சமையலறையை நோக்கி ஓடியபோது அவரது கால் விரல் நுணி கத்தியில் பட்டு துண்டிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் உடனடி மருத்துவச் சிகிச்சை இல்லாததால் வலியால் துடித்து அழுதுகொண்டே இருந்தார் கிஷோர். இப்படி ஒரு மாதம் கால் வலியால் தொடர்ந்து அழுததன் காரணமாக அவரது தொண்டை சரியானது. அதாவது அவரது கீச்சுக்குரல் இனிமையான குரலாக மாறியது என்றார் அவரது சகோதரர் அசோக்குமார்.



*மன்னாடேயுடன் கிஷோர் குமார்.*

கிஷோர்குமாருக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே திரைப்படங்களில் பாடவேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அதனால் தனக்கு 18 வயதானபோது நடிகரும், பாடகருமான சைகாலை சந்திக்க மும்பைக்கு சென்றார். (ஆனால், கடைசிவரை அவர் சைகாலை சந்திக்கவில்லை.) அவரின் சினிமா வாழ்க்கையை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டம் 23 ஆண்டு போராட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள். 1969ல் ''ஆராதானா'' படம் வெளியாகும் வரை. இரண்டாவது கட்டம் ஆராதானாவிலிருந்து 1987ல் அவர் இறக்கும் வரை. இரண்டாவது கட்டத்தில் அவர் வாழ்க்கையின் உச்சத்தை தொட்டார். முதல் கட்ட வாழ்க்கையில் அவர் ஒருசில நூறு ஹிந்தி படப்பாடல்களையே பாடியிருப்பார். ஆனால், இரண்டாவது கட்டத்தில் 2 ஆயிரத்துக்கும் மேலான பாடல்களைப் பாடி ரசிகர்களை மயங்கவைத்தார்.

முதல் கட்டத்தில் அவரது வாழ்க்கை சில சமயங்களில் ஒளிமயமானதாக இருந்தது. S D பர்மன் இசையமைப்பில் நடிகர் தேவ் ஆனந்துக்காக அவர் பாடிய பாடல்கள் ஜீவன் கீ ஸஃபர் மீ ரஹி (முனிம்ஜி), மனஜானப் நே புகாரா நஹின் (பேயிங் கெஸ்ட்), ஹம் ஹெய்ன் ரஹி பியார் கே (நாவ் தோ கியாரா) தேவானந்தை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றன. திரையுலகில் ரசிகர் களுக்கு தம்மீது ஈர்ப்பு ஏற்பட கிஷோரின் பாடல்களும் ஒரு காரணம் என்பதை தேவ் ஆனந்தே ஒரு முறை ஒப்புக்கொண்டுள்ளார்.

முதல் கட்டத்தில் கிஷோருக்கு கிடைத்த வெற்றிகளில் ஒன்று 1958ல் ''சல்தி கா நாம் காடி'' படத்தில் மதுபாலாவுடன் கிஷோர் மற்றும் அவரது இரு சகோதரர்களான அசோக்குமார், அனுப் குமார் நடித்தது. S D பர்மன் இசையமைப்பில், சிறந்த பாடல்களுடன், நகைச்சுவை கலந்த படமாகவும் வெளிவந்தது. இந்த படத்தை அந்த மூன்று சகோதரர்கள்தான் தயாரித்திருந்தனர். படம் சூப்பர் ஹிட்டானது.

1958ல் வெளியான தில்லி கா துக் என்ற படத்தில் கிஷோர் தமது திறமையை வெளிப்படுத்தி பாடினார். கிஷோர்-ஆஷா இணைந்து பாடிய C-A-T கேட். கேட் மனே பில்லி பாடல் பெரும் வரவேற்பை பெற்றது. கிஷோரும்-லதாவும் பாடிய ''யே ராடீன், யே மௌஸம்'', ''நதி கா கினரா'' காதல் பாட்டு மனதை மயக்கும் விதத்தில் அமைந்திருந்தது. ஆனால், வெற்றிகள் அவரைத் தொடர்ந்தபோதும் 1960களின் பிற்பகுதியில் கிஷோர் ஓர் விரக்தியடைந்த மனிதர்போலவே இருந்தார். தனது திறமையை வெளிப்படுத்தி அவர் சில அற்புதமான பாடல்களைப் பாடிய போதிலும் முதலிடத்தை அவரால்



*மதுபாலாவுடன்.*

பெறமுடியவில்லை. சரி நடிக்கலாம் என்றால் கதாநாயகனாக நடிக்கும் அளவுக்கு அவர் இளமையாக இல்லை. ஒரு கட்டத்தில் சினிமாத் தொழிலுக்கே ஒரு முழுக்கு போட்டுவிட்டு மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள சொந்த ஊரான கண்ட்வாவுக்கு திரும்பிவிடலாமா என யோசித்தார். ஆனால், அசோக் குமார்தான் கிஷோரை சமாதானப்படுத்தி மும்பையிலேயே தங்கவைத்து பின்னணி பாடுவதில் கவனம் செலுத்துமாறு வலியுறுத்தினார்.

### 1969ல் ஏற்பட்ட திருப்புமுனை

1969ம் ஆண்டு ஆராதனா திரைப்படம் வெளியானது. அந்தப் படம் நடிகர் ராஜேஷ்கன்னாவுக்கு வெற்றிப்படமாக அமைந்தது மட்டுமல்லாமல், இசை உலகில் கிஷோருக்கு ஒரு சுனாமியை ஏற்படுத்தியது. 1960களிலும், 1970களிலும் ரசிகர்களின் மனதில் நீங்காத இடம்பிடித்திருந்த முகமது ரஃபி கூட ஓரங்கட்டப்பட்டார். தனது பழைய நிலையை அவரால் மீண்டும் பெறமுடியவில்லை.

இது எப்படி சாத்தியமானது? ஆராதான படத் தயாரிப்பின்போது இசையமைப்பாளர் S D பர்மன் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தார். இதையடுத்து அவரின் மகன் R D பர்மன், ஆராதனா படத்திற்கு இசையமைக்கும் பொறுப்பை ஏற்றார். கிஷோர்குமாரின் திறமையை நன்கு அறிந்திருந்த R D பர்மன், உடனடியாக அந்த படத்தில் இரண்டு பாடல்கள் பாட கிஷோருக்கு வாய்ப்பு கொடுத்தார். ஒரு காட்சியில் கதாநாயகி ஷர்மிளா தாகூர் ரயிலில் சென்று கொண்டிருப்பார். அதே நேரத்தில் ராஜேஷ்கன்னா ஜீப்பில் சென்று கொண்டே மேரே ஸப்னோன்கபி ராணி என்று பாடிக்கொண்டே செல்வார். இந்தப் பாடலும், இருவரும் தங்கியிருக்கும் அறையில் குளிர்காயும்போது ரூப் தேரா மஸ்தான என்று சூடுபறக்க பாடுவார்கள். இந்த இரண்டு பாடல்களும் ஹிந்தி திரைப்பட உலகில் பெரும் ஹிட்டாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆராதனா படத்துக்குப் பிறகு ராஜேஷ்கன்னா, கிஷோர்குமார் இருவருக்கும் திரையுலகில் வாய்ப்புகள் வந்த வண்ணம் இருந்தன. 1969ம் ஆண்டு முதல் 1975ம் ஆண்டுவரை நடிகர் ராஜேஷ்கன்னா தொடர்ந்து 15 வெற்றிப்படங்ககளை பதிவு செய்தார். இது இன்று வரை சாதனையாகவே உள்ளது. ராஜேஷ்கன்னாவுக்காக 245 பாடல்களை கிஷோர் பாடினார். இந்த இரண்டு சூப்பர் ஸ்டார்களின் பின்னணியில் இசையமைப்பாளர் R D பர்மன் இருந்தார். ராஜேஷ்கன்னா படத்தில் கிஷோர் பாடாமல் விலகிவிட்டால் அவரை சூப்பர் ஸ்டாராக யாரும் பார்க்கமாட்டார்கள் என்றுகூட சிலர் பேசினர்.

1970களின் நடுவில் ராஜேஷ்கன்னா மீதான மோகம் குறைந்தது. எப்போதும் ஆக்ரோஷமாக வசனம் பேசும் அமிதாப்பச்சன் புதிய சூப்பர் ஸ்டாராக உருவானார். ஆனாலும் கிஷோரின் வெற்றிப்பயணம் தொடர்ந்தது. அமிதாப்புக் காக அவர் 131க்கும் மேலான பாடல்களைப் பாடியுள்ளார்.



*கிஷோர் குமார் மற்றும் R D பர்மன்.*



*ராஜேஷ் கன்னாவுடன்.*

அவற்றில் அமர் அக்பர் அந்தோணி, டான், முக்காதார் கா சிக்கந்தர், கூன் பாஸினா, கஸ்மேவாதே முதலான படங்களின் பாடல்கள் ஹிட்டாயின. 1987ம் ஆண்டு கிஷோர் உடல்நலக்குறைவால் இறக்கும் வரை அவர் ஹிந்தி திரை உலகில் கொடிகட்டிப் பறந்தார்.

சிறந்த பின்னணி பாடகர் என்ற வகையில் கிஷோர்குமார் எட்டு முறை பிலிம்பேர் விருது களைப் பெற்றுள்ளார். (அனைத்து விருதுகளும் 1969 முதல் 1987க்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்கப்பட்டவை). இது ஒரு சாதனையாகும். கிஷோருக்கு முன் பிருந்தே ஹிந்தி திரையுலகில் கால் பதித்த முகமது ரஃபி 6 பிலிம்பேர் விருதுகளை வென்றது குறிப்பிடத்தக்கது.

### கிஷோர்குமாரால் ஈர்க்கப்பட்டவர்கள்

கிஷோர் இளமைக் காலத்தில், இஸ்ரேலிய பாடகரும் பொழுது போக்கு கலைஞருமான ஸைம் டோஃபாலின் பாடல்களை விரும்பிக் கேட்பார். அவரது திரைப்படமான ஃபிட்லர் ஆன் தி ரூஃப் படத்தை கிஷோர் நூறு தடவைக்கு மேல் பார்த்து ரசித்திருக்கிறார். 1983ல் லண்டனில் ஃபிட்லர் ஆன் தி ரூஃப் படம் திரையிடப்படுவதாக செய்தித்தாள்களில் விளம்பரம் வந்திருந்தது. அன்று கிஷோர் தொடர்ந்து நான்குமுறை அந்த படத்தை பார்த்தார். அத்துடன் நில்லாமல் டோஃபாலை சந்தித்து அவரிடம் தனது பாடல்கள் அடங்கிய கேஸட்டுகளை அவருக்கு பரிசாக கொடுத்தார். பதிலுக்கு டோஃபால், தனது சுயசரிதை புத்தகத்தை கிஷோருக்கு பரிசாகக் கொடுத்தார். டோஃபால் ஒரு சிறந்த நடிகர். அவரைப் போல் யாராலும் நடிக்க முடியாது என்பார் கிஷோர்.

ஹிந்தி திரையுலகில் பல குரல் மன்னனாக இருந்தவர் கிஷோர் குமார். பின்னணி பாடுவதில் உங்களுக்கு என ஒரு தனி பாணியை வகுத்துக்கொள்ளுங்கள் என்று இசையமைப்பாளர் S D பர்மன் அவரிடம் கூறியதுண்டு. தனது சகோதரர் அனுப்குமார் மூலம் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்காவில் உள்ள பாடகர்கள் எப்படிப் பாடுகிறார்கள் என்று பார்த்து அவர்களைப் போலவே பாட முற்பட்டார் கிஷோர்குமார்.

கிஷோருக்கு புகைப்பிடிக்கும் பழக்கமோ அல்லது மது குடிக்கும் பழக்கமோ இருந்ததில்லை. ஆனால், உணவுகளைத் தேடிப் பிடித்து சாப்பிடு வதில் வல்லவர். பெங்காலி மட்டன் கறியை கிஷோர் விரும்பி சாப்பிடுவார். காலிபிளவர் ப்ரை அவருக்கு பிடித்தமானது. காஃலிபிளவரை நன்றாக ரோஸ்ட் செய்து என்மீது போட்டு மூடிவிட்டால், அதை தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருப்பேன் என்று கிஷோர்குமார் சொல்லு வாராம். இதை அவரது உறவினர் ப்ரீத்தி கங்குலி (அசோக்குமாரின் மகள்) தெரிவித்தார்.

### தனிப்பட்ட வாழ்க்கை

கிஷோர்குமார் நான்கு முறை திருமணம் செய்துகொண்டவர். முதல் மனைவி ரூமா குஜா தாகூர்தா (1950–58), இரண்டாவது மனைவி மதுபாலா (1960–68), மூன்றாவதாக யோகிதாபாலியை திருமணம் செய்தார் (1976–78), பின்னர் நான்காவதாக லீனா சந்தவர்க்கரை திருமணம் செய்தார் (1981–87).

அவருக்கு மதநம்பிக்கை கிடையாது. எப்போதும் தனிமையையே விரும்பினார். அவரது வீட்டு வாயிலில் எப்போதும் கிஷோர்குமார் ஜாக்கிரதை என்ற பெயர்ப்பலகை தொங்கிக் கொண்டிருக்கும். அவர் திகில் படங்களை விரும்பினார். அந்த வகையில் நூற்றுக்கணக்கான வீடியோ கேஸட்டுகளை சேகரித்து வைத்திருந்தார். வீட்டுத் தோட்டத்தில் வளரும் மரங்கள்தான் எனது நண்பர்கள் என்று அவர் அடிக்கடி கூறுவார். மரங்களுக்கு பெயரிட்டு அதனுடன் பேசுவார். திரைப்படங்களுக்காக பின்னணி பாடினால் அதற்கான ஊதியத்தை வசூலிப்பதில் கறார்பேர்வழி. ஒருமுறை ஒரு தயாரிப்பாளர், பேசிய பணத்தைவிட பாதி தொகையைத்தான் கொடுத்தார். அடுத்த நாள் படப்பிடிப்பு தளத்துக்கு வந்த கிஷோர் பாதி தலையையும், பாதி முகத்தையும் மழித்துக்கொண்டு வந்து நின்றார். கேட்டதற்கு பாதி கட்டணத்துக்கு பாதி ஒப்பனைதான் என்றார்.

கிஷோர்குமார் பண விஷயத்தில் கறார் என்றாலும்



*சுனில் தத்துடன் கிஷோர் குமார்.*

ஒரு முறை சத்யஜித்ரேவுக்கு கடன் கொடுத்து உதவியுள்ளார். 1955ல் பதர்பஞ்சாலி படத்தை ரே தயாரித்தபோது நிதி நெருக்கடியால் படப்பிடிப்பு நின்றது. அப்போது கிஷோர் அவருக்கு பணம் கடனாக கொடுத்து உதவியுள்ளார். இதேபோல 1964ல் சத்யஜித்ரேயின் “சாருலதா படத்தில் ஒரு பாட்டு பாடு வதற்கு பணம் வாங்கிக் கொள்ளவில்லை. இதற்கு நான் என்ன கட்டணம் தர வேண்டும் என்று ரே, அவரிடம் கேட்டபோது கிஷோர், எனக்கு பணம் எதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டு பதிலுக்கு ரேயின் காலை தொட்டு கும்பிட்டார். பின்னர் 1984ல் கிஷோர், சத்யஜித்ரேயின் காரே பாய்ரே படத்திற்காக மூன்று பாடல்களைப் பாடியபோதும் அதற்காக பணம் எதுவும் வாங்கிக் கொள்ளவில்லை.

நெருக்கடி காலத்தின் போது அரசு திட்டங்களை மேம்படுத்தும் நிகழ்ச் சிக்காக அவரை அழைத்த போது முடியாது என கிஷோர் மறுத்து விட்டார். விளைவு அகில இந்திய வானொலியில் அவரது பாடல்கள் தடை செய்யப்பட்டன. அவரது வீட்டிலும் வருமான வரித்துறையினர் பலமுறை சோதனை நடத்தினர். ஒரு கட்டத்தில் தனது வருமான வரியைச் செலுத்துவதற்கு அவர் மேடை நிகழ்ச்சிகளை நடத்த வேண்டியதாயிற்று.



*கிஷோர் குமார் மற்றும் சத்தியஜித் ரே.*

1987ம் ஆண்டில் கிஷோர்குமார் இறந்த போது அவருக்கு வயது 58. அசோக் குமாரின் பிறந்த நாளன்று இறந்ததால் மூத்த நடிகரான அசோக்குமார் தனது பிறந்தநாளைக் கொண்டாட முடிய வில்லை. கிஷோர்குமார் மறைந்துவிட்டாலும், அவரது பாடல்கள் மூலம் நம்மிடையே வாழ்கிறார். அவரது புகழ்பெற்ற பாடல் சல்தே சல்தே கபி அல்விடா நா கெஹ்னாவைப் போலவே என்று சொன்னால் மிகையாகாது.

கட்டுரையாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்



## "சூப்பர் சிக்ஸ்" ரோட்டரி திட்டங்கள்

**A L சொக்கலிங்கம்**
**வேதியியலாளர், RC புதுக்கோட்டை, RID 3000**

RID 3000ன் எட்டு வருவாய் மாவட்டங்களிலும் பரந்து விரிந்துள்ள 130 சங்கங்களும் "சூப்பர் 66" என்ற திட்டத்தைச் சுறுசுறுப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆறு மாதங்களில் ஆறு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை நிறைவேற்றும் ஓர் அடையாளத் திட்டம் இது.

ஆகஸ்ட் தொடங்கி பிப்ரவரி வரை (ஜனவரி நீங்கலாக) ஒவ்வொரு முதல் சனிக்கிழமையிலும் மழை நீர் திரட்டல், (RWH) ஒரு நாள் RYLA கருத்தரங்குகள், பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு நலப் பொதிகளை வழங்குதல், தொழில் சார்ந்த பயிற்சி மற்றும் விருதுகள், மருத்துவ முகாம்கள், பொது இடங்களில் ரோட்டரி பலகைகளை நிறுவுதல் போன்ற பல திட்டங்களைச் சங்கங்கள் நிறைவேற்றிவருகின்றன. வீடுகள், பொதுக் கட்டடங்களில் RWH அமைப்புகளை நிறுவுவதில் சுமார் 1,000 ரோட்டரியன்கள் ஈடுபட்டுவருகிறார்கள். பகுதி அளவில், மியாவாகி சமூகக் காடு, மகிழ்ச்சிப் பள்ளிகள், இளம்பிள்ளைவாத விழிப்புணர்வுப் பேருந்துகளை (குறைந்தது 10 வண்டிகள்) நிறுவுதல், ரோடராக்டர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள், இதயச் சிகிச்சை முகாம்கள் மற்றும் சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்து விழிப்புணர்வு வாரம் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சங்கங்களை உதவி ஆளுநர்கள் வழிநடத்துவார்கள்'' என்கிறார் சொக்கலிங்கம்.

ஏப்ரல் முதல் செப்டம்பர்வரை, மாவட்டச் சங்கங்கள் ரூ.3 கோடி மதிப்புள்ள கோவிட் உதவிப் பணிகளைச் செய்துள்ளன. எடுத்துக் காட்டாக, முகமூடிகள், தூய்மைப்படுத்திகள், PPE பொதிகள், மளிகைப் பொருள் பொதிகள், உணவுப் பொட்டலங்களை வழங்குதல், மருத்துவமனைகளுக்குக் கருவிகளை வழங்குதல் ஆகியவற்றில் இச்சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் ஒரு மெகா திட்டமும் நிறைவேறிவருகிறது: ரூ.2.94 கோடி மதிப்பில் 11 பன்னாட்டு நல்கைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன, கோவிட் உதவிப் பணிக்காகப் பேரிடர் உதவி நிதியையும் (ரூ.18.75 லட்சம்) இவர்கள் பெற்றுப் பயன்படுத்தியுள்ளார்கள்.

ஜனவரி மாதம் நடைபெற விருக்கும் 'கூடல்' என்னும் மாவட்ட கான்ஃபரென்ஸ் ஏப்ரில் அல்லது மே மாதத்திற்கு தள்ளிப்போட உள்ளது என்றார் சொக்கலிங்கம்.

இந்த மாவட்டத்தின் உறுப்பினர் எண்ணிக்கை ஜூலை மாதத்தில் 5,127ஆக இருந்தது, இதை ஒன்பது சதவிகிதம் வளர்க்கவேண்டும் என்றும், பெண் உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை 15 சதவிகிதம் உயர்த்தவேண்டும் என்றும் DG இலக்கு நிர்ணயித்துள்ளார். TRFக்கு 1 மில்லியன் டாலர் வழங்கவும் இவர் இலக்கு நிர்ணயித்துள்ளார். ரோட்டரியன்கள் பொதுமக்களுக்கு லட்சிய பிம்பங்களாக இருக்கவேண்டும்'' என்கிறார் இவர். இதற்கு நாம் நம்முடைய திட்டங்களைப் பெரும்பான்மை மக்களிடம் காட்சிப்படுத்தவேண்டும்.

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## ரோட்டரியைப் பொதுமக்களிடம் கொண்டு செல்லவேண்டும்



**ஷப்பீர் ஷகீர்**
**புகைப்படக் கருவி, RC நாக்பூர், RID 3030**

கோவிட் நோய்ப்பரவலால், எதுவும் உறுதியாகத் தெரியாத சூழ்நிலை நிலவுகிறது. இந்த நேரத்தில், உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வது தான் இவருடைய மிகப் பெரிய முக்கியத்துவமாக உள்ளது. அதே நேரம், ஜூலை 1 அன்று இவருடைய மாவட்டத்தில் 5,092 என்ற அளவிலிருந்த உறுப்பினர் எண்ணிக்கையைக் குறைந்தது 10 சதவிகிதம் வளர்க்க இயலும் என்று ஷப்பீர் ஷகீர் நம்பிக்கையுடன் உள்ளார். நாம் ரோட்டரியைப் பெரிய அளவில் மக்களிடம் கொண்டு செல்லவேண்டும். இன்னும் ரோட்டரியில் இணையாத மக்களிடம் ரோட்டரியின் திட்டங்களைப்பற்றியும், அவற்றின் மூலம் செய்யப்படுகிற நற்பணிகளைப்பற்றியும் பேசுவது நல்ல பலன் அளிக்கும். ரோட்டரியின் மீது ஆர்வம் உண்டாகும், உறுப்பினர் எண்ணிக்கை வளரும்'' என்று விளக்குகிறார் அவர்.

இந்த மாவட்டம், 32,000 அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆறு-நாள் இணையப் பயிலகங்களை நடத்தியது, டிஜிட்டல் வகுப்புகளைக் கையாள்வது எப்படி என்று அவர்களுக்குப் பயிற்சியளித்தது.

இம்மாவட்டத்தின் ரோட்டரியன்கள், இந்திய மருத்துவக் கழகத்தின் நாக்பூர் பிரிவுடன் கை கோத்து, மூத்த குடிமக்களுக்கான ஒரு செயலியை உருவாக்கினார்கள். மூத்தவர்களுக்கான மருத்துவத் தேவைகளை IMA நிறைவேற்றும், மருத்துவம் அல்லாத அவசியத் தேவைகளைச் சங்கங்கள் வழங்கும்'' என்றார் ஷகீர். இத்துடன், இந்தச் சங்கங்களும் IMAம் இணைந்து, கோவிட் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கான “பிளாஸ்மா நன்கொடை முகாம்' ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யும். இப்போது இந்த மாவட்டம் கோவிட் உதவிக்காக $400,000 மதிப்புள்ள 11 GG திட்டங்களை நிறைவேற்றிவருகிறது. இத்துடன், இந்தச் சங்கங்கள் ரூ.50 லட்சம் மதிப்புள்ள தூய்மைப்படுத்திகள், முகமூடிகள், PPE பொதிகள், பிற கோவிட் உதவிப் பொருட்களை மாவட்டம்முழுவதும் வழங்கியுள்ளன.

பள்ளிகள் மீண்டும் திறந்தவுடன், நாங்கள் அரசுப் பள்ளிகளில் 200 டிஜிட்டல் வகுப்பறைகளை நிறுவுவோம்.

விதர்பா பகுதியிலுள்ள விவசாயிகள் சந்திக்கின்ற துன்பங்களும் தற்கொலையும் பரவலாக அறியப்பட்டுள்ளன. ஆகவே, இங்குள்ள விவசாயிகளுடைய துன்பங்களைக் குறைப்பதற்காக, நீர்நிலை மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது, இதற்காக நாங்கள் கால்வாய்களைத் தோண்டுகிறோம், ஆண்டுக்கு இருமுறை பயிர்களை விளைவிக்க உதவுகிறோம்.

TRF வழங்கலைப் பொறுத்தவரை, ஷகீர் $400,000 என்ற இலக்கை நிர்ணயித்துள்ளார், இதில் இதுவரை $60,000 திரட்டப்பட்டுள்ளது.

## இளைஞர்களை ரோட்டரிக்கு ஈர்ப்பது முக்கியம்

**விஜய் அரோரா**
**கல்வி நிர்வாகி, RC ஃபெரோஜ்பூர் கன்டோன்மென்ட், RID 3090**

ஓய்வு பெற்ற கல்லூரி நிர்வாகியாகிய இவர், ரோட்டரியில் இளைஞர்களை ஈடுபடச்செய்யவேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டுள்ளார். நான் பொறுப்பில் உள்ள காலத்தில், இயன்றவரை நிறைய இன்டராக்ட் மற்றும் ரோட்ராக்ட் சங்கங்களைத் திறக்க விரும்புகிறேன்'' என்கிறார் விஜய் அரோரார். இவர் நான்கு இன்டராக்ட் மற்றும் ஆறு ரோட்ராக்ட் சங்கங்களைப் பதிவுசெய்துள்ளார், பெண் உறுப்பினர் எண்ணிக்கையை மூன்று சதவிகிதத்திலிருந்து எட்டுச் சதவிகிதத்துக்கு உயர்த்தியுள்ளார். ஜூலையிலிருந்து இங்கு இணைந்துள்ள 200 புதிய ரோட்டரியன்களில் எண்பது சதவிகிதப் பேர் 40 வயதுக்குக் குறைவானவர்கள்.

கோவிட் முடக்கம், கூட்டங்களை ஜூமில் நடத்துவது போன்ற பிரச்னைகளுக்கு நடுவிலும், இந்த ஆண்டு நிறைவுக்குள் உறுப்பினர் எண்ணிக்கையை 2,215இலிருந்து 3,000க்கு மேம்படுத்த இயலும் என்றும், அதில் 45 சதவிகிதப் பேர் 40 வயதுக்குக் குறைவானவர்களாக இருப்பார்கள் என்றும் நான் நம்பிக்கையாக உள்ளேன்.

இவருடைய மாவட்டம் செப்டம்பர் வரை ரூ.5 கோடி மதிப்புள்ள கோவிட் உதவித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

அரோரா TRFக்கு $100,000 திரட்டத் திட்டமிடுகிறார், தன்னுடைய உறுப்பினர்களிடமிருந்து ஏற்கெனவே $35,000க்கான உறுதிப்படுத்தலைப் பெற்றுவிட்டார்.



இவர் மகிழ்ச்சிப் பள்ளிகள் திட்டத்தைப் பெரிய அளவில் நிறைவேற்றுகிறார், இது வரை 25 அரசுத் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளை அடையாளம் கண்டுள்ளார். ஏற்கெனவே 10–15 சங்கங்கள் பள்ளிகளில் நீர், தூய்மை மற்றும் எழுத்தறிவுத் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டன என்கிறார் இவர்.

## எங்களுடைய மாவட்ட அவென்யூக் குழுக்களில் ரோடராக்டர்கள் இடம்பெறுகிறார்கள்



**சுனில் மெஹ்ரா**
**பேக்கிங் பொருள் உற்பத்தியாளர், RC பாம்பே பையர், RID 3141**

இந்த மாவட்டத்தின் அடையாளத் திட்டங்களாகச் செயல்படுத்தக்கூடிய பல மெகா திட்டங்களை இவர் தொடங்கியுள்ளார். அன்னபூர்ணா திட்டத்தின் வழியாக, ஏழைக் குடும்பங்களுக்கு 700,000க்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை நாங்கள் வழங்கியுள்ளோம். பால்கார் என்ற தொலைதூரக் கிராமத்திலிருக்கும் 70 பழங்குடியினக் குடும்பங்கள் புல்லைத் தின்று வாழ்கிறார்கள் என்று கேள்விப்பட்டதும், நாங்கள் விரைந்து சென்று அவர்களுக்கு உதவினோம், மாதாந்திர மளிகைப் பொருட்கள், உணவுப் பொருட்களை வழங்கினோம் என்கிறார் சுனில் மெஹ்ரா.

போஷக் திட்டத்தின்கீழ், ஆதிவாசிக் கிராமங்களைச் சேர்ந்த, ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்ட 750 குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் புரதம் அடிப்படையிலான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. ஆஷியானா திட்டம், வீடில்லாத 27,000 பழங்குடியினக் குடும்பங்களுக்குத் தலா ரூ 250,000 செலவில் நல்ல வீடுகளை வழங்கவுள்ளது, இதன் முதல் கட்டத்தில் 5,000 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படும்.

ரோட்டரியன்கள் தாங்கள் பயன்படுத்தாத வீட்டுப் பொருட்களை (எடுத்துக்காட்டாக, அமர்பொருட்கள், எலக்ட்ரானிக் பொருட்கள், பிளாஸ்டிக் மற்றும் வேதிப்பொருட்கள் போன்றவை) ஒரு நிறுவனத்துக்கு வழங்கிப் பணம் திரட்டி அது அந்த உறுப்பினருடைய கணக்கின்கீழ் TRFக்கு வழங்கப்படும்.

இந்த மாவட்டம் ஒரு CSR இணையக் கருத்தரங்கை நடத்தியது, இதில் 5,000 நிறுவனங்கள் ரோட்டரி திட்டங்களைப் பார்த்துப் புரிந்துகொண்டன.

பால்கரில் 40 தடுப்பணைகளைக் கட்டத் திட்டமிட்டுள்ளது, இதன் மூலம், விவசாயத்தைச் சார்ந்துள்ள 25,000 குடும்பங்கள் பலன் பெறும்.

ஜூலை மாதம் தொடங்கி, ஆறு புதிய ரோடராக்ட் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன, ரோடராக்டர்கள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான மாவட்ட அவென்யூக் குழுக்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தற்போது, இந்த மாவட்டத்தில் 111 ரோடராக்ட் சங்கங்கள் உள்ளன, 4,800 ரோடராக்டர்கள் உள்ளார்கள்.

உறுப்பினர் எண்ணிக்கையை 10 சதவிகிதம் உயர்த்த திட்டமிட்டுள்ளார் மெஹ்ரா. இந்த ஆண்டு TRF வழங்கலுக்கு 3.5 மில்லியன் டாலர் இலக்கு நிர்ணயித்துள்ளார் மெஹ்ரா.

## ‘‘நாங்கள் உலகின் மிகச் சிறந்த RI மாவட்டமாக விரும்புகிறோம்’’



**B L நாகேந்திர பிரசாத்**
**ரியல் எஸ்டேட் துறை வல்லுனர், RC பெங்களூர் பீன்யா, RID 3190**

உறுப்பினர் எண்ணிக்கை, TRF வழங்கலில் உலகிலேயே மிகச் சிறந்த மாவட்டமாக ஆவதற்கான எல்லா முயற்சிகளையும் நாங்கள் எடுத்துவருகிறோம் என்கிறார் நாகேந்திர பிரசாத். இவர் இந்த ஆண்டில் 2,500 புதிய உறுப்பினர்களையும் 25 புதிய சங்கங்களையும் சேர்க்க விரும்புகிறார். நாங்கள் இதுவரை 1,100 புதிய உறுப்பினர்கள், 10 புதிய சங்கங்கள் மற்றும் மூன்று செயற்கைக்கோள் சங்கங்களைச் சேர்த்துள்ளோம்.

ஜூலை மாதத்தில் தொடங்கி மரம் நடும் திட்டம் நடைபெற்றுவருகிறது. சென்ற ஆண்டு நாங்கள் 28 லட்சம் மரக்கன்றுகளை நட்டோம், இந்த ஆண்டு அதைவிடக் கூடுதலான மரக்கன்றுகளை நட இயலும் என்று நம்புகிறோம்’’ என்கிறார் இவர்.

KSRTC இவர்களுக்கு ஒரு பேருந்தை நன்கொடையாக அளித்துள்ளது, அதைச் சிறப்பு மருத்துவ வண்டியாக மாற்றி, மாநிலம்முழுவதும் கோவிட் பரிசோதனைகள் நடத்தப்படும். கிராமப்புறப் பகுதிகளில் நடமாடும் நூலகங்கள், மருந்தகங்களை இயக்குவதற்காக இன்னும் 10 பேருந்துகளை வாங்குவதுபற்றி நாங்கள் KSRTCயுடன் பேசி வருகிறோம்’’ என்கிறார் பிரசாத்.

ரூ.1.24 கோடி மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக, BGS மருத்துவமனையில் ஓர் உயர் தொழில்நுட்ப ரத்த வங்கி அமைக்கப்படும்.

இந்த மாவட்டமும், கர்நாடகச் சிறு தொழில் நிறுவனங்கள் அமைப்பும் சேர்ந்து, தையல், இயந்திரக் கருவிகள் போன்ற பலவிதமான துறைகளில் தொழில் சார்ந்த பயிற்சியை வழங்க உள்ளன. வேலையில்லாத இளைஞர்களுக்கு இணையத்தின் வழியாகத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குவோம். இந்தப் பயிற்சி, தேவையுள்ள மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்’’ என்றார் அவர்.

இம்மாவட்டம் இது வரை ஐந்து AKS உறுப்பினர்களை அடையாளம் கண்டுள்ளது, நாங்கள் TRF வழங்கலுக்கு $5 மில்லியன் இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்கிறார் இவர்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# சேலத்தில் மியாவகி காட்டை உருவாக்கிய ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

சமூகக் காடுகளைப் பெரிய அளவில் ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாட்டிலுள்ள சேலம், RID 2982ஐச் சேர்ந்த 30 ரோட்டரி சங்கங்கள் ஒரு நகரப் பஞ்சாயத்தின்கீழுள்ள ஒரு குடியிருப்புப் பகுதியின் நடுவில் ஓர் ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பில் ஒரு மியாவகி காட்டை உருவாக்குவதற்காக 15,000க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டுள்ளன.

இந்தக் காட்டின் எல்லைப் பகுதி களில் நடப்பதற்கான பாதை ஒன்றும் இருக்கும். ரூ.2 லட்சம் செலவில் நடைபெறும் இந்த மியாவகி திட்டம், இப்பகுதியின் நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தும், 200 குடும்பங்களுக்கு ஒரு பாதுகாப்பான நிலத்தடி நீர் மூலத்தை அளிக்கும்'' என்றார் RC சேலம் சவுத்தின் தலைவர் R மங்களேஷ்வர். இந்தத் திட்டம், சேலம் வனத்துறை, கன்னங்குறிச்சி நகரப் பஞ்சாயத்து மற்றும் G2 நர்சரி ஆதரவுடன் நடத்தப்படுகிறது.

மியாவகி என்பது, ஜப்பானைச் சேர்ந்த தாவரவியலாளரான அகிரா மியாவகியால் முன்னெடுக்கப்பட்ட ஓர் உத்தியாகும், இது அடர்ந்த, இயல்பான காடுகளைக் கட்டமைக்க உதவுகிறது. இதில், உள்ளூர் வகையைச் சேர்ந்த பல டஜன் மரக்கன்றுகள் ஒரே இடத்தில் நடப்படுகின்றன, முதல் மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு, இவற்றைப் பராமரிக்கவேண்டியிருக்காது.

DG K S வெங்கடேசன் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார், சேலம் பிரிவு வன அலுவலர் R முருகன், நகரப் பஞ்சாயத்தின் செயல்அலுவலர் S ஆறுமுகநாயனார் உடனிருந்தார்கள். இந்தத் தொடக்க விழாவுக்கு ஏற்பாடு செய்த ரோட்டரியன்கள், "பசுமைப் போராளி" என்ற பெயரில் புகழ்பெற்றுள்ள தொல்காப்பிய அரசு, C பாலகிருஷ்ணன், ஆறு உதவி ஆளுநர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள்.

இந்த நகரப் பஞ்சாயத்தில் இந்த மரம் நடும் விழாவைச் சேலம் சங்கங்கள் சேர்ந்து செயல்படுத்துகின்றன, இது இந்த மாவட்டத்தின் முதன்மைத் திட்டமான தசாவதாரம் என்பதன் கீழ் வருகிறது. இந்தத் தீவிரப் பசுமைத் திட்டம் இந்தக் கிராமத்தில் ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும்.■



# கும்பகோணத்தில் ரோட்டரி டயாலிஸிஸ் மையம்

ரோட்டரி செய்திக்குழு




PDG S *பிறையோன் மற்றும் ரோட்டரியினர் ரோட்டரி டயாலிஸிஸ் மையத்தில்.*

ரோட்டரி மாவட்டம் 2981 சார்பில் கும்பகோணத்தில் ரூ.24 லட்சம் செலவில் மூன்று கருவிகளுடன் ரோட்டரி “டயாலிஸிஸ்” மையம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டம் ஆஸ்திரேலியாவில் உள்ள RID 9820 மற்றும் TRF உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மையத்தை ஓராண்டுக்கு பராமரிப்பது தொடர்பாக ரோட்டரி சங்கம், சிட்டி யூனியன் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. பொது முடக்க காலத்தில் இந்த புதிய வசதி உள்ளூர் நோயாளிகள் தேவையில்லாமல் பயணம் செய்வதையும், பணம் செலவழிப்பதையும் இதன் மூலம் தவிர்க்க முடியும் என்றார் PDG S பிறையோன். அவர்தான் ரோட்டரி அறக்கட்டளை மூலம் சர்வதேச நிதியுதவி கிடைக்க முக்கிய காரணமாக இருந்தவர்.



PDG *பிறையோன் ஒரு டயாலிஸிஸ் இயந்திரத்தை துவக்கி வைக்கிறார்.*

இந்த மையத்தை சிட்டி யூனியன் வங்கி ரூ.30 லட்சம் செலவில் கட்டிக்கொடுத்துள்ளதுடன், RO கருவி, கட்டில் மற்றும் நாற்காலி, மேஜை வாங்க ரூ.8.5 லட்சம் வரை கூடுதலாக செலவிட்டுள்ளது.

இந்த மையத்தை சிட்டி யூனியன் வங்கி பராமரித்து மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்களுக்கான மாத ஊதியம் ரூ.1.25 லட்சம் வழங்கவும் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

IPDG மணிமாறன், PDG ரமேஷ் பாபு, DG பாலாஜி பாபு மற்றும் DRFC பாலசுந்தரம் ஆகியோர் இத்திட்டத்தை நிறைவேற்ற உதவிகரமாக இருந்தனர். ■

ADVT.

Rotary District 2982
People of Action

Rotary Opens Opportunities

Trailblazers

TEAM ACHIEVERS



Rtn. K.S. Venkatesan
Dist. Governor
RID 2982

# Rotary District 2982

## Literacy Project during the pandemic challenge



Rtn. A.Venkateshwara Gupta
Dist. Literacy Comittee Chairman

**கல்லாமை இல்லாமை ஆக்கிடுவோம்**
**அனைவருக்கும் தரமான கல்வி அளித்திடுவோம்**

கிராமப்புற பள்ளிகளை மேம்படுத்த பெரியார் பல்கலைகழகத்துடன் MOU.
கிராமப்புற பள்ளிகளை நோக்கி SMART TV வழங்கிடும் ரோட்டரி
வாசிக்க, நேசிக்க ரோட்டரி நூலகங்கள். கற்றதை பெற்றதை ஆற்றலாக்கி ஒவ்வொரு
குடும்பமும் மகிழ்வான வாழ்வு வாழ உதவி மகிழ்வோம்.

**அன்புடன் : ஆளுநர், கல்விக்குழு மற்றும் 2982 ரோட்டரி மாவட்ட உறுப்பினர்கள்**


Dr.P.Kolandaivel
Vice Chancellor, Periyar University


E-Learning Android Smart TV Distribution, Salem Dt.




Vice Chancellor, Periyar University Motivating Teachers




Proud Moment: MOU with Periyar University
Marching towards 100% literacy 2025


Honouring Dist.Trainer




E-Learning Android Smart TV Distribution, Namakkal Dt.





## Our proud moments this year

- Thanks to all presidents, assistant governors for the excellent motivation and support for literacy promotion.
- Our Teachers Support team led by Dr Prof Venkatachalapathy plans to train 1,000 teachers. Now we have made over 310 teachers happy.
- Our E-learning team plans 500 android Smart TV to rural schools. Chair C Pramodh and co-chair TN Gunavel are working with DG K S Venkatesan, DLCC A Venkateshwara Gupta and our district team has distributed 72 TVs to rural government schools. The cost of the e-learning kits, Rs 7.92 lakh, was contributed by the DG, DLCC, AGs, club presidents and the prime sponsors.
- The Adult Literacy Chair M Kangeyan has made a workbook to teach the adults.
- Child Development Chair S Jeevitha visits places to motivate children to go back to school.
- Our Happy Schools Chair N P Ramaswamy and his team interacts with the HMs of needy schools to make the schools Happy Schools. Our goal this year is to create 150 Happy Schools.
- Our Skills Development Chair M Ayyapparaj gives online training and is creating 345 new enterpreneurs and professionals.
- We organised a literacy seminar, *Karka Kasadara*, led by DG Venkatesan, and it served as a huge inspiration for our club presidents and Rotarians.
- As DLCC I am happy to share these information. Our goal is to march towards 100 percent literacy by 2025
- I am very much thankful to our beloved DG, college of governors, assistant governors, club presidents, the district team and our prime sponsors.

Rotary District 2982
Rotary Opens Opportunities
T-E-A-C-H & SKILL DEVELOPMENT

**Prime Sponsors:**

SRV No : 1 SUPER RICE
Excel Group Institutions
Dharan Hospital
Smart Hamsrigiri Mall
grip Grip Strapping

# பல மாவட்டங்கள் கலந்துகொண்ட ரோட்டரி வளர்ச்சிக் கருத்தரங்கம்

ரோட்டரி செய்திக்குழு

கல்கத்தா ரெனாய்ஸ்ஸன்ஸ் மற்றும் கல்கத்தா சென்டெனரி ரோட்டரி சங்கங்கள், RID 3291, ஆகியவை, தில்லி எலைட் (RID 3011), சோலாப்பூர் (3132) மற்றும் பேளூர் தார்வாட் (3170) ஆகியவற்றுடன் இணைந்து, பல மாவட்டங்கள் பங்குபெற்ற ஒரு மெய்நிகர் உறுப்பினர் கருத்தரங்கத்துக்கு ஏற்பாடு செய்திருந்தன. ஐந்து சங்கங்களைச் சேர்ந்த பதினான்கு புதிய உறுப்பினர்கள் (அதில் நான்கு பேர் பெண்கள்) இந்தச் சந்திப்பில் அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

PDGகள் ஷ்யாமாஸ்ரீ சென் (3291), சந்திரசேகர் கோல்வேகர் (3142) மற்றும் சுனில் ஜக்காரியா (3201) ஆகியோர் சுமார் 100 பார்வையாளர்களிடையே பேசினார்கள். சிறப்பு விருந்தினரான PDG (3291) தெபசிஷ் மித்ரா, பெண் உறுப்பினர்களை இன்னும் கூடுதலாக அறிமுகப்படுத்தும் படி பார்வையாளர்களைக் கேட்டுக்கொண்டார். “இன்றைய சூழ்நிலையில் ரோட்டரி சங்கங்கள் சந்திக்கும் மிகப் பெரிய சவால் நிறைந்த பணிகள், புதிய உறுப்பினர்களை நேரில் சந்திக்காமல் ஒரு மெய்நிகர் தளத்தில் அவர்களைச் சேர்த்தல், ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ளுதல்’’ என்றார் அவர்.



ஒத்த மனம் கொண்ட பண்பாட்டுப் பார்வை உள்ள, பலவிதமான பின்னணிகளைக் கொண்ட மக்களைச் சேருங்கள்; தாங்கள் வரவேற்கப்படுகிறோம் என்று அவர்களை உணரச் செய்யுங்கள், அவர்களைப் பணிகளில் ஈடுபடுத்துங்கள்’’ என்றார் ஷ்யாமாஸ்ரீ.

உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதுபற்றிப் ஜக்காரியா பேசினார். இளம் உறுப்பினர்களை ஈர்ப்பது, ரோட்டரி கூட்டங்களை நெகிழ்வுள்ளவையாக்குவது ஆகியவற்றுக்கான தேவையைக் கோல்வேகர் வலியுறுத்தினார்.

DGக்கள் சுதீப் முகர்ஜி (RID 3291), ஹரீஷ் மோத்வானி (3132), DGE பிரபீர் சாட்டர்ஜீ (3291) மற்றும் DGN ராஜ சேகர் ரெட்டி (RID 3150) ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். ■

# பிரேசில், நைஜீரியாவைச் சேர்ந்த இளைஞர்களை ஈர்த்த மெய்நிகர் RYLA



RIDகள் 3132, 3211 மற்றும் 3212ஐ சேர்ந்த, 16 முதல் 23 வயது கொண்ட 350க்கும் மேற்பட்ட இன்டராக்டர்கள் மற்றும் இளம் தொழில் வல்லுனர்களுக்கான இரண்டு நாள், பல மாவட்ட, மெய்நிகர் RYLA ஒன்று நடைபெற்றது. DGகள் ஹரீஷ் மொத்வானி, தாமஸ் வவனிக்குன்னெல் மற்றும் PNB முருகதாஸ் ஆகியோர் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டினார்கள்.

தொடக்க நிகழ்ச்சியில் PDG K A குரியச்சன் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார், RIDE A S வெங்கடேஷ் இளைஞர்களிடையே பேசினார். பிரேசில், நைஜீரியாவைச் சேர்ந்த சுமார் 13,800 மாணவர்கள், தொழில் வல்லுனர்களும் இந்த இணைய நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்’’ என்றார் RID 3132ன் மாவட்ட இன்டராக்ட் தலைவர் பிந்து ஷிர்சத்.பொழுது போக்கு நிகழ்ச்சிகள் இளைஞர்களுடைய திறமையை வெளிச்சம் போட்டுக் காண்பித்தன, களச் சூழலை நடித்துக் காட்டுவதற்காக இணைய விளையாட்டுகள் நடத்தப்பட்டன. ■







# District Wise TRF Contributions as on August 2020

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Others funds | Total Contributions |
|---|---|---|---|---|---|
| | India | | | | |
| 2981 | 15,670 | 1,943 | 5,000 | 0 | 22,613 |
| 2982 | 2,806 | 1,379 | 500 | 0 | 4,685 |
| 3000 | 2,544 | 0 | 10 | 0 | 2,554 |
| 3011 | 9,236 | 100 | 6,667 | 35,481 | 51,484 |
| 3012 | 9,388 | 0 | 0 | 3,079 | 12,467 |
| 3020 | 37,066 | 5,240 | 0 | 0 | 42,306 |
| 3030 | (4,827) | 1,030 | 0 | 62,282 | 58,486 |
| 3040 | 343 | 33 | 0 | 50 | 427 |
| 3053 | 4,132 | 100 | 0 | 60,668 | 64,899 |
| 3054 | 6,227 | 110 | 0 | 21,117 | 27,453 |
| 3060 | 11,033 | (1,145) | 1,313 | 52,500 | 63,701 |
| 3070 | 1,455 | 0 | 0 | 11,108 | 12,563 |
| 3080 | 10,044 | 2,578 | 0 | 0 | 12,623 |
| 3090 | 10,108 | 0 | 0 | (736) | 9,372 |
| 3100 | 1,050 | 0 | 0 | 0 | 1,050 |
| 3110 | 9,170 | 0 | 0 | 0 | 9,170 |
| 3120 | 0 | 1,769 | 0 | (1,769) | 0 |
| 3131 | 10,187 | 1,350 | 0 | 59,360 | 70,897 |
| 3132 | 989 | 27 | 0 | 307 | 1,322 |
| 3141 | 130,639 | 200 | 1,000 | 76,129 | 207,967 |
| 3142 | 44,024 | 4,680 | 0 | 8,259 | 56,964 |
| 3150 | (4,306) | 200 | 9,333 | 4,483 | 9,710 |
| 3160 | 2,537 | 5,188 | 0 | 0 | 7,725 |
| 3170 | 3,325 | 655 | 100 | 66,233 | 70,313 |
| 3181 | 9,789 | 111 | 0 | 4,050 | 13,950 |
| 3182 | 2,451 | 0 | 0 | 1,050 | 3,501 |
| 3190 | 15,561 | 375 | 25,000 | 42,078 | 83,013 |
| 3201 | 5,448 | 1,067 | 0 | 23,142 | 29,657 |
| 3202 | 13,150 | 1,437 | 0 | 10,167 | 24,754 |
| 3211 | 740 | 7 | 0 | 12,954 | 13,701 |
| 3212 | 4,163 | 6,226 | 14 | 3,616 | 14,020 |
| 3231 | (520) | 0 | 0 | 1,167 | 647 |
| 3232 | (3,666) | 806 | 0 | 65,589 | 62,729 |
| 3240 | 9,090 | 2,964 | 0 | 0 | 12,053 |
| 3250 | 1,945 | 187 | 0 | 93 | 2,225 |
| 3261 | 250 | 0 | 0 | 0 | 250 |
| 3262 | 1,528 | 1,067 | 0 | 0 | 2,595 |
| 3291 | 5,077 | 0 | 0 | 10,750 | 15,827 |
| **India Total** | **377,847** | **39,684** | **48,937** | **633,207** | **1,099,675** |
| 3220 **Sri Lanka** | 4,467 | 5,071 | 0 | 5,428 | 14,966 |
| 3271 **Pakistan** | 1,006 | 1,000 | 0 | 22,100 | 24,106 |
| 3272 **Pakistan** | 3,835 | 7,436 | 0 | 0 | 11,271 |
| 3281 **Bangladesh** | 11,443 | 400 | 1,000 | 12,809 | 25,652 |
| 3282 **Bangladesh** | 5,300 | 100 | 0 | 2,970 | 8,370 |
| 3292 **Nepal** | 8,657 | 1,304 | 0 | 32,627 | 42,587 |
| **South Asia Total** | **412,556** | **54,995** | **49,937** | **709,140** | **1,226,627** |
| **World Total** | **15,321,049** | **2,503,546** | **3,119,300** | **5,240,180** | **26,184,075** |

Source: RI South Asia Office



Wordsworld

# Fiction's not just a figment of the imagination

**Sandhya Rao**

The best stories come from writers who reflect deeply upon the world and all its inhabitants and phenomena.

I have a young friend, Apuurva, who is as crazy about books as I am. The other day I messaged her and in the course of our chat exchange, mentioned that I was reading 'a fantastic book called *The Library Book* by Susan Orlean.'

Promptly she wrote back: 'Guess what? I'm reading the very same book now!'

Two friends, bookworms both, reading the same, rather out-of-the-way book at the same time, in two different places, Chennai and Goa! Who could imagine that! Truth is stranger than fiction! Which brings me to a passage in *The Library Book* — more about it in my next — about the history of a library in the US. Apparently, back in 1873, it was governed by all sorts of rules; one of them discouraged the reading of 'too many novels, lest they [readers] turn into what the association labelled "fiction fiends"…'! In 2020, I have no hesitation in urging you loud and clear to become 'fiction fiends'. You will find that fiction's a friend.

Stories spun out of a writer's imagination — and here I refer to the best writing, of which there is plenty, and not the trashy kind of writing, of which too there is plenty — create worlds in which readers can lose themselves. Sometimes, you feel that the character emerging from the novel or story is you and you think: how did this author know this about me? Or, this is exactly what I was thinking. Or, I knew this would happen. Or, really, I didn't know this would happen. Or, oh, so that's why he did this or she said that.

Rabindranath Tagore's *Nastanirh*, which became famous in its film version as *Charulata*, explores the loneliness and longing of a woman within a joint family. It's a theme far ahead of its times, intimately exploring the mind of a woman. Or, take Munshi Premchand's *Godaan*, considered by many to be the finest novel in Hindi ever written. Tackling themes such as caste discrimination, dreams and desire, gender, the indigent rural landscape, class exploitation, Premchand powerfully draws readers into the world he creates. The best works of fiction make you observe the world around you while simultaneously pressing you to look inward.

The key to fiction is 'compelling storytelling'. Once you are hooked, you are able to see things from other points of view thanks to the various characters or situations presented in the novel. You see how people evolve, how societies develop, since things happen over a period of time within the novel, even if it is just a day, as in the case of Ian McEwan's *Saturday*. The events described in the novel take place on just one day in London against the backdrop of a demonstration against the US invasion of Iraq. The central character, a neurosurgeon, is shown struggling to understand the meaning of his life in the context of a post-modern world. Although the action takes place over only one day, you the reader begin to see the larger picture, you begin to see things differently and even if some of the insights are troubling, they enrich your inner self. The best writers of






fiction enable you to unravel some mysteries of our undoubtedly complex lives.

Compare a history textbook with historical fiction. While the former is generally a litany of names, dates and events, the latter takes you bang into the middle of the action in the period in which the novel is set. Through plot and characters, you taste, smell, feel, see all that's happening in that time. Eras come alive in a tangible, unforgettable way. It's the same with general fiction. People and places, events and feelings reach out to you at an emotional level; you cannot but respond. Everything comes together to create a world that's palpable, even if it is a world of fantasy. Why else would so many love books such as *The Hitchhiker's Guide to the Galaxy* by Douglas Adams, a classic science fiction novel of great wit and insight. My niece, when she was in her teens, had this book in one hand at all times except, perhaps, when she was taking a bath. Why else would so many, young, old and middling, swear by Harry Potter? Many young hearts broke when Dan Radcliffe — and not themselves — was chosen to play the role in all seven films! Why, back in Victorian England, would people wait anxiously for the next instalment of *The Pickwick Papers* or *David Copperfield* or *A Tale of Two Cities*? First published serially, Dickens was devoured by readers who loved the way he wove contemporary events and issues into his plots and grew characters with nuanced personalities. They often saw themselves in what he wrote, the characters he created.

That's the magic of fiction. You can be anybody: a soldier, a singer, a scientist, a mother, a teacher… Through this experience of vicariously living the life of the character, you reap the benefits of deeper understanding and empathy. The magic of fiction is also the source of its power. Fiction also provides contexts. The context in Amitav Ghosh's *Ibis Trilogy*, for instance, is the opium trade between China and India. All that happens to the various individuals peopling the three novels — *Sea of Poppies, River of Smoke, Flood of Fire* — from merchants to rajas to lascars to slaves, is reason for or the consequence of the impact of the opium trade.

Perhaps the most important function of fiction is the way it allows us to engage with our feelings and, in the process, enrich our inner selves. According to Christine Seifert, reading literary fiction 'helps people develop empathy, theory of mind and critical thinking'. In an article published in the *Harvard Business Review* in March 2020, she says this is because the act of reading fiction strengthens the cognitive muscles that are essential for the development of EQ, emotional quotient. And a highly developed EQ is what, increasingly, organisations are looking for in their employees. She quotes the example of Joseph Badaracco, professor of Business Ethics at Harvard, who makes fiction titles integral to his course curriculum. She says that he believes that 'good literature presents characters with competing and often equally valid viewpoints.' This enables future business leaders 'to use an expanded ability to understand and respond to competing viewpoints.'




You need imagination to come up with and nurture ideas, and an open mind to make effective decisions, be they personal or professional. Reading fiction provides fuel for the imagination and broadens the mind — provided, of course, it is done willingly and regularly and primarily for the sheer joy of it.

Christine Seifert also quotes the experience of a not-for-profit organisation called Books@Work with getting participants in a workshop to read short stories and/or novels which they then discuss. It appears that this helped participants speak freely and in a more forthright manner as well as communicate more effectively. Finally, to quote a cognitive scientist, Maryanne Wolf: 'the quality of our reading' is 'an index to the quality of our thought'. In other words, better readers could be better thinkers and therefore become better leaders… That's a thought worth considering. The option's clear when next you have some time to spare: pick up a fiction title from your bookshelf or the library or the bookstore. Or borrow.

*The columnist is a children's writer and senior journalist.*

# புற்றுநோய் கண்டறியும் நடமாடும் வாகனம்

ரோட்டரி செய்திக்குழு

RID 3000 உடன் தொடர்புடைய கரூர் ரோட்டரி சங்கம் பெண்களுக்கு என நடமாடும் புற்றுநோய் கண்டறியும் மருத்துவ வசதியை ஏற்படுத்தியுள்ளது. ரூ.1.38 கோடி சர்வதேச நிதியுதவி மூலம் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.



*PDG P கோபாலகிருஷ்ணன் (இடது), PRID C பாஸ்கர் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் M R விஜயபாஸ்கர் புற்றுநோய் வாகனம் முன்.*

இத்திட்டத்துக்காக ஷோபிகாஇம்பெக்ஸ் மற்றும் திருச்சி, காவேரி சிறப்பு மருத்துவமனை இரண்டும் முறையே 30,400 டாலர் மற்றும் 40,000 டாலரை தங்கள் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது. இது தவிர ரோட்டரி மாவட்டம் 3000, 4490, 4310, 4590 மற்றும் 2770 ஆகியவற்றின் DDF பங்களிப்பு மற்றும் ஜப்பானில் உள்ள உராவா ரோட்டரி சங்கத்தின் நிதியுதவியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. TRF 73,636 டாலர் நிதியுதவி வழங்கியுள்ளது.

இந்த நவீன நடமாடும் மருத்துவ வசதியை PRID C பாஸ்கர் முன்னிலையில் மாநில போக்குவரத்து துறை அமைச்சர் M R விஜயபாஸ்கர் தொடங்கிவைத்தார். ■

# கொரோனா காத்திருப்பு கூடாரம்



*சட்டப்பேரவை உறுப்பினர் கமல் குப்தா RC ஹிஸார் நிருவிய காத்திருப்பு கூடாரத்தை திறந்து வைக்கிறார்.*

ஹரியாணா மாநிலம், ஹிஸாரில் உள்ள மஹாராஜா அகர்சென் சிவில் மருத்துவமனையில் கொரோனா பரிசோதனை செய்துகொள்வதற்காக காத்திருக்கும் வெளிநோயாளிகளின் பயன்பாட்டுக்காக RID 3090க்கு உட்பட்ட ஹிஸார் ரோட்டரி சங்கம் கூடாரம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த காத்திருப்பு கூடாரம் சுமார் 1600 சதுர அடி பரப்பளவில் அமைக்கப் பட்டுள்ளது. சமீபத்தில் ரோட்டரி சங்கத் தலைவர் மோகித் குப்தா, செயலர் ஆனந்த் பன்ஸால், பொருளாளர் ஆஷிஷ் கோயல், திட்டத்தின் தலைவர் Dr N K கேதார்பால் ஆகியோர் முன்னிலையில் ஹிஸார் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் இந்த கூடாரத்தை திறந்துவைத்தார். ரூ.2 லட்சம் மதிப்பிலான இத்திட்டம், மாவட்ட ஆளுநர் விஜய் அரோரா ஊக்கமளித்ததின் பேரில் செயல்படுத்தப்பட்டது. ■

## Rotary News Subscription Remittances

**You can pay the Rotary News / Rotary Samachar subscription online**

**Our Bank details:**

Bank : HDFC Bank
SB Account

Branch : Montieth Road
Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

**E-mail us following details:**

Name of club

President/secretary's name

Amount/date of transfer/UTR number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary Club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | : 1,186,144 |
| Clubs | : | 36,235 |
| Districts | : | 525 |
| Rotaractors | : | 203,537 |
| Clubs | : | 10,750 |
| Interactors | : | 345,023 |
| Clubs | : | 15,001 |
| RCC | : | 11,244 |

As on August 17, 2020

*Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019.

## Membership Summary

As on September 1, 2020

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians % | Rotaract Clubs | *Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 119 | 5,067 | 5.90 | 51 | 39 | 225 |
| 2982 | 72 | 3,130 | 6.39 | 85 | 96 | 56 |
| 3000 | 130 | 5,257 | 8.41 | 188 | 256 | 211 |
| 3011 | 105 | 4,113 | 25.94 | 57 | 90 | 35 |
| 3012 | 108 | 3,836 | 25.05 | 56 | 71 | 59 |
| 3020 | 73 | 4,358 | 6.08 | 54 | 155 | 351 |
| 3030 | 95 | 5,143 | 14.68 | 119 | 177 | 304 |
| 3040 | 92 | 2,237 | 11.98 | 41 | 52 | 147 |
| 3053 | 64 | 2,759 | 16.35 | 21 | 39 | 103 |
| 3054 | 134 | 6,281 | 19.61 | 86 | 144 | 524 |
| 3060 | 100 | 4,583 | 14.79 | 60 | 63 | 145 |
| 3070 | 114 | 3,432 | 17.10 | 48 | 20 | 59 |
| 3080 | 84 | 3,357 | 9.00 | 94 | 143 | 116 |
| 3090 | 79 | 2,393 | 7.94 | 42 | 9 | 122 |
| 3100 | 100 | 2,325 | 8.26 | 14 | 14 | 146 |
| 3110 | 135 | 3,741 | 8.93 | 29 | 7 | 105 |
| 3120 | 82 | 3,335 | 14.15 | 47 | 19 | 53 |
| 3131 | 138 | 5,237 | 21.33 | 113 | 178 | 117 |
| 3132 | 87 | 3,430 | 10.12 | 39 | 95 | 159 |
| 3141 | 105 | 5,593 | 24.42 | 125 | 141 | 93 |
| 3142 | 90 | 3,250 | 20.77 | 83 | 118 | 68 |
| 3150 | 88 | 3,472 | 10.54 | 61 | 122 | 117 |
| 3160 | 78 | 2,574 | 6.84 | 28 | 3 | 83 |
| 3170 | 133 | 5,725 | 13.59 | 84 | 204 | 169 |
| 3181 | 82 | 3,366 | 8.97 | 63 | 192 | 118 |
| 3182 | 83 | 3,153 | 8.18 | 49 | 103 | 98 |
| 3190 | 140 | 5,722 | 15.96 | 156 | 153 | 65 |
| 3201 | 145 | 5,658 | 8.29 | 109 | 72 | 52 |
| 3202 | 139 | 5,661 | 6.64 | 97 | 251 | 47 |
| 3211 | 144 | 4,613 | 7.05 | 8 | 24 | 132 |
| 3212 | 107 | 4,258 | 8.67 | 103 | 187 | 149 |
| 3231 | 100 | 3,956 | 12.11 | 53 | 81 | 419 |
| 3232 | 128 | 5,860 | 19.47 | 132 | 199 | 93 |
| 3240 | 92 | 3,169 | 13.57 | 53 | 393 | 197 |
| 3250 | 101 | 3,784 | 18.21 | 69 | 65 | 185 |
| 3261 | 75 | 2,703 | 16.13 | 20 | 21 | 43 |
| 3262 | 107 | 3,744 | 12.71 | 50 | 38 | 78 |
| 3291 | 157 | 3,745 | 20.85 | 93 | 88 | 621 |
| **India Total** | **4,005** | **154,020** | | **2,680** | **4,122** | **5,864** |
| 3220 | 71 | 1,933 | 14.69 | 85 | 125 | 74 |
| 3271 | 111 | 1,736 | 17.74 | 67 | 19 | 22 |
| 3272 | 155 | 1,838 | 17.52 | 53 | 15 | 43 |
| 3281 | 240 | 7,148 | 17.46 | 247 | 50 | 199 |
| 3282 | 160 | 4,135 | 10.86 | 179 | 39 | 46 |
| 3292 | 128 | 5,065 | 15.79 | 135 | 119 | 118 |
| **S Asia Total** | **4,870** | **175,875** | | **3,446** | **4,489** | **6,366** |

*Source: RI South Asia Office*

# முன்னோக்கி வாழ்தல்...

ஷீலா நம்பியார்

மனத்தளவில் நிலையாகவும் உடலளவில் கட்டுக்கோப்புடனும் வாழவேண்டிய நாட்கள் இவை. என்ன காரணம்?

20–40 ஆண்டுகளுக்குமுன் இருந்த உலகம் இப்போது இல்லை. அப்போதெல்லாம், பெரும்பாலான மக்கள் அரசியல் கூச்சல், அமுக்குக்கு வெளியில் நின்றார்கள், போர்கள் தொலைதூரப் போர்க்களத்தில் நடைபெற்றன, ஒருவேளை தற்கொலைகள் நடந்தால், நாம் எப்போதாவதுதான் அவற்றைக் கேள்விப்பட்டோம், அத்துடன், நம்முடைய அக்கம்பக்கத்தில் தொற்றுநோய்கள் பரவவில்லை. நம்மைச் சுற்றிச் சூரிய ஒளி பரவுகின்ற இடங்களை எண்ணி நாம் மன நிறைவு அடைந்தோம்... சுருக்கமாகச் சொன்னால், அனைத்து விஷயங்களும் அவற்றுக்கென்ன நியமிக்கப்பட்ட இடத்தில் இருந்தன.

இப்போது, இவையெல்லாம் மாறிவிட்டன. இன்றைக்கு, அனைத்தும் நம்முடைய TV திரையில் தோன்றுகின்றன. அனைத்துக் கொடுமைகளும் நம் வீட்டு வரவேற்பறைக்கு வருகின்றன.

தத்துவம் சொல்வது மிகவும் உண்மை: வாழ்க்கையை நாம் பின்னோக்கிக் கண்டு புரிந்துகொள்ள வேண்டும்'' என்று எழுதுகிறார் சோரென் கியெர்கெகார்ட். ஆனால், இன்னொரு கொள்கையை மறந்து விடக்கூடாது: அதை நாம் முன்னோக்கி வாழ வேண்டும் என்று அறிவார்ந்த சிந்தனையுடன் தொடர்ந்து கூறுகிறார். இதைச் செய்யவேண்டுமென்றால், நம்முடைய இதயங்கள், மனங்களில் உள்ள நிலையற்ற எதிர்வினை அலைகளை நாம் உண்மையாகவே சமநிலைப்படுத்தவேண்டும்.

### 8-நடை

நாம் எந்நேரமும் சோஃபாவில் சரிந்து கிடக்கிறோம், அல்லது, நம்முடைய இருக்கைகளில் பரந்து அமர்ந்திருக்கிறோம், நம்முடைய காதுகளின் நீட்சிகளைப்போல இயர்ஃபோன்களைப் பொருத்திக் கொண்டிருக்கிறோம், சுருக்கமாகச் சொன்னால், அமர்ந்திருக்கும் வாத்துகளைப்போல் இருக்கிறொம். வாத்துகள் 'க்வாக், க்வாக்' என்று சிறு சண்டை யிடுகின்றன, பின்னர் ஒன்றிலிருந்து ஒன்று விலகி நீந்துகின்றன, தங்கள் இறகுகளை விரைவாக அடித்து அழுத்தத்தை வெளிவிடுகின்றன. நாமும் கிட்டத்தட்ட அதேமாதிரி ஒரு வேலையைச் செய்கிறோம்: நம் அழுத்தத்தைக் குறைப்பதற்காக அறையில் முன்னும் பின்னும் நடக்கிறோம்.

ஆனால், இன்றைய தேவை என்னவென்றால், அந்த நடையில் ஒரு சிறு மாற்றம் வேண்டும். அதன் பெயர், 8-நடை, அதாவது, 8 என்கிற எண்ணைப்போல வளைந்து, நெளிந்து நடப்பது. இதற்கு நம்முடைய மனத்தின் கவனம் தேவைப்படுகிறது, அதன்மூலம், மிகவும் தூண்டப்பட்டுள்ள மனத்திற்கு வேலை கொடுத்து அமைதியாக்கலாம்.

இதைக் கடற்கரையில், பூங்காவில், வீட்டில், பணியிடத்தில் எங்கும் செய்யலாம். வீட்டுக்குள் செய்வதென்றால், இரண்டடி தொலைவில் இரண்டு நாற்காலிகளை வைத்துவிடுங்கள். இப்போது, ஒரு நாற்காலியைச் சுற்றி நடங்கள், பின்னர் குறுக்காகச் சென்று இன்னொரு நாற்காலியையும் சுற்றி நடங்கள், மீண்டும் குறுக்காகச் சென்று முதல் நாற்காலியைச் சுற்றி



நடங்கள், சுருக்கமாகச் சொன்னால், நடப்பதன்மூலம் 8 என்ற எண்ணை வரையுங்கள். முதலில், நாள்தோறும் ஐந்து நிமிடங்களுக்கு இதைச் செய்யுங்கள், பின்னர் 10...20...30 என்று முன்னேறுங்கள். நடக்கும் போது இயல்பாக மூச்சு விடுங்கள். இது நம்முடைய அழுத்தத்தை மிக நன்றாகச் சரிசெய்யும். மனத்தின் பீட்டா-அலைகள் இனிமையான ஆல்ஃபா-அலைகள் அதிர்வெண்ணுக்குக் குறைவதால், மனம் தளர்ந்து அமைதியாகிறது. இதை 14 நாட்களுக்குச் செய்யுங்கள், பின்னர், நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்று பாருங்கள்.

### மனத்தை மீட்டமைத்தல்

கெட்ட செய்திகள் மிகுந்த ஒலியுடனும் இடைவெளியின்றியும் அடிக்கடி தாக்கும்போது, நம்முடைய மன நிறைவு நிலை குறையலாம். உங்களுக்கு இந்தப் பிரச்னை உள்ளதா என்று அறியவேண்டுமென்றால், இவற்றைச் சரிபாருங்கள்:

★ நான் அடிக்கடி புகார் சொல்கிறேனா?

★ என்னால் சரியாகச் சுட்டிக்காட்ட இயலாத ஒன்றைப்பற்றித் திருப்தியின்றி உள்ளேனா?

★ நிகழ்காலத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, வருங்காலம் இருட்டாகத் தோன்றுகிறதா?

தனக்கு உதவ யாரும் இல்லை என்று உணர்தல், இருட்டாக உணர்தல் ஆகியவை நோயெதிர்ப்பாற்றல் அமைப்பை ஒடுக்கிவிடலாம், ஒவ்வாமைகள், மனச்சோர்வு, பிற குறைபாடுகளுக்கு வழிவகுக்கலாம். இந்தப் பிரச்னைகளிலிருந்து விலகியிருப்பதற்கும், உங்களுக்கான, உளவியல் அடிப்படையில் பாது காப்பான ஓர் இடத்தை உருவாக்கு வதற்கும் ஒரு மிகச் சிறந்த வழி, உங்கள் மனத்தை நிறைவை நோக்கி உணர்வுப்பூர்வமாக மீட்டமைத்தல்.

“மன நிறைவுதான் மிகுந்த மகிழ்ச்சிக்கு வழிவகுக்கிறது” என்றார் யோகாசனத்தின் தந்தையாகிய பதஞ்சலி. ஒலி மிகுந்த இன்றைய சூழல், மன நிறைவின்மையைக் கிளறிவிடுகிறது, சில நேரங்களில் அதை ஆபத்தான நிலைக்குக் கொண்டுசென்றுவிடுகிறது, இந்த நேரத்தில் நாம் நம்முடைய மனச் சமநிலையைத் தக்கவைத்துக் கொள்வது முக்கியம். அதற்கு நாம் செய்யவேண்டியது, நம்மிடம் எவ்வளவு உள்ளது என்கிற உறங்கிக்கிடக்கும் உணர்வை ஆழமாகச் சென்று தொடவேண்டும்.

பெருமை, பொறாமை, முடிவற்ற ஆசைகள் ஆகியவற்றையும், அவற்றுடன் தொடர்புடைய அனைத்து அழுத்தங்களையும் நீக்கினால், நம்மிடம் எவ்வளவு உள்ளது என்ற அடித்தளத்தைச் சென்றடைவது மிக எளிது. அதன் அமைதியான ஒளிக்கதிர்கள் நமக்குள் நிரம்ப அனுமதிக்கிறோம். இதுதான் மன நிறைவு.

மன நிறைவுக்குள் ஒளிந்திருக்கும் ரகசியங்களில் ஒன்று: வாழ்க்கை எப்படி இருக்கிறதோ அதே போல் அதை நேசியுங்கள், கூடுதலாக எதிர்பார்க்காதீர்கள், வாழ்க்கை உங்களை மகிழ்ச்சிப்படுத்தும்போது, சிரியுங்கள், வாழ்க்கைப் பாதை கரடுமுரடாக ஆனால், அதில் ஓடுவது சிரமமாக இருந்தால், பொறுமையை, குறையாத அக்கறையை அங்கு விரியுங்கள், வாழ்க்கையை அனுபவியுங்கள், ஏனெனில், என்றைக்காவது அந்த வாழ்க்கை இல்லாமல் போய்விடும்.

### நளினமான வழிகாட்டி.

மன நிறைவு என்பது, நம்மைச் சுற்றியுள்ள இரைச்சலை அமைதி யாக்குகிறது. கவனச்சிதறல் இல்லாமல் நம்மைச் சுற்றிப் பார்ப்பதற்கும், மிகுதியிலிருந்தும் அழகிலிருந்தும் மகிழ்ச்சியைப் பெறுவதற்கும் அனுமதிக்கிறது, இந்த முழுமையைச் சாத்தியமாக்கிய மிகச் சிறந்த அறிவின் சான்றும் பலனும் அதுதான். மன நிறைவு என்பது ஓர் உள் ஆற்றல், அது பல வழிகளில் நமக்கு நளினமாக வழிகாட்டுகிறது:

★ பிறர் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றிக் கவலைப்பட தேவையில்லை.

★ மிகுதியான சிந்தனை, அது நம்மைக் காக்கிறது. ஆகவே, அச்சம், மன முடக்கம் இல்லை.

★ சில நேரங்களில், நாம் செய்த ஒரு விஷயத்துக்காக நம்மை நாமே தேவையில்லாமல் தண்டித்து க்கொள்ளக்கூடும். அதை இது தடுக்கிறது. நாம் பிறர்மீது தீர்ப்புச் சொல்வதில்லை என்பதால்.

★ இது வேறுவிதமாக அமைந் திருக்கலாமே என்று நாம் உணர்கிற நேரங்களைக் கண்டறிய இது நமக்கு உதவுகிறது.

நாம் மன நிறைவோடு இருக்கும் போதும் சோகத்தை உணரலாம்.

★ இதன்மூலம் நமக்குக் கிடைக்கும் விஷயங்களிலேயே மிக அழகான ஒன்று, பிறர் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதைச் செய்யும்படி எப்போதும் ஊக்குவிக்கிற தன்மை நமக்குக் கிடைக்கிறது. போட்டி போடுதல், யார் உயர்ந்தவர் என்ற எண்ணம் போன்ற உணர்வுகளை மன நிறைவு நீக்கிவிடுகிறது.

இதன் ஆசிரியரை *sheelanambiar@gmail.com* என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம்.
*Website:www.drsheelanambiar.com*

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி.



# வறியவர்களின் பசியாற்ற உதவும் ரோட்டரி

கிரண் ஜெஹ்ரா



ராம சுப்பையா காலனியில் மக்களுக்கு சூடான உணவு பரிமாறப்படுகிறது.

நெல்லூருக்கு அருகில் காவாலியில் உள்ள ராம சுப்பையா காலனியில் வசிக்கும் ஏழை மக்கள், தங்களுக்கு வழங்கப்பட உள்ள சுவையான, சூடான மதிய உணவை பெறுவதற்காக பொறுமையாக காத்திருக்கிறார்கள். அன்றைய தினத்தின் மெனு கேசரி மற்றும் முட்டை பிரியாணி, ரைத்தா என்கிறார் காவாலி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் K கோபிகிருஷ்ண கானு.

ரோட்டரி மாவட்டம் 3160க்கு உட்பட்ட காவாலி ரோட்டரி சங்கம், கடந்த மார்ச் மாதம் முதல் 'ஒரு நாளைக்கு ஒரு உணவு' திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் அப்பகுதியில் உள்ள மூன்று குடிசைப் பகுதி காலனியைச் சேர்ந்த 350 குடும்பங்களைச் சேர்ந்த வர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மதிய உணவு பெறுபவர்களில் பெரும்பாலானோர் தினக்கூலித் தொழிலாளர்கள். பொது முடக்கம் தொடங்கியதிலிருந்தே அவர்களால் வேலைக்குச் செல்ல முடியவில்லை. மேலும் சிலருக்கு அவர்கள் பணி செய்யும் இடத்தில் ஊதியம் மறுக்கப்பட்டது. கையில் பணம் இல்லாத நிலையில் உணவும் சரிவர கிடைக்காமல் அவர்கள் அவதிப்பட்டு வந்தனர். அவர்களின் அவலநிலையைப் புரிந்துகொண்ட காவாலி ரோட்டரி சங்கம், அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திச் செய்வதில் கவனம் செலுத்தியது.

உணவுப் பொட்டலங்களுடன் காரில் சென்று நகரில் உள்ள பிச்சைக் காரர்கள் மற்றும் தெருவோர வாசி களுக்கும் வழங்கினோம். வயதான பெண்மணி ஒருவர் உணவுப் பொட்டலங்களை பெற்றுக்கொண்ட போது அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந் தோடியது. நாளைக்கும் இதே நேரத்தில் இங்கு வந்து உணவுப் பொட்டலம் வழங்குவீர்களா என்று அந்தப்பெண் தயக்கத்துடன் கேட்டது மனதை நெகிழவைத்தது என்று நினைவுகூர்ந்தார் கானு. பத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நெடுஞ்சாலையில் தாற்காலிக கூடாரம் அமைத்து தங்கியிருந்தனர். அவர்களை சங்க உறுப்பினர்கள் அழைத்துவந்து அரசுப் பள்ளியில் தங்கவைத்ததுடன் ஒருமாதத்துக்குத் தேவையான ரேஷன் பொருள்களையும் வழங்கினர். இதேபோல நகரில் உள்ள ஏழைகள் சுமார் 7 ஆயிரம் பேருக்கு காய்கறிகளும், ரேஷன் பொருள்களும் வழங்கப்பட்டன என்று கானு மேலும் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் முதல் சங்கம், தூய்மைப் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன் இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேலான நபர்களுக்கு ஆயுர்வேத மருந்துகள், முகக்கவசங்கள், கிருமிநாசினிகளை விநியோகித்துள்ளது. ஜூலை வரை எங்கள் சங்கம் சார்பில் கொரோனா தடுப்பு நிவாரணப் பணிகளுக்காக ரூ.24 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

காவாலிக்கு அருகில் உள்ள ஊரகப்பகுதிகளில் சங்கத்தின் சார்பில் 25-க்கும் மேற்பட்ட இலவச ஆயுர்வேத முகாம்களும் நடத்தப்பட்டுள்ளன என்றும் கானு தெரிவித்தார்.■

# On the racks




## Work Hard-ly

Author : **Monica Iyengar**
Publisher : **Rupa Publications**
Pages : **118; ₹170**

Divided into 13 chapters, the book discusses time management, team management, balancing professional and personal life, leadership qualities, women in the workplace, and more for the younger generation with a short attention span. In the corporate world, curb your enthusiasm and learn from the lazy, smooth-talking colleague how to tilt the system in your favour with tips from this book. Anecdotes of a crazy boss, nosey co-workers, and a clueless HR will leave you chuckling. For those who often wonder why the incompetent ones are doing better, this book will help in making you efficient and reduce work pressure.




## The Rape Trial

Author : **Bidisha Ghosal**
Publisher : **Notion Press**
Pages : **548; ₹555**

Beyond a courtroom drama this book narrates the story of Avni Rambha, a rape victim. Rapist Rahul Satyabhagi, son of a rich and powerful politician, is acquitted, despite having strong evidence against him. Rahul goes on to become the leader of a men's rights activist group. Eight years later, a video of Rahul obscenely describing the rape turns up on the internet. But no arrest happens. Even more powerful now, he decides to silence everyone involved in exposing him. Little does he know that he is going to meet Avni's friends Hitaishi and Amrutha, who have decided to punish him. Meanwhile, rapists in the city are being kidnapped, tortured and dumped on the streets. A team under DC Dixit investigate the gruesome torture of Rahul Satyabhagi. Are the three friends behind it?




## Burnt Sugar

Author : **Avni Doshi**
Publisher : **Hamish Hamilton**
Pages : **240; ₹1,407**

Longlisted for the Booker Prize 2020 this is a love story about love and betrayal between a mother and a daughter. Tara, a wild woman in her youth, abandons her loveless marriage to live in an ashram with her child Antara, and falls in love with a guru. Antara retells her tale about living at the ashram, and her suffering under her mother's self-centered version of self-actualisation. Now Tara is old and forgetful and Antara is tasked with taking care of her mother she never loved. This book talks about the change of roles from being a daughter to becoming a caregiver for an elderly mother and portrays the complicated feelings a caregiver can experience. The anger and helplessness that stems from the feeling of being inadequate in the role of a daughter to being taken for granted while the sick person is showered with understanding and pity, this book is packed with unsettling emotions.

Compiled by Kiran Zehra

## RC நன்னிலம் — RID 2981



ஆனைக்குப்பம் கிராமத்திலுள்ள அரசு தாய்மார்கள் மருத்துவமனை, PHCல் ரூ.60,000 செலவில் ஓர் RO நீர் தூய்மைப் படுத்தும் கருவி அமைக்கப்பட்டது.

## RC தில்லி மயூர் — RID 3012



யமுனா புஷ்டா என்ற சேரிக் குடியிருப்பிலுள்ள பன்ஃபூல் பள்ளியிலுள்ள குழந்தைகளுக்கு ரோட்டரியன்கள் எழுதுபொருட்களை வழங்கினார்கள்.

## RC சேலம் — RID 2982



இச்சங்கம், ரூ.75,000 மதிப்பு பொருட்களை சேலம் அரசு மருத்துவமனையிற்கு கோவிட் நோயாளிகளுக்கு உதவ PDG வேலாயுத ரவீந்திரன் மூலம் அளித்தது.

## RC டெவாஸ் — RID 3040



இச்சங்கம், RC சிங்கப்பூருடனான ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக ரூ.12 லட்சம் மதிப்புள்ள உபகரணங்களை மாவட்ட மருத்துவமனை, ஆயுஷ் துறை மற்றும் காவல்துறை அமைப்புகளுக்கு வழங்கியது.

## RC புதுக்கோட்டை சிட்டி — RID 3000



சங்கத் தலைவர் K ஆறுமுகம், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் A L மீனாட்சி சுந்தரம் அவர்களிடம், ENT செயல்பாடுகளுக் காக கருவிகளை நன்கொடையாக அளித்தார்.

## RC விசாகா போர்ட் சிட்டி — RID 3020



கோவிட் நோயாளிகளுக்கு வழங்குவதற்காக, வைட்டமின் மற்றும் மருந்துகளைக் கொண்ட 400 பொதிகளை நகராட்சிக் கழக ஆணையரிடம் சங்கம் வழங்கியது.

# செய்திகள்

## RC குவாலியர் — RID 3053



இச்சங்கம், ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக, 15 கிராமங்களுடைய குடிநீர், விவசாய மற்றும் கால்நடைத் தேவைகளை நிறைவு செய்கிற ஓர் அணையைப் புதுப்பித்தது.

## RC முசௌரி — RID 3080

ஐந்து பள்ளிகளைச் சேர்ந்த 650க்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைய வகுப்புகளில் கலந்துகொள்ள உதவுவதற்காக, அவர்களுக்கு நோட்டுப்புத்தகங்களும் பதிவேடுகளும் வழங்கப்பட்டன.



## RC ராஜ்கோட் கிரேட்டர் — RID 3060



ரதன்பூரிலுள்ள முதியோர் இல்லத்திலிருக்கும் 50 பெண்களுக்கு ரோட்டரியன்கள் முகக்கவசங்கள், கையுறைகளை வழங்கினார்கள்.

## RC ஃபரீத்கோட் — RID 3090

இச்சங்கம், ரோட்டரி சின்னத்துடன் கூடிய முகக்கவசங்களை, விற்பனையாளர்கள் மற்றும் கடைக் காரர்களுக்கு வழங்கியது, ஒரு கோவிட் பராமரிப்பு மையத்தில் பணியாற்றும் மருத்துவர்கள், ஊழியர்களுக்கு PPE பொதிகளை வழங்கியது.




## RC தசுயா கிரேட்டர் — RID 3070



போடாலில் உள்ள ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியின் மாணவர்களுக்கு மரக்கன்றுகள், எழுது பொருட்களையும், ரோட்டரியன்கள் வழங்கினார்கள்.

## RC வாய் — RID 3132

மாலேகாவ்ன் வட்டத்திலுள்ள ZP தொடக்கப் பள்ளியில் டிஜிட்டல் வகுப்பறை தொடங்கப்பட்டது. ரூ.40,000 மதிப்புள்ள இத்திட்டம், 1ம் வகுப்பிலிருந்து 7ம் வகுப்புவரை பயில்கிற 100 மாணவர்களுக்குப் பலனளிக்கும்.



## RC ஹிராநந்தானி எஸ்டேட் — RID 3141



இச்சங்கத்தின் உறுப்பினர்கள் தங்களுடைய அக்கம்பக்கத்தில் உள்ள கொரோனா போராளிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள், பரிசுப் பைகளை வழங்கிப் பெருமைப்படுத்தினர்.

## RC கோட்டா சிட்டி — RID 3182

ரோட்டரியன்கள் அரை ஏக்கர் தரிசு நிலத்தில் பயிரிட்டார்கள், அந்த நெல்லை ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நன்கொடையாக அளிக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.



## RC கதிரி — RID 3150



வீட்டிலேயே தனிமைப் படுத்தப்பட்டிருந்த 70 கோவிட் நோயாளிகளுக்கு, உள்ளூர் ஆட்சி மன்ற உறுப்பினர் மற்றும் நலப் பணியாளர்கள் முன்னிலையில் மருந்துகள், ஊட்டச் சத்து மிக்க உணவு வழங்கப்பட்டது.

## RI ©õÁmh® — 3190

DG நாகேந்திரப் பிரசாத் மற்றும் நோய்த் தடுப்புத் தலைவர் S ஜெயராமன் ஆகியோர், ரூ.40 லட்சம் மதிப்புள்ள கோவிட் பரிசோதனைக் கருவியை NIMHANS இயக்குநர் மருத்துவர் B N கங்காதரிடம் வழங்கினார்கள்.



## RI மாவட்டம் 3181



DG M ரங்கநாத் பட், தக்ஷிண கன்னடா மாவட்ட ஆணையர் சிந்து ரூபேஷிடம் ரூ.4 லட்சம் மதிப்புள்ள 3,000க்கும் மேற்பட்ட முகக்கவசங்கள், 60,000 கையுறைகளை வழங்கினார்.

## RC கோயம்பத்தூர் மெரிடியன் — RID 3201

இச்சங்கம், ஒன் கேர் மருத்துவமனையில் ஒரு நிரந்தர மரக்கன்று நிலையத்தைத் தொடங்கியது. மருத்துவமனைக்கு வருகிற மக்கள் தங்களுடைய பயன் பாட்டுக்காக மரக்கன்றுகளை எடுத்துச்செல்லலாம்.



# செய்திகள்

## RC திருப்பூர் செலிபிரேஷன் — RID 3202



இச்சங்கம், ஏற்காட்டிலுள்ள ஒரு பொதுநல மையத்துக்கு 150 படுக்கை விரிப்புகள், தலையணை உறைகளை நன்கொடையாக வழங்கியது.

## RC சிப்சாகர் — RID 3240

இச்சங்கம், நேர்வித நலன் திட்டத்தைப்பற்றிய ஓர் இணைய விழிப்புணர்வு உரையை நடத்தியது. சிப்சாகரில் உள்ள மாவட்டக் கோவிட் மருத்துவமனையிலுள்ள நோயாளிகளுக்கு ரோட்டரியன்கள் பழங்கள் வழங்கினார்கள்.



## RC திருநெல்வேலி டவுன் — RID 3212



இச்சங்கம், கண்பார்வைக் குறைபாடு கொண்டவர்களுக்கான ஆதரவற்றோர் இல்லம் ஒன்றுக்கு சேலைகள், இனிப்புகளை வழங்கியது. இந்த நன்கொடையை அளித்தவர், சங்க உறுப்பினரான STR காந்தி.

## RC பாலாசோர் ஆன் சீ — RID 3262

மத்திய அமைச்சர் பிரதாப் சந்திர சடங்கி, நீலகிரி உட்பிரிவு மருத்துவமனையில் குடிநீர் நிலையத்தை தொடங்கிவைத்தார். DG சௌம்யா ரஞ்சன் மிஷ்ரா இதில் கலந்துகொண்டார்கள்.



## RC சென்னை கன்னிமாரா — RID 3232



இச்சங்கம், நகர்ப்புறத்தில் “காடு செய்வோம்” என்ற திட்டமொன்றை நடத்திவருகிறது. ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அரசு நிலத்தில் 500 மரக்கன்றுகள் நடப்பட்டன. நகரப் பஞ்சாயத்துடன் இணைந்து இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

## RC டாலிகஞ் — RID 3291

இச்சங்கத்தின் உறுப்பினர்கள், சுந்தர்பன்ஸிலுள்ள மகேஷ்பூர் சேபாஷ்ரம் என்ற ஆதரவற்றோர் இல்லத்துக்கு மாத மளிகைச் சாமான்களை நன்கொடையாக அளித்தார்கள்.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி




*மத்திய சுகாதாரதுறை அமைச்சர் Dr ஹர்ஷ்வர்தன்.*

ஆகஸ்டில் INPPC ஏற்பாடு செய்த மெய்நிகர் தேசிய போலியோப்ளஸ் MR (தட்டம்மை மற்றும் ரூபெல்லா) நோக்குநிலை மற்றும் திட்டமிடல் சந்திப்பில் மத்திய நலத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன், IPPC தலைவர் மைக் மெக்கவர்ன், டாக்டர் சுனில் பாஹ்ல், WHO SEARO மற்றும் டாக்டர் ரிஜா ஆன்ட்ரியா மிஹான்டனிரினா, நோய்த்தடுப்புச் சிறப்பு வல்லுனர், UNICEF; TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன், RIDகள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி, RIPE சேகர் மேத்தா, அறங்காவலர் குலாம் வாஹன்வதி, INPPC தலைவர் தீபக் கபூர் மற்றும் INPPC ஆலோசகர் PRIP ராஜேந்திர சாபூ ஆகியோர் பங்கேற்றார்கள்.

மாவட்ட ரோட்டரி தலைவர்கள் இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் முயற்சியை வழிநடத்தவேண்டும், பன்னாட்டு நோய்ப்பரவல், முடக்கச் சூழலில் இடைக்காலக் கூடுதல் தடுப்பு மருந்து வழங்கலை மீண்டும் தொடங்குவதற்குத் தயாராகவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

## உலக இளம்பிள்ளைவாத நாள்

ரோட்டரி சங்கங்கள், ரோட்டரியின் உலக இளம்பிள்ளைவாத நாள் வளங்களைப் (https://www.endpolio.org/world-polio-day) பயன்படுத்தி, அந்த நாளில் (அக்டோபர் 24) இணைய/மெய்நிகர் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்தவேண்டும் என்று ஊக்குவிக்கப்படுகின்றன.

## ரோடராக்ட் விருது

ரோடராக்ட் வழங்கல் சான்றிதழ் என்பது, தனிப்பட்ட பரிசுகளின் மூலம் TRFஐத் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்று ரோடராக்டர்களை ஊக்குவிக்கும் ஒரு புதிய முன்னெடுப்பாகும். ஒரு சங்கத்தின் ஐந்து உறுப்பினர்கள் சேர்ந்து குறைந்தபட்சம் 50 பங்களித்தால், அந்தச் சங்கத்துக்கு இந்தச் சான்றிதழ் வழங்கப்படும்.

## ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும்

உலகெங்கும் வாழ்க்கைகளை மாற்றக்கூடிய, நீடித்திருக்கக்கூடிய திட்டங்களை ஆதரிப்பதற்கு அறக்கட்டளைக்கு உதவவேண்டும் என்று ஊக்குவிக்கிறது “ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும்” (EREY) திட்டம். நீங்கள் “என் ரோட்டரி”யின் ஆண்டு நிதி மற்றும் பகிர்ந்து கொள்ளுங்கள் பக்கத்தில் பல மேம்படுத்தப்பட்ட EREY வளங்களைக் காணலாம்.

## அதிகாரப்பூர்வத் தகவல் புத்தகம் 2020–21

உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் திட்டத்தில் பங்கேற்பாளர் நம்பி அளிக்கின்ற தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்காக, அதிகாரப்பூர்வத் தகவல் புத்தகத்தை அச்சிடுவதை நிறுத்திவிடலாம் என்று இயக்குநர் வாரியம் சென்ற ஆண்டு வாக்களித்தது. இந்தத் தகவல் புத்தகம் “என் ரோட்டரி”யில் உறுப்பினர்களுக்குக் கிடைக்கிறது, அச்சிடப்படுவதில்லை, அல்லது, எலக்ட்ரானிக் வடிவத்தில் தரவிறக்கக் கிடைப்பதில்லை.■

# கண் தானத்தை ஊக்குவித்தல்

ரோட்டரி செய்திக்குழு

விழிக்கொடை தொடர்பான விழிப்புணர்வை வளர்ப்பதற்காக, 1985லிருந்து ஒவ்வோராண்டும் ஆகஸ்ட் 25 முதல் செப்டம்பர் 8 வரை "தேசிய கண் தான இருவாரம்" கொண்டாடப்படுகிறது. சமீபத்தில், விழிக்கொடையை முன்னிறுத்துவதற்காக ஓர் இணையக் கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தது RID 3190ன் 'தவிர்க்கக்கூடிய பார்வைக்குறைபாட்டுக் (AB) குழு.'

ஹைதராபாதில் உள்ள L V பிரசாத் கண் சிகிச்சை அமைப்பின் நிறுவனத் தலைவரான மருத்துவர் G N ராவ் இந்தக் கூட்டத்தில் தலைமை உரை ஆற்றுகையில், USல் தான் கருவிழிப்படல (கார்னியா) அறுவைச் சிகிச்சை மருத்துவராகத் தொழில்முறையில் பணியாற்றிய தொடக்க ஆண்டுகளை நினைவுகூர்ந்தார். அப்போதெல்லாம் கார்னியா குறைவாகவே கிடைத் ததாலும், அதைச் சேமிக்கும் வசதிகள் இல்லாததாலும், கார்னியா மாற்றுச் சிகிச்சை நெருக்கடி அடிப்படையில் தான் செய்யப்பட்டது என்றார்.

1987ல் ஒரு கண் மருத்துவ மனையையும், 1989ல் ஒரு கண் வங்கியையும் அமைப்பதற்காக அவர் இந்தியாவுக்கு வந்தபோது, இங்கு விழிக்கொடை என்கிற சிந்தனையே இல்லை. கண் வங்கியின் முதல் ஆண்டில் அவரால் 10 கார்னியாக்களை மட்டுமே திரட்ட இயன்றது.

கண் மருத்துவமனைகளும், ரோட்டரி சங்கம், அரிமா சங்கம் போன்ற NGOக்களும், கண் தான கொள்கைக் கட்டுப் பாடுகளை உருவாக்கும்படியும், முக்கியமான இந்திய மருத்துவ மனைகளில் மருத்துவமனை அடிப் படையிலான கார்னியா பெறுதல் திட்டம் (HCRP) ஒன்றை நிதி ஆதரவுடன் செயல்படுத்தும்படியும் அரசாங்கத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்று ராவ் கேட்டுக் கொண்டார்.

குழுத் தலைவர் Dr M V ரவிக்குமார் வழிநடத்திய குழு உரையாடலில், சிவகாசியைச் சேர்ந்த மருத்துவர்



Dr G N *ராவ்,* L V *பிரசாத் கண்சிகிச்சை அமைப்பின் நிறுவனத் தலைவர்.*

J கணேஷ், தொட்டபல்லபுராவைச் சேர்ந்த குருதேவ் மற்றும் மருத்துவர் ஹரீஷ், ராஜஸ்தான் கண் வங்கி அமைப்பின் (EBSR) தலைவர் B L சர்மா மற்றும் பெங்களூரைச் சேர்ந்த நயன ஜோதி அறக்கட்டளை நிறுவன அறங்காவலர் S ஜெயராமன் ஆகியோர் பங்கேற்றார்கள்.

மருத்துவர் ஹரீஷும் அவருடைய மாமனாரான குருதேவும், 100,000 மக்கள் தொகை கொண்ட தொட்ட பல்லபுராவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல ஊக்கம் தரும் நிகழ்ச்சிகளின்மூலம் 1,460 கார்னியாக்களைத் திரட்டியுள்ளார்கள்.

ராஜஸ்தான் முழுவதும் ESBRன் கண் வங்கிகள் இருப்பதாகவும், கார்னியாவைத் திரட்டும் உறுப் பினர்களுக்கு அது பணம் வழங்கு வதாகவும், பின்னர் அந்தக் கார்னி யாக்களை ஏழைகளுக்கு இலவசமாக வழங்குவதாகவும் சர்மா கூறினார். முந்தைய 11 ஆண்டுகளில் மருத்துவர் கணேஷ் 14,000க்கும் மேற்பட்ட கார்னியாக்களைத் திரட்டியுள்ளார்.

A B குழுவின் ஓர் உறுப்பினரும், பார்வைக் குறைபாடு கொண்டவருமான பிரதீப் சுதர்ஷன், தன்னுடைய குடும்பத்தினர், நண்பர் களிடையே விழிக்கொடையை முன்னிறுத்திய தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.■



# முட்டாள்களைப்பற்றிப் பேசுவோம்

TCA ஸ்ரீனிவாச ராகவன்

சில நாட்களுக்குமுன்னால், டுவிட்டரில் நான் ஒரு குறிப்பைப் படித்தேன்: இந்த கொரோனா வைரஸால் ஒரு நன்மை உள்ளது: நம்மிடையே உள்ள முட்டாள்களை அடையாளம் காண அது உதவியுள்ளது. இதைப் படித்த போது, ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் நான் முன்வைத்த ஒரு கோட்பாடு என் நினைவுக்கு வந்தது. அப்போது ஓர் அமைச்சர் உண்மையிலேயே முட்டாள்தனமான குறிப்பைத் தெரிவித்தார் என்று நான் படித்திருந்தேன், அப்போது தான் இந்தக் கருத்தை வெளியிட்டேன்.

அந்த அமைச்சர் கூறியதைக் கேட்டதும், நான் முட்டாள்களைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன்: ஒரு நாட்டில் எத்தனை முட்டாள்கள் இருக்கலாம்? அதற்கு ஏதும் குறைந்தபட்ச வரம்பு உண்டா? அதற்கு ஏதும் அதிகபட்ச வரம்பு உண்டா? அந்த எண் ஒரு மாறிலியா?

இயல்பு சார்ந்த அறிவியல் மற்றும் கணக்கு ஆகிய இரண்டிலும் மாறிலிகள் என்ற பொருட்கள் உள்ளன என்று நான் நினைத்தேன், எடுத்துக்காட்டாக, கணக்கில் pi, இயற்பியலில் பிளான்க் மாறிலி. மற்ற எவை மாறினாலும், இவற்றின் மதிப்பு ஒரேமாதிரிதான் இருக்கும். ஆகவே, சமூக அறிவியலிலும் மாறிலிகள் உண்டா என்று நான் நெடுநேரம் யோசித்தேன்.

பொருளாதாரத்துறை தன்னை ஓர் அறிவியலாகக் கருதிக்கொள்கிறது. அதில் எந்த மாறிலியும் இல்லை, அல்லது, அதில் ஒரே ஒரு மாறிலி தான் உள்ளது. ஆனால், அது ஓர் இயற்கை மாறிலி இல்லை. 1986ல் IMF அதைக் கண்டறிந்தது, என்ன நடந்தாலும் சரி, ஒரு நாட்டின் நிதிப் பற்றாக்குறை 3 சதவிகிதத்துக்கு மேல் போகக்கூடாது.

ஆனால், சமூகவியல், மானுடவியல், அரசியல் போன்ற பிற சமூக அறிவியல்களில் மனிதனால் உருவாக்கப்பட்ட மாறிலிகள்கூட இல்லை.

நான் ஒரு கேள்வியைக் கேட்கலானேன்: ஒரு பேருந்தில், ஒரு வகுப்பறையில், ஒரு கிராமத்தில், ஒரு செய்தித்தாளில், ஒரு நகரத்தில், ஒரு பெருநகரத்தில், மாவட்டத்தில், ஒரு ராணுவத்தில், ஒரு மாநிலத்தில் மற்றும் ஒரு நாட்டில் என எந்தவொரு மக்கள்தொகை மாதிரியை எடுத்துக் கொண்டாலும், அந்தக் குழுவில் உள்ள மொத்த மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, அங்குள்ள முட்டாள்களின் எண்ணிக்கை ஒரு மாறிலியா? இதற்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ஆகவே, நான் என்னுடைய சொந்தக் கோட்பாட்டை முன்வைத்தேன்.

அதற்காக, நான் முதலில் 'முட்டாள்' என்பதை வரையறுத்தேன். சரியாகத் தீர்மானமெடுக்க இயலாத ஒரு மனிதர்.

பொதுவாக, முட்டாள்கள் எப்போதும் பிறரிடமிருந்து ஒரு விலையைப் பெறுகிறார்கள். எடுத்துக் காட்டாக, போக்குவரத்து நிறுத்தத்தில் சிவப்பு விளக்கு வரும்போது நில்லாமல் செல்கிற முட்டாள், பெட்ரோல் போடும் இடத்தில் புகை பிடிக்கும் மூடன், விமானத்தில் ஏறவேண்டிய நேரத்தில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கிற முட்டாள், இப்போது, கூட்டமான ஓர் இடத்தில் முகக்கவசம் அணியாமல் அல்லது, பிறரிடமிருந்து விலகியிருத்தலைப் பின்பற்றாமலிருப்பது. இப்படிப் பல முட்டாள்களை நாம் நாள்தோறும் காண்கிறோம்.

எந்தவொரு மக்கள் குழுவிலும் இப்படிப்பட்ட மக்களுடைய எண்ணிக்கை ஐந்து சதவிகிதத்துக்கு மேல் இருக்காது என்று வைத்துக் கொண்டால் (உண்மையில் அது அநேகமாக 10 சதவிகிதத்துக்கு அருகில் இருக்கும்) இந்தியாவில் 70 மில்லியன் முட்டாள்கள் உள்ளார்கள். ஒருவேளை, 10 சதவிகிதம் என்று வைத்துக்கொண்டால், 140 மில்லியன் முட்டாள்கள், அது பிரிட்டனுடைய மக்கள்தொகையைப்போல் இருமடங்காகும்!

இப்போது, இதைப்பற்றிச் சிந்தியுங்கள்: இந்தியாவின் 70 மில்லியன் முட்டாள்களில் வெறும் ஒரு சதவிகிதத்தினர் அரசாங்கத்தில் (பாராளுமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை) வேலைசெய்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால்கூட, சரியாகத் தீர்மானம் எடுக்க இயலாத, 700,000 மக்கள் மீதமுள்ள 1,400 மில்லியன் பேருடைய சார்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள்.

நாட்டையும் அதன் ஆட்சியாளர்களையும் விட்டு விடுவோம். நம்மைச் சுற்றிப் பார்த்தாலே போதும்... உங்கள் வீட்டு வளாகம் அல்லது அலுவலகம் அல்லது நீங்கள் ஏதோ விளையாட்டில் பங்கேற்கிற உங்கள் குழு அல்லது நீங்கள் வண்டி ஓட்டும் சாலை... எங்கும் எப்போதும் ஒரு மாறிலி எண்ணிக்கையிலான முட்டாள்கள் இருப்பார்கள், அறிவுக்குப் பொருந்தாமல் செயல்படுவார்கள்.

இதைச் சரிசெய்வதற்கு நம்மால் ஏதேனும் செய்ய இயலுமா? எதையும் செய்ய இயலாது. ஏனெனில், அது ஒரு மாறிலி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.■

# ரோட்டரி செய்தித் துளிகள்




## சுவிட்சர்லாந்தில் கோகோ மழை!

சுவிட்சர்லாந்து நாட்டின் ஓல்டன் நகரில் உள்ள லிண்ட் ஸ்பரங்லி என்னும் சாக்லேட் தயாரிப்புத் தொழிற்சாலை பகுதியில் பலத்த சூறைக்காற்று வீசியதில் அந்த ஆலையில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த கோகோ பவுடர்கள் காற்றில் பறந்து பனிமழையாகப் பொழிந்தது. கார்களின் மேற்பகுதியிலும், ஜன்னல்களின் மேற்கூரைகளிலும் கோகோ துகள்கள் தூசிபோல் படிந்தன. இந்தக் காட்சிகள் சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்டன. வானத்திலிருந்து சாக்லேட் மழை பொழியும் என்று சொல்வதுண்டு. அந்தக்கனவு நனவாகிவிட்டது என்று ஒருவர் டுவீட் செய்திருந்தார். தொழிற்சாலையின் வென்டிலேட்டரில் ஏற்பட்ட கோளாறுதான் இவற்றுக்கு காரணம் என தெரியவந்தவுடன் அது சரிசெய்யப்பட்டது.



## உண்மையான அன்பு!

கர்நாடக மாநிலம், கொப்பலில் தொழிலதிபர் சீனிவாச மூர்த்தி சமீபத்தில் புதிதாக வீடுகட்டி கிரஹப்பிரவேசம் செய்தார். அவரின் மனைவி மாதவி, சோபாவில் அமர்ந்து கொண்டு அனைவரையும் வரவேற்றதைக் கண்டு திகைத்தனர். ஏனெனில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் அவரது மனைவி மாதவி கார் விபத்தில் பலியானார். புது வீடுகட்டி குடியேற வேண்டும் என்பது மாதவியின் கனவாக இருந்தது. இப்போது புதுவீடு கட்டப்பட்ட நிலையில் மாதவி இல்லாத குறையைப் போக்க தொழிலதிபர் சீனிவாச மூர்த்தி, சிற்பக்கலைஞர்கள் மூலம் சிலிக்கானில் மாதவியின் முழு உருவத்தை சிலையாக செய்து வீட்டில் வைத்திருந்தார். புதிய வீட்டில் மனைவி இல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்காக இப்படி ஒரு சிலையை வைத்தேன். இனி அவர் எங்களுடன் இருப்பார் என்றார் சீனிவாச மூர்த்தி.

## மனித ஏ.டி.எம்.



இந்திய தபால்துறை, தங்களது ஊழியர்கள் மூலம் வீடுகளுக்குச் சென்றே பணம் வழங்கும் புதிய சேவையை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதி கொரோனாவை கட்டுப் படுத்த போடப்பட்ட பொது முடக்கத்துக்கு முன்னரே அறிமுகமானது. இதன் மூலம் ஆதார் இணைப்புடன்கூடி வங்கிக் கணக்கிலிருந்து ரூ.100 முதல் ரூ.10,000 வரை வாடிக்கை யாளர்கள் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்காக தபால் ஊழியர்கள் ரூ.60,000 வரை கையில் பணம் எடுத்துச் செல்லலாம். கை விரல் ரேகையை ஒப்பிட்டுப்பார்த்து உறுதி செய்வதற்காக கூடவே பயோமெட்ரிக் கருவியையும் இந்த ஊழியர்கள் எடுத்துச் செல்கின்றனர்.

## சாக்லேட் விநாயகர்!



பஞ்சாபைச் சேர்ந்த ஒருவர், தனது உணவகத்தில் 10 சமையல் கலைஞர்களின் உதவியுடன் 40 கிலோ எடையுள்ள விநாயகர் சிலையை முழுவதும் சாக்லேட் குழம்பினால் தயாரித்துள்ளார். விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாட இதுபோன்ற சுற்றுச்சூழல் பாதிப்பில்லாத விநாயகர் சிலையை 5வது ஆண்டாக தயாரித்துள்ளார். இவர் இப்படி என்றால் இந்தூரைச் சேர்ந்த நிதி ஷர்மாவும் சாக்லேட் விநாயகரை வடிவமைத்து தயாரித்துள்ளார். தனது திரிசூலத்தால் கொரோனா வைரஸை வதம் செய்வதுபோல் ஒரு விநாயகரை அவர் தயாரித்துள்ளார். இந்த சாக்லேட் விநாயகர்களை பாலில் விசர்ஜனம் செய்து அனைவருக்கும் சாக்லேட் கலந்த பாலை விநியோகிக்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.



## எதிர்பாராத கைவிலங்கு

இங்கிலாந்தில் நார்தாம்டன்ஷயரில் உள்ள ஒரு போலீஸ் அதிகாரி, புதிதாக வேலைக்குச் சேர்ந்த போலீஸாரிடம், குற்றவாளிகளுக்கு எப்படி கைவிலங்கு போடுவது என்பது குறித்து பயிற்சி அளித்தார். அப்போது எதிர்பாராத வகையில் அவரது கை, கைவிலங்குக்குள் சிக்கிக்கொண்டது. பின்னர் பக்கத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்துக்கு நடந்து சென்றார். அங்கு தீயணைப்பு வீரர்கள் வெட்டுக்கருவிகள் மூலம் கைவிலங்கை வெட்டியெடுத்து அவரை விடுவித்தனர். இந்த எதிர்பாராத விபத்து எனக்கு எந்த பீதியையும் ஏற்படுத்தவில்லை. மாறாக எனது செய்கை மக்களை சிரிக்கவைத்ததில் எனக்கு மகிழ்ச்சி தான் என்றார் அந்த போலீஸ் அதிகாரி. சோதனையான இந்த நேரத்தில் நான் ஒருவரின் முகத்தில் சிரிப்பை வரவழைத்ததன் மூலம் எனது வேலையை முடித்துவிட்டேன் என்று அவர் பின்னர் டுவீட் செய்திருந்தார்.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

# Not receiving your copy of Rotary News?

We at Rotary News Trust are trying our best at these challenging times to bring out *Rotary News* in time.

There is a huge disruption in postal services due to India locking down first in March, and several States continuing to lock down every now and then. Train movement has also been badly impacted. The result is a huge delay in many Rotarians across the country getting the magazine. That is why from the April 2020 issue onwards, we are sending complimentary e-version of the magazine to **ALL Rotarians**. But your print copies are also being sent.

As many of your club members are influential members of your communities, we request you to take the time and effort to lodge a strong complaint with your post office if you don't receive the magazine. At the same time, do write to us at ***rotarynews@rosaonline.org*** and tell us if you have not received the magazine.

Please avoid sweeping statements such as "nobody has received the magazine". When we do a cross-check, we often find only some members have missed getting their magazine.

**You can reach our Subscription chief Senthil Kumar on *senthil@rotarynewsonline.org***

**You can also call 044-42145666, ask for the subscription person in charge of your district, and lodge a complaint.**

| Subscription in charge | Districts numbers |
|---|---|
| **Kalpana** *kalpana@rotarynewsonline.org* | 2982, 3020, 3054, 3090, 3100, 3170, 3181, 3182, 3190, 3250, 3262 |
| **Sasikala** *sasi@rotarynewsonline.org* | 2981, 3012, 3110, 3120, 3141, 3142, 3201, 3211, 3212, 3261, 3291 |
| **Valli** *valli@rotarynewsonline.org* | 3000, 3030, 3060, 3070, 3080, 3131, 3132, 3232, 3240 |
| **Anuvarshini** *anu@rotarynewsonline.org* | 3011, 3040, 3053, 3150, 3160, 3202, 3231 |

**But above all, make sure of the following:**

1. You have paid your *Rotary News* dues to your club.
2. The club has sent the dues to Rotary News Trust.
3. Your name and full postal address, with the correct pincode, and preferably email and phone number, are given to us.